சுடர் 32
கதிர் 260
ஆடி 28ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை
13 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 48
இரண்டாம் பதிப்பு

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
ஜெர்மன் Rs 650/-
பிரான்ஸ் Rs 750/-
ParcelLk 021 2224838 / 021 4926024


## எஸ்ரிஎவ் மீது துப்பாக்கிச் சூடு

நீர்கொழும்பு, ஓக. 13
நீர்கொழும்பு, குறன பகுதியில் நேற்று மாலை சிறப்பு அதிரடிப் படையின் ஜீப் வண்டி மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஹைஏஸ் வான் ஒன்றில் >> 45

## 12 கிலோ கஞ்சா கடத்திய நபர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 13
12 கிலோ கிராம் கஞ்சாவுடன் பயணித்தவரை கொழும்பிலிருந்து வந்த சிறப்புப் பிரிவுப் பொலிஸார் இயக்கச்சியில் நேற்று >> 45

### வறட்சியின் தாக்கம்



பூநகரி தட்டுவன் கொட்டியை அண்மித்த கடற் பகுதியில் வறட்சியால் கால்நடைகள் தண்ணீருக்காக அலைகின்றன. (6)

புதிய அரசமைப்பு விடயத்தில்

# மைத்திரியின் அவசரமான தலையீட்டை கூட்டமைப்பு வலியுறுத்தும்

### சுதந்திரக் கட்சியை வழிக்கு கொண்டுவர முனைப்பு

கொழும்பு ஓக. 13
புதிய அரசமைப்பு முயற்சி தாமதமடைந்து வருவதால் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு புதிய அரசமைப்பு உருவாக்கத்தை விரைவுபடுத்துமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தவுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இதற்காக அவரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கட்சி கேட்டுள்ளது. எனினும் இதுவரை சந்திப்புக்கு நேரம் வழங்கப்படவில்லை.
"அரச தலைவரைச் சந்திப்பதற்கு நாம் ஏற்கனவே நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டிருந்தோம். இன்னும் கிடைக்கவில்லை. வடக்கில் ஏற்பட்ட அமைதியின்மை உள்பட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் அந்தச் சந்திப்பில் பேச எண்ணியுள்ளோம். அதேசமயத்தில் அரசமைப்பு உருவாக்கத்தில் அரச தலைவர் உடனடியாகத் தலையிடவேண்டும் என்றும் வலியுறுத்துவார்" என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்.
"யாழ்ப்பாணத்தில் தொடரும் அமைதியின்மை மற்றும் வழமைக்கு மாறான நிலமை தொடர்பில் பேசுவதற்கு நேரம் வழங்குமாறு கோரியிருந்தோம். சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனினும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை விரைவில் சந்திப்போம். அப்போது இந்த விடயத்தை இறுக்கமாக அவரிடம் எடுத்துரைப்பேன்" என றார் அவர்.
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டும் அதனை நாடாளுமன்றத்தில் முன்வைக்க முடியாத நிலையே இருக்கின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் >> 45



### ஈபிடிபி ஆதரவாளர் மிரட்டல்
## சுவரொட்டியால் உன்னிகிருஸ்ணனின் இசை நிகழ்ச்சி நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஓக. 13
ஈ.பி.டி.பி. ஆதரவாளர்களின் எதிர்ப்பு மற்றும் மிரட்டல் காரணமாக யாழ்ப்பாணத்தில் தான் நடத்த இருந்த இசை நிகழ்ச்சியைத் திடீரென நிறுத்தினார் தென்னிந்தியப் பாடகர் உன்னி கிருஸ்ணன். >> 45

## விஜயதாசவுக்கு மகிந்த ஆதரவு

கொழும்பு, ஓக. 13
தற்போதைய கூட்டு அரசின் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு தனது பெரும் ஆதரவைத் தெரிவித்து கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச. >> 45

## கடற்படை முன்னாள் தளபதி கரன்னகொட விரைவில் கைது

கொழும்பு ஓக. 13
இலங்கையின் தலைநகர் கொழும்பில் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைக்காக, கடற்படை முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட சில நாள்களுக்குள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்படவுள்ளார் என்று சிங்கள ஊடகமான 'ராவய' செய்தி வெளியிட்டது.
தலைநகரில் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் திருகோணமலை கன்சைட் முகாமில், சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டதை முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட அறிந்திருந்தார் என்று கொழும்பு கோட்டை நீதிவானுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த வியா >> 45

### முச்சந்தி முரளி



பிள்ளையள், பேரப்பிள்ளைகளையும் மக்கள் என்று சொல்கிற பழக்கம் இருக்குது தானே...

## சு.கவின் முடிவுக்கு மனோவும் ஆதரவு

கொழும்பு ஓக. 13
தற்போதுள்ள முறையிலேயே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் எனக் கோரியுள்ள அமைச்சர் மனோ கணேசன், 20ஆம் திருத்தத்தை எதிர்க்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவை வரவேற்றுள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் >> 45

## 20ஆவது திருத்தத்தை கூட்டமைப்பு ஆதரிக்காது

யாழ்ப்பாணம், ஓக. 13
அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை தற்போதைய வடிவத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது என்று தெரிவித்தார் அதன் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். சகல கட்சிகளும் இணங்கிக் கொண்ட வடிவத்தில் 20ஆவது திருத்தத்துக்கான வரைவு இடம்பெறவில்லை என்பதாலேயே அதனைக் கூட்டமைப்பு எதிர்க்கும் >> 45

see more news in
newuthayan.com

## மக்களுக்குச் சேவையாற்ற ஆளணியினர் போதாதாம்

### கூட்டித்தர முதலமைச்சர், அமைச்சர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13
மக்களுக்குச் சேவை வழங்க வடக்கு முதலமைச்சர், அமைச்சர்கள், அவைத் தலைவர் ஆகியோருக்கு அவர்களது அரசியல் பணி நிமித்தம் வழங்கியுள்ள ஆளணி போதாது என்பதால் அதனை அதிகரித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
தற்போதுள்ள ஆளணிக்கு மேலதிகமாக 2 முகா >> 45

## பதவி விலகவேமாட்டேன்

### அமைச்சர் டெனீஸ் கட்சியிடமும் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 13
எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் அமைச்சுப் பதவியிலிருந்து விலகப் போவதில்லை என்பதில் வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் திட்டவட்டமாக உள்ளார். தனது இந்த முடிவை அவர் கட்சியிடமும் நேற்று ஆணித்தரமாகத் தெரியப்படுத்தினார்.
ரெலோ அமைப்பின் மையக் >> 45

SDB TOP SAVER
20 வருட பூர்த்தியை முன்னிட்டு
சேமிப்பு கணக்குக்கு வழங்கும்
10% அதிகூடிய வட்டி
• எச் சந்தர்ப்பத்திலும் பணத்தை மீளப்பெறும் வாய்ப்பு
• SDB VISA Debit Card வசதி மற்றும் SMS சேவை
• வட்டி வீதம் 10% (வ.தே.வீ 10.46%) வரை*
011 5 411 411
SDB வங்கி
சனச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவ இளைஞர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்



யாழ்ப்பாணம்,ஒக.13
உலக சைவ இளைஞர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இலங்கை வேந்தன் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. "தமிழ் எங்கள் மொழி. சைவம் எங்கள் வழி" எனும் மகுட வாசகத்துடன் "சைவத்தமிழ் மறுமலர்ச்சியில் இளைஞர்களின் பங்கும் பணியும்" எனும் தொனிப் பொருளில் இந்த மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்வில் ஆரம்பமாக நல்லூர் சிவன் ஆலய முன்றிலில் இருந்து பக்தி ஊர்வலம் கலையரங்கு வரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அரங்கில் சிறப்புரைகள் இடம்பெற்றன. இரண்டாம் நாள் நிகழ்வில் தமிழகப் பேரூர் ஆதின இளைய பட்டம் பெற்ற தவத்திரு மருத்தாச்சலம் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து சமயப் பிரதிநிதிகளின் சிறப்புரைகள் இடம்பெற்றன. இதில் வடமாகாண அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம், இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# சட்ட மாணவர்களின் "நீதம்" நூல் வெளியீடு





யாழ்ப்பாணம்,ஒக.13
யாழ்ப்பாணப பல்கலைக் கழக சட்ட மாணவர் சங்கத்தின் வருடாந்த நீதம் நூல் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நூல் வெளியீட்டைத் தொடர்ந்து சட்ட மாணவர் சங்கத்தால் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். சட்ட மாணவர் சங்கத் தலைவர் அ.றொமல்சன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், மதிப்புறு விருந்தினர்களாக பல்கலைக்கழக துணை வேந்தர் இ.விக்னேஸ்வரன், கலைப்பீட பீடாதிபதி கெ.சுதாகர், சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், ஆகியோர் கலந்துகொண்டனர். பல்கலைக்கழக சட்டத்துறை 10 வருடங்களைக் கடந்து விட்டது. அது இனி ஒரு பீடமாக உருவாவதற்கான தகுதியைப் பெற்றுவிட்டது. எனவே துணைவேந்தர் கலைப் பீடாதிபதியும் இது குறித்துச் சந்திக்க வேண்டும். என்றார் நீதிபதி எம். இளஞ்செழியன் (ஐ-ரி)

# வவுனியாவில் போராடும் மக்களைச் சந்தித்தார் சிவாஜி



வவுனியா, ஒக. 13
தொடர் போராட்டம் நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்தக் கோரி அவர்களது உறவினர்கள் வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுடன் அவர்களது போராட்டம் 170 நாள்களைக் கடந்துள்ளது.
வவுனியாவுக்குப் பயணித்த மாகாண சபை உறுப்பினர் போராட்ட இடத்துக்குச் சென்று அங்கிருந்த உறவினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
உறவினர்கள் தமது கோரிக்கை மற்றும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக மாகாண சபை உறுப்பினரிடம் எடுத்துக் கூறினர் எனத் தெரிவிக்கப்பட்டது.
கடந்த காலப் போரால் கடத்தப்பட்டும், கைதுசெய்யப்பட்டும் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.
அவர்களை விடுவிக்கவும் வெளிப்படுத்தவும் வலியுறுத்தி தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.
வடக்குக் கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-10)



# வடக்கில் நடக்கும் சிறு விடயங்களை வைத்து தெற்கில் சிலர் பொய் கூறுகின்றனர்

## அமைச்சர் சஜித் பிரேமதாஸ சாடல்

யாழ்ப்பாணம் ஓகஸ்ட் 13
வடக்கில் இடம்பெற்ற சில சிறிய குற்றச் செயல்களை வைத்து வடக்கு மாகாணத்தில் மீண்டும் மோசமான சூழ்நிலை உருவாகி விட்டது என்று தெற்கில் சிலர் பொய் உரைக்கின்றனர்.
இவ்வாறு அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையின் மேசன் கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு திருமறைக் கலா மன்றத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
நாட்டில் சமாதானமும், சாந்தியும் ஏற்பட்டுள்ளமையை ஒரு சில அரசியல்வாதிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தற்போது ஏற்பட்டுள்ள சமாதான மற்றும் நல்லிணக்கத்தை பார்த்துப் பொறாமை அடைந்துள்ளனர். வடக்கில் இடம்பெற்ற சில சிறிய குற்றச் செயல்களை வைத்து வடக்கு மாகாணத்தில் மீண்டும் மோசமான சூழ்நிலை உருவாகி விட்டது என்று தெற்கில் பொய் உரைக்கின்றனர்.
வடக்கில் அண்மைக்காலமாக இடம்பெற்ற சில சிறிய குற்றச்செயல்களுக்கு மத்தியிலும் நான் எனது வாகனத்தில் இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளுடனும் எனது சாரதியுடனும் மட்டும் இங்கு தெற்கிலிருந்து வாகனத்தில் வந்துள்ளேன். வடக்கில் முன்னைய காலத்தைப் போல எவ்வித அச்ச நிலைமையும் இல்லை. வடக்கையும் தெற்கையும் இணைய விடக்கூடாது என்ற முயற்சியிலேயே சில அரசியல்வாதிகள் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டுள்ளனர்.
மேசன் பயிற்சியை நிறைவு செய்த 400 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மேசன் தொழிலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டம் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே நடைபெறுகின்றது.
2 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடை மற்றும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மேசன் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சியின் போது மாதாந்தம் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரையில் வழங்கப்பட்டுள்ளது. நான்கு மாதப் பயிற்சி நெறியை நிறைவு செய்து சான்றிதழ்களுடன் வெளியேறியுள்ள நீங்கள் தற்போது வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் பெற்றுக்கொண்ட பயிற்சி நெறிகள் என்பவற்றைப் பயன்படுத்தி உங்கள் வாழ்வில் மாதாந்தம் 60 ஆயிரம் ரூபாய் வரையில் சம்பாதிக்கக் கூடிய வல்லமையைப் பெற்றுள்ளீர்கள்.
கடந்த வருடம் இங்குள்ளவர்களுக்கு அதிகளவான வீடுகள் தேவை என இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியிருந்தார்கள். இந்த வருடம் வீடுகள் அதிகமாக வழங்கப்பட்டு வருகின்றன .எனது அமைச்சின் ஊடாக 2 ஆயிரத்து 551 வீடுகளும் 49 கிராம மட்டத்திலான வீட்டுத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இது வெறும் ஆரம்பமே இதன் தொடர்ச்சியாக தேவையான உதவிகள் வழங்கப்படும்.
நாம் இங்கு 49 கிராம மட்டத்திலான வீட்டுத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளோம். இந்த திட்டங்களின் ஒவ்வொரு திறப்பு விழாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கு 49 தடவைகள் வருவேன். இங்கு வந்து அந்த அனைத்து திட்டங்களது திறப்பு விழாவில் பங்குபற்றுவேன். அனுராத புரம் மாவட்டத்துக்கு 37 ஆவது தடவையாக இன்று வீட்டுத்திட்டத் திறப்பு விழாவுக்குச் செல்லவுள்ளேன்.
நாம் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் வடக்கு மக்களின் வீட்டுத் தேவைகளை நிறைவேற்ற 2 ஆயிரத்து 500 வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அடுத்து வரும் தேர்தலுக்கு வடக்கு மக்கள் மத்தியில் முகம் கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துவோம் - என்றார்.
"வெளிமாவட்டத்திலிருந்து கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட வேண்டும். வடக்கு மக்களின் தேவை கருதி தொடர்ச்சியாக அரசு வீட்டுத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். தற்போது முன்னெடுத்து வரும் வீடமைப்பு அமைச்சின் ஊடான வீட்டுத்திட்டங்கள் மூலம் மக்கள் நன்மையடைந்துள்ளனர். இந்தத் திட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்." என்று நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
நிகழ்வில் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இளங்கோவன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
அதேவேளை, நிகழ்வுக்கு வந்த அனைவரும் உடற்சோதனையின் பின்னரே விழாவில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது. (ந-8)

## சிசுவை புதைத்த குற்றச்சாட்டில் இருவர் கைது

கொழும்பு, ஒக. 13
சிசுவை வீட்டில் புதைத்த குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. லிந்துலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டுக்கலை 7ஆம் இலக்கக் கொலனியில் இந்தச் சம்பவம் நடந்தது. சிசுவைப் பிரசவித்த பெண் தனது தாயாருடன் சேர்ந்து வீட்டுக் காணியில் மண்ணில் புதைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த 10 ஆம் திகதி அந்தச் சிசு பிரசவிக்கப்பட்டது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

## மாவாவுடன் அறுவர் கைது

ஹற்றன், ஒக. 13
மாவாப் போதைப் பொருளை விற்பனை செய்தவர் உட்பட அவற்றை நுகர்வதற்கு வாங்கிய குற்றச்சாட்டில் 6 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். ஹற்றன் பேருந்துத் தரிப்பிடப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். சட்ட விரோதமாக மாவா போதைப் பொருள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அந்தப் பகுதியில் பொலிஸார் சோதனையிட்டனர். அதன் போது 75 என்.சி. புகையிலை ரின்கள் உட்பட சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்டு 80 பக்கற்றுகளில் பொதி செய்யப்பட்ட ஒரு தொகை மாவாப் போதைப் பொருள் மற்றும் தயாரிப்புக்கான பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.
விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் உட்பட போதை பொருளைப் பணம் கொடுத்து வாங்கிய 5 இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமி மீது துர்நடத்தை 16 வயதுச் சிறுவன் கைது

திருகோணமலை, ஒக. 13
ஆறு வயதுச் சிறுமியைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 16 வயதுச் சிறுவன் நேற்றுக் கைது செய்யப்பட்டார். திருகோண மலை மொறவெவப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குணவர்தன புரப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கைது செய்யப்பட்ட சிறுவன் அதே இடத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டார் என்று கூறப்படும் 6 வயதுச் சிறுமி திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10, 45)

## பளையில் மருத்துவ முகாம்

கிளிநொச்சி, ஒக.13
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 22ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடத்தப்பட்டது. பளை பலநோக்குக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. அதில் மருத்துவப் பரிசோதனைகள், கண் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டன. பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட பலர் கலந்து கொண்டனர்.
கிளிநொச்சி தொழிற்பயிற்சி அதிகாரசபை, ஹெல்த் ஏச் சிறிலங்கா அமைப்புடன் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தது. (ஐ-ய,6)

# அதிகாரத்தை தவறாக பயன்படுத்த அனுமதியோம்

## நிமல்கா பெர்னான்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஒக.13
இனவாத, மதவாத மற்றும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லை.
இவ்வாறு சிவில் சமூக செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னான்டோ தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை வாசித்துப் பார்த்தீர்களா என நாம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவிடமும் கேட்க விரும்புகின்றோம்.
அந்த ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சங்களை கைவிட நாம் தயாரில்லை. 1994ஆம் ஆண்டு நடந்த சில குழப்பங்களால் அன்று அந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டி ஏற்பட்டது. மீண்டும் இனவாத, மதவாத மற்றும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் அந்த அரசியல் கலாசாரத்தை கொண்டுவர நாம் இடமளிக்கப் போவது இல்லை.
94ஆம் ஆண்டைப்போல் இந்த போராட்டத்தை கைவிட நாம் தயாரில்லை. இது எமக்கு கிடைத்திருக்கும் பொன்னான வாய்ப்பு. தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு, மலையக அரசியல் கட்சிகள். முஸ்லிம் கட்சிகள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியமையை ஞாபகப்படுத்தவே நாம் எதிர்வரும் 15ஆம் திகதி வீதிக்கு இறங்கவுள்ளோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை கூட்டரசு நிறைவேற்ற வேண்டும். என்றார். (ற)

## விபத்தில் இருவர் சாவு; ஐவர் படுகாயம்

அனுராதபுரம், ஒக 13
முச்சக்கர வண்டியும் சிற்றூர்தியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் இருவர் உயிரிழந்தனர், ஐவர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து நேற்று அதிகாலை அநுராதபுரம் - புலங்குலம பிரதேசத்தில் நடந்துள்ளது. முச்சக்கரவண்டியில் பயணித்தவர்களே காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ஐ-ரி)

# பார்வையாளர்களைக் கவர்ந்த மாணவர்களின் நடன நிகழ்வு



சாவகச்சேரி, ஒக.13
"நாத நர்த்தன வர்ணம்" எனும் பாடசாலை மாணவர்களுக்கான நடன நிகழ்வு தென்மராட்சியில் நேற்றுச் சிறப்புற இடம்பெற்றது. சாவகச்சேரி நகரசபைப் பொன் விழா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பார்வையாளர்களாகப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மங்கல இசையைச் சங்கத்தானை பிரதித்தன் சித்தார்த்தன் குழுவினர் வழங்கினர். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் வரவேற்புரை ஆற்றினார். வரவேற்பு நடனத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவிகள் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மாணவிகளின் 'சப்தம்' நடனமும், உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் போர் முனையைக் குறிக்கும் வாள் நடனமும், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மாணவிகளின் 'பொம்மை' நடனமும், கொடிகாமம் அ.த.க.பாடசாலை மாணவிகளின் பாம்பு நடனமும், வரணி மத்திய கல்லூரி மாணவிகளின் கீர்த்தனை நடனமும் இடம்பெற்றன. தொடர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் 'பத வர்ணம் நடனமும், அந்நியதேசக் கலாசாரத்தைக் குறிக்கும் வகையில் நாவற்குளி மகா வித்தியாலய மாணவிகளின் 'கண்டிய நடனமும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவிகளின் கரகாட்டமும், மட்டுவில் கமலாசனி வித்தியாலய மாணவிகளின் குடை நடனமும், கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவிகளின் குறவன் குறத்தி நடனமும், மிருசுவில் அத.க.பாடசாலை மாணவிகளின் பானை நடனமும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் பாரதியார் பாடல் நடனமும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் தில்லானாவும் இடம்பெற்றன. இந்த நடன நிகழ்வு அங்கு பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட பலரையும் ஈர்த்தது.
தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன், தென்மராட்சி கல்வி வலய அழகியற் பிரிவினர் நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரிட்டன் கிளையின் தலைவர் மருத்துவர் ஆ.புவிநாதன், மதிப்புறு விருந்தினர்களாகக் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செல்வி ரஜிதா சின்னத்துரை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோரும் தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்துள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரதிநிதிகள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-9)



## 17ஆம் திருவிழா

### இசை எல்லாம் உனக்கே

பல்லவி

விழாக்கோலம் பூண்ட நல்லூரானே உன்னை
காணக் கண்கோடி வேண்டுமையா

அனுபல்லவி

அழகு சுந்தர முருகனே உன்னில்
அன்னை சேர்த்தெடுத்த சக்தியோ

சரணம்

குழந்தை பால்முகம் உன்னிலையா உன்னை
கண்டதும் மெய்மறக்கச் செய்யுதையா
போதையாய் உன்னை நாடுகின்றோம் எம்மை
பிள்ளைப் பாசம் கொல்லுதையா
அன்புக்குழந்தைக்கு என்ன செய்வோம் உன்னை
தாலாட்டிக் களிப்பூட்ட கூடி வந்தோம்
ஆராரோ பாடவா? பிள்ளைத் தமிழ் பாடவோ எம்
இசையெல்லாம் உனக்கே எம் முருகா

*மலர் சின்னையா*

### நல்லவரம் தருவான் நல்லூரான்

நானிலம் போற்றும்
நல்லூரினிலே நல்லாட்சி புரிகின்ற நல்லைக்கந்தா
நல்ல நாத ஓசை தரும்
நான்கு காண்டாமணிகளின் நல்லிசை ஒலித்திடவே
வேண்டுவார் வேண்டும் வரமளிக்கின்ற வேலவா
நாயகிகள் இருவரும் அருகினில் வர
தொண்டர் தோளினிலே ஆனந்தமாய்
அசைந்தாடி வருபவனே அலங்காரக்கந்தா
இருள் போக்கி ஒளிவீச
இருபத்தைந்து தினங்களும் உலாவந்து
எம்மை எல்லாம் ஆனந்த வெள்ளத்தில்
ஆழ்ந்திடும் முருகா
இன்னல்கள் போக்கி
நல்லவரம் தருவான் நல்லூரான்

தே. இளங்கோவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியாவில் டெங்கு ஒழிப்பு

வவுனியா, ஓக.13
டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் வவுனியா பண்டாரிக்குளத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டன. கிராம மக்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், நகர சபை ஊழியர்கள் இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் துப்பரவு செய்யப்பட்டன. பண்டாரிக்குளத்தில் பிரஜைகள் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் இந்தச் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன. "எங்கள் கிராமத்தையும், மக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு எமது சுற்றாடலில் நீர் தேங்கி நிற்காத வண்ணம் சுத்தம் செய்வோம். வீட்டில் தேங்கிக் கிடக்கும் தேவையற்ற பொருள்களை அகற்றி வீட்டைச் சுத்தப்படுத்து வோம். அதற்குக் கிராம மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று பண்டாரிக்குளம் பிரஜைகள் குழு தெரிவித்தது. இன்று ஞாயிற்றுக்கிழமையும் சிரமதானப் பணிகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி)

# போதையற்ற சமூகத்தை உருவாக்கப் பெண்களின் ஒத்துழைப்பு அவசியம்

## வன்னிப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



வவுனியா, ஓக.13
நாட்டில் போதையற்ற சமூகத்தை உருவாக்குவதற்கு பெண்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது. பிள்ளைகள், கணவனைப் போதைப் பொருள் பாவனையில் இருந்து விடுபட வைப்பதற்கு உரிய உளரீதியான முறைகளைப் பெண்கள் கையாள வேண்டும். இவ்வாறு வன்னிப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார். பெண்களுக்கான இலவச சமையல் பயிற்சி வவுனியா சிந்தாமணி ஆலய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
பொலிஸார் பொதுமக்களுக்காகப் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். பொலிஸாரைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டாலும் மக்களுக்கான சேவைகளில் இருந்து அவர்கள் தவறுவதில்லை. இன்று போதைப் பொருள் பாவனையால் பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறலாம். அதற்கு அவர்களது கணவனோ, பிள்ளைகளோ காரணமாக இருக்கலாம். சிறுவர் துஷ்பிரயோகங்களும் பல இடம் பெற்றுள்ளன. இவற்றால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டுமே. இதற்குத் தீர்வு பெற்றுத்தர பெண்கள் எமக்குக் கைகொடுக்க வேண்டும்.
போதைப் பொருள் பாவனை தொடர்பான தகவல்களை வழங்க வேண்டும். உங்களுடைய வீட்டுப் பிரச்சினை களைத் தீர்த்துக் கொள்வதற்கு நீங்கள் எங்களுக்கு உதவ வேண்டும்.
குற்றங்கள் மற்றும் பல்வேறுபட்ட தொல்லைகளிலிருந்து எமது வன்னிப் பிரதேசத்தைப் பாதுகாத்துக் கொள்ள பெண்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும். வன்னிப்பிராந்தியத்தில் தமிழ் மொழி பொலிஸ் அவசர தொலைபேசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனூடாக நீங்கள் 24மணிநேரமும் தமிழ் மொழி மூலம் உரையாடி உங்களது பிரச்சினைகளுக்கு பதில் கூறக் காத்திருக்கின்றார்கள். உங்களுடைய வீடு வீட்டுச் சுற்றுப்புறங்களில் ஏதாவது குற்றங்கள் ஏற்படுமாக இருந்தால் 076 6224949, 076 6226363 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பை ஏற்படுத்தித் தகவலை வழங்குங்கள். பெண்கள் ஒத்துழைப்பு வழங்கினால் இந்தப்பிரதேசத்திலிருந்து குற்றச் செயல்களை முற்றாக அழித்து விடமுடியும். - என்றார்.
வன்னிப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. பிரபல்யமான சமையல் கலை நிபுணர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பிராந்தியப் பொலிஸ் அதிகாரி, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வவுனியா தெற்குத் தமிழ் பிரதேச சபைச் செயலாளர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ஐ-ரி)



## மதங்கள் கூறும் அறிவுரைகள்: திருமலையில் கலந்துரையாடல்



திருமலை, ஓக. 13
இலங்கையின் மதங்கள் கூறும் அறிவுரைகள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் திருகோணமலை ரிங்கோ வாடி வீட்டில் நேற்று நடைபெற்றது. "இலங்கையில் அனைத்து மதங்கள் மற்றும் அனைத்து இனங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் திட்டம்" எனும் தொனிப் பொருளில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மதங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் ஏனைய மதங்கள் பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டனர். ஒவ்வொரு மதங்களும் கூறும் போதனைகள் பற்றியும் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.
அதனைத் தொடர்ந்து அவரவர் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. பிரிட்டன் தூதுவர் அலுவலகம், ஆசிய பவுண்டேஷன் ஆகிவற்றின் நிதி அனுசரணையுடன் கலந்துரையாடல் இடம் பெற்றது.
அதனை தேசிய சமாதானப்பேரவை, சக்தி அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்தன எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் ஆசிய பவுண்டேசன் இணைப்பாளர் செல்வி.கமாயா, தேசிய சமாதானப் பேரவையின் இணைப்பாளர் துசந்ரா விஜயநாதன், சக்தி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி சதுராணி, திருமதி.பிரிஜட் ஆகியோருடன் மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (ஐ-10, 45)

## ஓய்வு அறைகளில் பூச்சிகளின் தொல்லை தொடருந்து அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஓக.13
ஓய்வு அறைகளில் மூட்டைப் பூச்சிகளின் தொல்லை அதிகரித்துள்ளமையால் அவற்றை உடனடியாக அகற்றக் கோரி, தொடருந்துப் பாதுகாப்பு அதிகாரிகள் சுமார் ஒரு மணிநேரம் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். கொழும்பு கோட்டை, மருதானைத் தொடருந்து நிலையங்களில் கடமையாற்றும் பாதுகாப்பு அதிகாரிகளே பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர். " கோட்டை, மருதானைத் தொடருந்து நிலையங்களின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஓய்வு அறைகளில் அண்மைக்காலமாக மூட்டைப் பூச்சிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இது தொடர்பாக அதிகாரிகள் தொடருந்துத் திணைக்களத்திடம் பல தடவைகள் முறையிட்டனர். ஆனால் மூட்டைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதனால் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று தொடருந்துப் பாதுகாப்பு அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.
அதிகாரிகளின் பணிப்புறக்கணிப்பை அடுத்து தொடருந்துத் திணைக்களம் ஓய்வு அறைகளில் மூட்டைப் பூச்சிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. தமது கோரிக்கை நிறைவேற்றப்பட்டதை அடுத்து பாதுகாப்பு அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டனர். (ஐ-ரி)

## 200 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள்

கிளிநொச்சி, ஓக.13
கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு கிளிநொச்சி இரணைமடுத் தாமரைத் தடாக மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. கிளிநொச்சி படையினரின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவன முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார் அவர் பயனாளிகளுக்கு மூக்கு கண்ணாடிகளை வழங்கினார். விசன் கெயார் நிறுவனத்தின் அனுசரணையில் கிளிநொச்சிப் படையினரின் ஏற்பாட்டில் கண்ணாடிகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## அரச தலைவர் நடமாடும் சேவை பூநகரியில் நேற்று





பூநகரி, ஓக. 13
அரச தலைவர் நடமாடும் சேவையின் தேசிய வேலைத் திட்டம் (நிலமெஹவர) பூநகரியில் பிரதேச செயலகப் பிரிவில் நேற்று இடம்பெற்றது. அதில் காலங்கடந்த பிறப்பு ,இறப்புப் பதிவுகள், திருமணப் பதிவுகள், தேசிய அடையாள அட்டைப் பதிவுகள், சாரதி அனுமதிப் பத்திரம், முதியோர் அடையாள அட்டை, காணி, சிறு தொழில் முயற்சி தொடர்பான அறிவுறுத்தல்கள், கடவுச் சீட்டு, வங்கிச் சேவைகள் உட்பட பல சேவைகள் நடத்தப்பட்டன. பூநகரிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மக்கள் அதில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் திருமதி ம.விஜயகலா மற்றும் மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட மேலதிக செயலர் சத்தியசீலன், பூநகரி பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த நடமாடும் சேவை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்பின் பேரில், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒழுங்குப்படுத்தலில் நடத்தப்பட்டு வருகிறது. (ஐ-10,6, 35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத்தில் வேலை செய்தவர் பொல்லுத் தாக்குதலில் படுகாயம்

## இரவுநேரம் நாவற்குழியில் சம்பவம்

தென்மராட்சி ஓக.13

தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த குடும்பத்தலைவர் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நாவற்குழி பகுதியில் இடம்பெற்றது.

காயமடைந்த நபர் சம்பவதினம் இரவு தோட்டத்தில் வேலை செய்துள்ளார். அப்போது யாரோ தோட்டத்துக்கு வெளியே நின்று அழைக்கும் குரல் கேட்டுள்ளது.

குரல்கேட்டு வெளியே வந்த அவரை இனந்தெரியாத ஒருவர் பொல்லால் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளார் எனக் கூறப்படுகிறது. தாக்குதலால் தலையில் காயமடைந்த அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த தங்கராசா றொசான் (வயது -30 ) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானவர் ஆவார்.

(ய-9)



# அரச காணியை ஆக்கிரமித்து மாந்தையில் அன்னாசி செய்கை

## இஸ்ரேல் குடிமகனின் நடவடிக்கை குறித்து மக்கள் விசனம்

மன்னார், ஓக.13

மன்னார் - மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பருப்புக்கடந்தான் பகுதியில் இஸ்ரேல் பிரஜை ஒருவரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அன்னாசிப் பயிர்ச் செய்கை தொடர்பில் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பல் தெரிவிக்கப்பட்டதாவது:

மேற்படி வெளிநாட்டுக் குடிமகன் 2014ஆம் ஆண்டு தொடக்கம் அன்னாசிச் செய்கையில் ஈடுபட்டு வருகிறார். இதற்காக மன்னார், பருப்புக்கடந்தான் பகுதியில் சுமார் 160ஏக்கர் காடு அழிக்கப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமான குறித்த காணி இலங்கையர் ஒருவர் ஊடாக இஸ்ரேல் நாட்டுப் பிரஜைக்கு வழங்கப்பட்டுள்ளதாக மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் எஸ். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

"இந்த 160 ஏக்கர் காணியில் சுமார் 100 ஏக்கர் காணி பொதுமக்களுக்குச் சொந்தமான காணி. அவை 1989ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தால் மக்களுக்கு வழங்கப்பட்டவை. எனினும், குறித்த காணியில் குடியிருந்த மக்கள் இடம்பெயர்ந்து தற்போது இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். மக்களுக்கு உரித்தான காணிகளைப் பெற்றுத்தருமாறு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்" என மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் மேலும் குறிப்பிட் டார்.

இதுதொடர்பில் மன்னார் பிராந்திய வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி ஈ.ஜே. எம்.ஜே.கே.ஏக்கநாயக்க தெரிவித்ததாவது,

இதற்கு யார் அனுமதி வழங்கினர் என எமக்குத் தெரியாது. 2015ஆம் ஆண்டு நான் மன்னார் பிராந்திய அதிகாரியாகப் பொறுப்பேற்றதன் பின்னர் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம். அரச இடத்தை மீளப் பெற்றுக்கொள்ளல், காடழிப்பு ஆகியவற்றுக்கு எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன -என்றார்.

களைநாசினிகள் மற்றும் இரசாயனங்கள் இன்றி எவ்வாறு இயற்கையாகப் பயிர்ச்செய்கையை முன்னெடுப்பது என்பது தொடர்பில் இலங்கை விவசாயிகளுக்குக் காண்பிப்பதற்காகவே நாம் இலங்கை வந்துள்ளோம். மன்னாரில் அன்னாசி பயிரிடுவது கடினம் என மக்கள் கூறினர். ஆனால் பயிரிட முடியும் என்பதை நாம் அவர்களுக்குக் காண்பித்துள்ளோம்" என்று குறித்த வெளிநாட்டுக் குடிமகன் தெரிவித்தார்.

(ய)

# மரங்களை வெட்டியதால் மக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஓக.12

மட்டக்களப்பு துறைநீலாவணைப் பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டமையைக் கண்டித்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

துறைநீலாவணை முதன்மைச் சாலையின் இரு மருங்கிலும் நின்ற மதுர மரங்களை அம்பாறை காரியாலய மின்சார சபையின் உத்தியோகத்தர்கள் வெட்டினார்கள் என்று தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

"சாலையோரங்களில் நின்றிருந்த 5க்கும் மேற்பட்ட மரங்கள் அடியோடு வெட்டிவீழ்த்தப்பட்டன. ஏனைய மரங்களை வெட்டும் போது நாங்கள் அவ்விடத்துக்குச் சென்று மரம் வெட்டுவதை தடுத்து நிறுத்தி னோம்" எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

அனுமதி பெற்றே மின்சாரசபை ஊளியர்களால் மரங்கள் வெட்டபப்படுகின்றன என்று மின்சார சபையினர் தெரிவித்தனர் என்றும் கூறப்பட்டது.

சம்பவ இடத்துக்குக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா மற்றும் கல்முனை களுவாஞ்சிக்குடி மின் அத்தியட்சகர் ஆகியோர் சென்றனர். மக்களுடன் கலந்துரையாடினார். மரம் வெட்டுவதை நிறுத்துமாறும் உத்தரவிட்டனர்.

(ற)

# நீதிமன்றுக்கு சந்தேகம் எழுவதற்கு பெண்ணின் மதமாற்றமே காரணம்

## ஊர்காவற்றுறை நீதிமன்றில் சட்டத்தரணி விளக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 13

விபத்து வழக்கு ஒன்றில் மன்றில் முன்னிலையாகிய பெண்ணின் கலாசாரத்துக்கும் அவரது பெயருக்கும் இடையே உள்ள வேறுபாடு தொடர்பில் நீதிமன்றுக்கு சந்தேகம் அந்தப் பெண் மதம் மாறியதாலேயே ஏற்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்றுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அந்தப் பெண் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மேற்கண்டவாறான விளக்கத்தை மன்றில் முன்வைத்தார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அந்த வழக்கின் இரு தரப்பினரும் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்றில் முன்னிலையாகினர். அவர்கள் இருவரும் இணக்கத்துடன் வழக்கை முடிவுறுத்துவதாக மன்றில் தெரிவித்தனர்.

இந்த வழக்கின் ஒரு தரப்பான பெண் ஒருவரிடம் பெயரைக் கூறுமாறு மன்று கேட்டது. இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த பெயரை அந்தப் பெண் கூறினார். எனினும் அவர் இந்து மதப் பெண்களின் கலாசாரமான சாறி அணிந்து, கழுத்தில் தாலி நூல் தரித்துக் காணப்பட்டார். அதனால் அந்தப் பெண் தொடர்பில் சந்தேகம் கொண்ட நீதிவான் ஏ.எம்.எம். றியாழ், அவரது ஆள் அடையாள அட்டையை மன்றில் சமர்ப்பிக்கப் பணித்தார்.

ஆள் அடையாள அட்டை இல்லையெனவும் கடவுச்சீட்டு மட்டுமே உள்ளது எனவும் அந்தப் பெண் கூறியதுடன் அதனை மன்றில் முன்வைத்தார். அதனை மன்று ஆராய்ந்தது. அந்தப் பெண்ணால் மன்றில் தெரிவித்த பெயர் கடவுச்சீட்டில் சரியாக இருந்த போதும், அவரது ஒளிப்படம் முஸ்லிம் பெண்கள் அணியும் கலாசார உடையணிந்தே காணப்பட்டது.

இதனால் சந்தேகமடைந்த நீதிவான், ஆள் மாறாட்டம் ஏற்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் உரிய திணைக்களங்களிடம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் அந்தப் பெண் சட்டத்தரணி ஜோய் மகிழ் மகோதேவா ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் கடந்த வியாழக்கிழமை முன்னிலையாகினார். தனது வாழ்வில் நடந்த உண்மையை சட்டத்தரணி மூலம் அவர் மன்றுக்கு உரைத்தார்.

"இந்து மதத்தில் பிறந்த அந்தப் பெண் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த நபரை முதல் திருமணம் செய்துள்ளார். திருமணத்தின் பின்னர் அவர் இஸ்லாமிய மத்துக்கு மாறி, தனது பெயரையும் மாற்றினார். எனினும் சிறிது காலத்தில் அந்தப் பெண் தனது கணவனிடமிருந்து மண நீக்கம் பெற்றார்.

அதன் பின்னர் இந்து மதத்தைச் சேர்ந்த வேறொருவரை மறுமணம் செய்த அவர் தற்போது இந்துவாக வாழ்கிறார். எனினும் அவரது பெயர் சட்டபூர்வமாக இதுவரை மாற்றப்படவில்லை. அதனால்தான் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த பெயரை அவர் நீதிமன்றுக்கு வழங்கினார்" என்று சட்டத்தரணி மன்றிடம் தெரிவித்தார்.

சட்டத்தரணியின் சமர்ப்பணத்தை ஆராய்ந்த ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன், அந்தப் பெண் தொடர்பில் பொலிஸாரின் அறிக்கை மன்றில் சமர்ப்பிப்பதற்காக வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

(வ-37)

# வறட்சிப் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு பவுசர்கள்



திருகோணமலை, ஓக. 12

திருகோணமலை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக உழவியந்திரங்கள் மற்றும் பவுசர்கள் மாவட்டச் செயலர் என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு என்பன இணைந்து அவற்றை வழங்கின. திருகோணமலை மாவட்டத்தின் வெருகல், கிண்ணியா, கந்தளாய், கோமரங்கடவெல மற்றும் பதவிசிறிபுர ஆகிய 5 பிரதேச செயலகங்களுக்கும் அவை கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கே.டி.நிரஞ்ஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(ற10-ரி)

# சிறிதரன் எம்.பி. பதவிமுத்திரை விவகாரம்: விசாரணைகள் குற்றத்தடுப்பு பிரிவினரிடம்

கிளிநொச்சி, ஓக 13

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் நாடாளுமன்றப் பதவி முத்திரை மற்றும் நாடாளுமன்றக் கடிதத் தலைப்பு போன்றவற்றை மோசடியான முறையில் பயன்படுத்தினார் எனக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலயத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து அந்த விசாரணைகள் குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது பதவிமுத்திரை மற்றும் நாடாளுமன்றக் கடிதத் தலைப்பு போன்றவை களவாடப்பட்டுத் தவறானமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கடந்த ஜூன் மாதம் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்திருந்தார். அந்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே விசாரணைகள் குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர் எனவும், இந்த விடயம் தொடர்பாகக் கிளிநொச்சி நீதிவான்மன்றிலும் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

(ய-21-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபா 2,000 தாளை வைத்து கடைகளில் நூதன மோசடி

## சகோதரர்கள் இருவர் ஊர்காவற்றுறையில் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஓக.13

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல கடைகளில் பொருள்களை வாங்கிய பின்பு 2 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கி அதன் மூலம் மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சகோதரர்கள் இருவர் நேற்றையதினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

"கைது செய்யப்பட்ட இருவரும் கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணம் தீவகத்தில் இவ்வாறான மோசடியில் ஈடுபடுவதாக பல வர்த்தகர்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்கள்.

தாவடி தெற்கைச் சேர்ந்த சகோதரர்களான இருவரும் 2ஆயிரம் ரூபா தாளை வழங்கி 100 ரூபாவுக்குப் பொருளை வாங்கிக் கொண்டு மிகுதிப் பணத்தையும் பெற்றுள்ளனர். பின்னர் சில்லறை 100 ரூபா தம்மிடம் உள்ளது அதனைத் தருகின்றோம் எனக்கூறி இரண்டாயிரம் ரூபா தாளைத் தாருங்கள் எனக் கேட்டுள்ளனர்.

அவர்கள் கேட்பதற்கிணங்க கடை உரிமையாளர்கள் இரண்டாயிரம் ரூபா தாளைக் கொடுத்துவிட்டு முன்புதந்த மிகுதிப்பணம் 1900 ரூபாவைத் தாருமாறு கேட்டால் தமக்கு மிகுதிப் பணம் தரவே இல்லை எனத் தர்க்கம் புரிந்து அங்கிருந்து அகன்று செல்வதை வழமையாகக் கொண்டுள்ளனர். இவ்வாறு பல கடைகளில் சந்தேகநபர்கள் இருவரும் செயற்பட்டுள்ளனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றின் அடிப்படையில் வர்த்தகர்கள் பலர் பொலிஸாருக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தற்போது குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் பல இடம்பெற்றன.

(ய-101)

## மாதாந்த திரையிடல் இன்று

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்ப்பாணம் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாதாந்தத் திரையிடல் வரிசையில் 'ஜல்சாஹர்' சங்கீத அறை எனும் திரைப்படம் இன்று பி.ப 3 மணிக்கு யாழ். பொதுசன நூலக குவிமாடச் சிறிய கேட்போர் கூடத்தில் இலவசமாக காட்சிப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. 1958ஆம் ஆண்டு வெளியான இந்தத் திரைப்படம் 94 நிமிடங்களைக் கொண்டது. இதனை சத்யஜித்ரே நெறியாக்கம் செய்துள்ளார்.

(ய-21)

## சங்கானையில் கலைவிழா

யாழ்ப்பாணம்,ஓக.13

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றம் நடத்தும் மாபெரும் கலைவிழா இன்று 13ஆம்திகதி பி.ப 2.30 மணிக்கு மாவடி இந்து இளைஞர்மன்ற கலாமண்டபத்தில் நடைபெறும்.

மன்றத்தின் தலைவர் ச.சிவசஜீவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில்முதன்மைவிருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசாவும், சிறப்புவிருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவனும் கலந்து கொள்வர்.

(ய)

## விளையாட்டு விழாவும் பூங்கா திறப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஓக.13

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழாவும், பூங்கா திறப்புவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நிலையத் தலைவர் த. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக கோப்பாய் தேசோதயத் தலைவர் கு.மயில்வாகனம் கலந்துகொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ய-21)

## சாவகச்சேரியில் சமூக பொருளாதார அபிவிருத்திக் கலந்துரையாடல்

தென்மராட்சி ஓக. 13

தென்மராட்சியின் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையை பேராசிரியர் க.கந்தசாமி மற்றும் தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரிட்டன் கிளையின் தலைவர் மருத்துவர் ஆ.புவிநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். 'தென்மராட்சியின் வளங்களும் எதிர்காலமும்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் 'தென்மராட்சியின் முன்னுரிமைத் தேவைகள் என்னும் பொருளில் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வனும் 'விவசாயமும் சிறு கைத்தொழிலும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தனும், மீன்பிடித் தொழில் மேம்பாடு என்னும் பொருளில் மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் சூசை ஆனந்தனும் ' கல்விசார் முன்மொழிவுகள் ' என்னும் பொருளில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் உரை நிகழ்த்தவுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ய-21,9)

## புத்தூர் கிராம அலுவலரை தாக்கியதாக இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 13

புத்தூர் மேற்கு விளையாட்டு மைதானத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வது தொடர்பான கலந்துரையாடலின் போது கிராம அலுவலர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

புத்தூர் மேற்கு கிராமஅலுவலர் அலுவலகத்துக்கு அண்மையில் உள்ள விளையாட்டு மைதானத்துக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காக நிதி கிடைத்துள்ளது. இதுதொடர்பில் கிராம்அலுவலர் சம்பந்தப்பட்ட இளைஞர்களை அழைத்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் இளைஞர்களுக்கும் கிராமஅலுவலருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பின்னர் அது கைகலப்பு வரை சென்றுள்ளது.

அப்போது அங்கிருந்த சில இளைஞர்கள் ஆத்திரமுற்று கிராமஅலுவலரைத் தாக்கினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இரண்டு இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

17 மற்றும் 24 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடை ஏனையவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ய)

## நல்லூரில் இன்று

### நாடகத் திருவிழாவில்

யாழ்ப்பாணம், ஓக.13

செயற்றிறன் அரங்க இயக்கம் வழங்கும் நல்லூர் நாடகத் திருவிழாவில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை குழந்தை ம.சண்முகலிங்கத்தின் குழந்தைகள் பாவனை சிறுவர் நாடகமும் தே.தேவானந்தின் பசுவும் புலியும் சிறுவர் நாடகமும் அரங்கேற்றப்படுகின்றன.

நல்லூர்க் கந்தன் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் இந்த நாடகத் திருவிழா கடந்த 10ஆம் திகதி முதல் நல்லூர் குறுக்கு வீதியில் பண்டாரக்குளத்துக்கு முன்பாக அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் பஞ்சபூத அரங்கில் நடைபெற்று வருகிறது.

(வ)

++++++++++++++++++

### தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஓக.13

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று ஞாயிற்றுக் கிழமை பாட்டு இடம்பெறும்.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 தொடக்கம் இரவு 8 மணிவரை நிகழ்வு நடை பெறும்.

பாட்டு கிருபாசக்தி கருணாவும், வயலின் கா.குகபரனும், மிருதங்கம் வி.ரமணாவும், முகர்சிங் சி.செந்தூரனும் இசைக்கவுள்ளனர்.

(ய)

++++++++++++++++++

### சங்கீத கதாபிரசங்கம்

யாழ்ப்பாணம் ஓக.12

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் 'சங்கீத கதாபிரசங்கம்' கடந்த 6ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இதனை கானகதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வருகின்றார்.

தினமும் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிதொடக்கம் 8 மணிவரை நடைபெறும் இந்நிகழ்வின் எட்டாம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை கம்பராமாயணத்தின் 'பட்டாபிஷேகம்' பகுதி இடம்பெறவுள்ளது.

(ய-ரி)

++++++++++++++++++

### கந்தபுராண விழிப்புணர்வு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணவு நிகழ்வான 'கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்' 17ஆம் நாள் நிகழ்வு இன்று மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜீ.காண்டீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இந்துமத அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் வே.பிரேமச்சந்திரன் கலந்துகொள்வார்.

(ய-21)

## சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக.13

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் 2017ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா நடத்துதல் மற்றும் சைவப்புலவர், இளம் சைவப்புலவர் தேர்வு பற்றிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே அனைத்துச் செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் கேட்டுள்ளார்.

(ய-21)

## யாழ். மரியன்னை பேராலய நற்கருணைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்ப்பாணம்புனிதமரியன்னைபேராலய வருடாந்த திருவிழா கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நற்கருணைப்பெருவிழாநாளை 14ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்குதிருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். மறுநாள் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலியும், காலை 6 மணிக்கு விண்ணேற்பு பெருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

அன்றுமாலை 5 மணிக்கு திருச்சொரூப பவனி வழமையான வீதிகள் வழியாக நடைபெற்று திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். அதேவேளை நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்குத் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக பங்குத்தந்தை சி.நேசராஜா அடிகள் தெரிவித்துள்ளார்.

(ய-135)

## இருதரப்பினரிடையே சண்டையால் தாய், மகன் உட்பட நால்வர் காயம்

### கைதடியில் சம்பவம்

தென்மராட்சி ஓக.13

கைதடி குமரநகரில் இருபகுதியினருக்கிடையே இடம்பெற்ற கல்வீச்சு சம்பவத்தில் தாய், மகன் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் வீடு என்பவற்றுக்கும் சேதம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கல்வீச்சில் காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகளுக்கும் அயலில் உள்ள வீடொன்றில் வசிப்பவர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடே கல்வீச்சுக்கு காரணம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக வீட்டில் உள்ள இருபெண்கள் தாக்கப்பட்டனர் என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அந்தப் பகுதி பொது அமைப்பின் உறுப்பினர்கள் ஒன்றுதிரண்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்த பெண்ணின் மகன் கடைக்குச் சென்றபோது அவரை கற்களால் வீசித் தாக்கியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதனால் மோட்டார் சைக்கிள் கல்வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்தது. இந்தச் சம்பவத்தின் பின்னர் அங்கு திரண்ட சிலர் முறைப்பாடு வழங்கிய பெண்களின் வீட்டின்மீது கற்களை வீசித்தாக்கினர். பதிலுக்கு வீட்டிலிருந்தோரும் கற்களை வீசித் தாக்கியுள்ளனர். கல்வீச்சில் வீட்டுக்குச் சேதம் ஏற்பட்டது. விடயத்தை அறிந்த பொலிஸார் அங்கு சென்று நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருஞானசுந்தரம் செல்வராணி (வயது-47) இவரது மகனான நிதர்சன் (வயது-21) சுப்பிரமணியம் யோகேஸ்வரன் (வயது-38) கந்தசாமி பார்த்தீபன் (வயது-24) ஆகியோரே இதில் காயமடைந்தனர்.

([illegible])

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 1000த்தில் ஒருவராகுங்கள்

தொழிலில் இணைய தயாராகவே வாருங்கள்




**இலங்கையில் சிறந்த தொழில் வாய்ப்புகள் 1000த்தில் இணைந்திட**
**உங்கள் வாழ்நாளில் மீண்டும் கிட்டாத பெறுமதியான வாய்ப்பு**

| வாடிக்கையாளர் சேவை | பேக்கரி உற்பத்தி பிரிவு | காசாளர் |
|---|---|---|
| (ரூ. 30,000திற்கு அதிகமான சம்பளம்) | (ரூ. 30,000திற்கு அதிகமான சம்பளம்) | (ரூ. 35,000திற்கு அதிகமான சம்பளம்) |

எம்மிடமிருந்து உங்களுக்கு...
- உங்கள் சேவைக்கு பொருத்தமான ஊதியம்
- தங்குமிடம், உணவு மற்றும் சீருடை
- பாதுகாப்பான, உற்சாகமான தொழில் சூழலில் பணியாற்றும் வாய்ப்பு
- நிலையான எதிர்காலத்திற்கான அத்திவாரம்

ஆகஸ்ட் 17,18,19
மு.ப. 9.00 முதல்
பி.ப. 4.00 வரை

உங்களின் சுயவிபரக் கோவையை விண்ணப்பப்படிவத்துடன் கீழுள்ள முகவரிக்கு அல்லது வேண்டியதொரு கீல்ஸ் சுப்பர் கிளைக்கு வாருங்கள்.

குருணாகலை : YMBA கட்டடம், ரஜபிஹில்ல மாவத்தை
ஹட்டன் : ஹட்டன்-டிக்கோயா நகரசபை மண்டபம்
மஹியங்கனை : கலாச்சார மத்திய நிலையம்
இரத்தினபுரி : பிரதேச மற்றும் மத்திய நூலக நாடக மண்டபம்
கண்டி : கண்டி சிட்டி சென்டர் முதல் மாடி
பொலன்னறுவை : தமன்கடுவ பிரதேச சபை பொது நூலக கேட்போர்கூடம்
யாழ்ப்பாணம் : வீரசிங்கம் மண்டபம், காங்கேசன்துறை வீதி (இல.12)

காலி : நகரசபை மண்டபம்
மாத்தறை : மாத்தறை நூபெ சனச மண்டபம்
மாத்தளை : மாத்தளை நகரமண்டபம்
மத்துகம : பிரதேச சபை கேட்போர்கூடம்
பாணந்துறை : பிரதேச செயலகம்
பண்டாரவளை : நகரசபை மண்டபம்
கதிர்காமம் : பிரதேச சபை கேட்போர்கூடம்

இன்றே அழையுங்கள்: 0766 240 240

John Keells Group

ஜே.கே. மார்க்கடிங் சர்விஸஸ் (தனி) நிறுவனம், 240, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.
011 2 316 888 careers.jms@keells.com
http://www.facebook.com/keellssupercareers

KEELLS SUPER

ஜோன் கீல்ஸ் குழுமம் சமவாய்ப்பளிக்கும் தொழில் வழங்குனர் ஆகும் என்பதுடன், நாம் தகைமை கொண்ட சகல தனிநபர்களையும் எமது அணியுடன் இணைய விண்ணப்பிக்க அழைக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பீதியடைந்து பிதற்றுகின்றனர்

## சட்டமா அதிபர் திணைக்களம் தனது செயற்பாட்டை நியாயப்படுத்துகின்றது

கொழும்பு, ஓக. 13

சட்டமா அதிபர் திணைக்களம் சரியாகவே செயற்படுகின்றது. இதனால் அச்சமடைந்துள்ள பாதிக்கப்பட்டுள்ள சிலர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது தேவையில்லாத பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட தெரிவித்தார்.

மகிந்த காலத்து விசாரணைகளில் மந்தமாகச் செயற்படும் சட்ட மா அதிபர் திணைக்களம், ரணில் ஆட்சிக் காலத்து விசாரணைகளை மாத்திரம் துரிதமாக முன்னெடுப்பதாக, அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ராஜித குற்றம் சுமத்தியிருந்தார். மகிந்த ஆட்சிக் காலத்தில் பணியாற்றியவர்களே அங்கு இப்போதும் பணியாற்றுகின்றனர் எனவும் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். சர்சைக்குள்ளாகிப் பதவி விலகிய ரவி கருணாநாயக்க, சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ளவர்கள் பதவி உயர்வுக்காகப் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் குற்றச்சாட்டுக்களை மறுதலித்து கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினோம். அதனடிப்படையில் அமைச்சர் (முன்னாள்) ரவி மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டோம். இந்தத் தொழில்நுட்பம் தொடர்பில் எந்தவித புரிதலும் இன்றி 8 ஆயிரம் பக்கங்களை எவ்வாறு சட்டமா அதிபர் திணைக்களம் 48 மணித்தியாலத்திற்குள் விசாரணை செய்து முடித்தது என்று கேள்வி எழுப்புகின்றனர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் தமது கடமையைச் சரியாக நிறைவேற்றி வருவதால், பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் ஆத்திரமடைந்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது பழி போட முயல்கின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரியன்ட் பினான்ஸ்
தங்கக்கடன் சேவை

தற்பொழுது எங்களிடமிருந்து மட்டுமே அதிகூடிய முற்பணம்

ரூபா.38,500/=

ஒரு பவுணுக்கு (22K)

மாதாந்த வட்டி வீதம் 1.99%

மறைமுகக் கட்டணங்கள் எதுவும் இல்லை

நட்புறவான சேவையுடனான குறைந்த வட்டி வீதம்

10 நாள்களுக்குரிய வட்டி வீதம் 0.75%

எங்களுக்கு அழையுங்கள். 0776 576 624


இல.306/A
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
0217 672 240

சகல அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.

Honeywell | Evaporative எயார் கூலர்ஸ்

## மிகச்சிறந்த குளிர்ச்சியை தரும் அதிக உயரம் கொண்ட எயார் கூலர்

புதுமைமிகு நவீன சிறப்பம்சங்களுடன் உயரமான மற்றும் மெல்லிய தோற்றத்தையுடைய ஹனிவெல் எயார் கூலர் 800m3/hr அதிவுயர் காற்றோட்டத்தை தருகிறது. மேலும், காற்றுடன் கலந்துள்ள தூசு மற்றும் கிருமிகளை வடிகட்டி, தூய்மையான மற்றும் புதிய காற்றோட்டத்தை உங்கள் இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் தருகிறது.



230W
60L

CL604AE
ரு. 35,500

Abans

Hero

## ஹீரோ உங்களுக்கு
## 5 வருட உத்தரவாதத்தை வழங்குகிறது
## அதனால், எந்த தயக்கமும் இல்லாமல் ஓட்டிச்செல்லுங்கள்

நவீன தொழில்நுட்பத்தில் பரிபூரண சிறப்பம்சம் தொடர்பான உயர் சான்றிதழே முழுமையான உத்தரவாதமாகும். இதனாலேயே, இலங்கையில் முதல் முறையாக ஹீரோ தனது அனைத்து மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களுக்கு 5 வருட நம்பகமான உத்தரவாதத்தை வழங்குகிறது. அதனால், மனதில் எந்த தயக்கமும் இல்லாமல் ஹீரோ மோட்டார் சைக்கிள்களை சுதந்திரமாக ஓட்டிச் செல்லுங்கள்.





இங்கு இலங்கை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள மாகாண வலய வரைபு கோடுகள் விளம்பரத்திற்காக பயன்படுத்தப்பட்டவையாகும். 2013 செப்டம்பர் மாதம் தொடக்கம் சகல மோட்டார் சைக்கிள்களுக்கும் 5வருட பூரண உத்தரவாதத்தை ஹீரோ மோட்டார்ஸ்கோப் வழங்கி வருகிறது. மோட்டார் சைக்கிள்களுக்கு 70,000 கிலோமீட்டர் மற்றும் ஸ்கூட்டர்களுக்கு 50,000 கிலோமீட்டர் உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

☎ : 011 5 777 000

R.G. டிரேடர்ஸ் - 0777 340056

Facebook.com/HeroMotoCorpSriLanka

Abans



ashok STEEL
நீடித்த வலிமை

## அசோக் TMT
### அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், ஸசந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரு.100,000 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மத்திய மாகாணம் - 077 3825832, வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS 375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு முழு ஒத்துழைப்பு

## பழைய பல்லவியையே பாடிய அமெ. காங்கிரஸ் உறுப்பினர்கள்

கொழும்பு, ஓக. 13

புதிய அரசமைப்பை உருவாக்கும் கூட்டு அரசின் முயற்சிகளுக்கு அமெரிக்க அரசு முழுமையான ஆதரவையும் வழங்கும் என்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் உறுதி அளித்துள்ளனர்.

குடியரசுக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்களான ரொட்னி பிரீலிங்குசென், ஹென்றி கியூலர் ஆகிய இருவரும் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.



இவர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்புகளின் போது, அனைத்து மக்களுக்கும் சனநாயகத்தை வலுப்படுத்தும், நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும், எல்லாப் பிராந்தியங்களின் செழிப்பை வலுப்படுத்தும் கூட்டு அரசின் முயற்சிகளுக்கு, அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அரசமைப்புத் திருத்தம், நல்லிணக்கம், நீதி, பொருளாதாரச் செழிப்புப் போன்ற இலங்கையின் கடப்பாடுகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார். (5)




# திருடனுக்குப் பதில் திருடனா?

## திலக்மாரப்பனவுக்கு பதவி வழங்குவது தொடர்பில் இப்படிச் சாடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக. 13

அயலுறவுத்துறை அமைச்சர் பதவிக்கு திலக் மாரப்பனவை நியமிக்கப் போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் மக்கள் விடுதலை முன்னணி அதற்கு கண்டனம் வெளியிட்டுள்ளது.

'மத்திய வங்கி பிணை முறி விற்பனை மோசடி குற்றச்சாட்டுக்களால் பதவி விலகிய ரவி கருணாநாயக்கவுக்குப் பதிலாக, அவன்கார்ட் மோசடியாளர்களைப் பாதுகாக்க முற்பட்ட குற்றச்சாட்டிற்காக அமைச்சுப் பதவியை இழந்த திலக் மாரப்பனவை நியமிக்க முற்படுவதை எந்தவித்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது' என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு அதிகாரத்திற்கு வந்த உடனே எமது நாட்டில் மிகப் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய விடயமாக அவன்கார்ட் கொடுக்கல் வாங்கல் அமைந்தது. இதனைப் பாதுகாப்பதில் அமைச்சர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். அவன்கார்ட் உரிமையாளர்களிடமிருந்து வீடுகளைப் பெற்றுக்கொண்ட அமைச்சர்களும் இருந்தனர்.

அப்போது விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸாருக்கு சார்பாக இருப்பதற்கு மாறாக அந்தப் பொலிஸாரை குற்றவாளியாக்கும் வகையில் அவன்கார்ட் உரிமையாளர்களின் நலன்களைப் பேணுவதற்குக் சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் திலக் மாரப்பன முன்னிலையாகியிருந்தார்.

அதன் விளைவாக அமைச்சர் பொறுப்பில் இருந்து விலகிச் செல்ல அவருக்கு நேரிட்டது. காலப் போக்கில் கூட்டு அரசு வேண்டுமென்றே அவன்கார்ட் விவகாரத்தை மழுங்கடித்தமையினால் மீண்டும் திலக் மாரப்பனவிற்கு அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது.

தற்போது அவருக்கு அயலுறவுத்துறை அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த முயற்சியானது திருடனுக்குப் பதிலாக மற்றும் ஒரு திருடனைப் பணிக்கமர்த்தும் நடவடிக்கையாகவே அமைந்துள்ளது.

அரசுக்குச் சிக்கலுள்ளதை நாம் அறிவோம். திருடர்கள் இல்லாமல் யாரை தெரிவது என்ற சிக்கல் அரசிற்கு உள்ளது. இதற்கு விடையளிக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கே உள்ளது. திருடர்கள் இல்லாத ஆட்சியை அமைப்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் - என்றார். (5)

# தடை உத்தரவை மீளப் பெறுங்கள்

## கோருகின்றனர் உதயங்கவின் சட்டத்தரணிகள்

கொழும்பு, ஓக. 13

இலங்கைக்கான ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவைக் கைது செய்வதற்கும், அவரது வெளிநாட்டுப் பயணங்களுக்கும் தடை விதித்தும் வழங்கப்பட்டுள்ள நீதிமன்ற உத்தரவுகளை மீளப்பெறுமாறும் அவரது சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் மிக் வானூர்தி கொடுக்கல் வாங்கல் ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைக்காக மகிந்த ராஜபக்சவின் உறவினரான உதயங்க வீரதுங்க தேடப்பட்டு வருகின்றார்.

அவர் தொடர்பான வழக்கு கொழும்புக் கோட்டை நீதிவான் மன்றில் விசாரணைக்கு நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவர் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக அடிக்கடி ஒரு நாட்டைவிட்டு மற்றுமொரு நாட்டிற்குச் செல்வதாக நீதிமன்றில் சுட்டிக்காட்டிய குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிசார் அவரது இராஜதந்திரக் கடவுச் சீட்டையும் அவர் பெயரில் இருக்கும் ஏனைய கடவுச் சீட்டுக்களையும் இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு தடை விதிக்கப்பட்டு, அவரைக் கைது செய்து நாட்டிற்கு அழைத்து வருவதற்காகப் பன்னாட்டுப் பொலிசாரின் உதவியை நாடுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைத்தாய் தேவை

கருணை உள்ளம் கொண்ட 30 வயதிற்குக் குறை வான பெண் ஒருவர் IVF மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை சன்மானம் வாழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.

**077 637 5294**

## விற்பனைக்கு

புதிய iPhone 4S 12 000/= மற்றும் புதிய iPhone 5S, 6, 6S விற்பனைக்கு உண்டு. மற்றும் பாவித்த Lap tops 8000/=
தொடர்பு-077 717 2325
(www.iway.lk)

## வாடகைக்கு

இல.137, கஸ்தூரியார் வீதி (நகர மத்தி)
115 அடி நீளம், 13 அடி அகலம் கடை

**077 351 8131**

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஒன்பது மாதங்கள் நிரம்பிய டோமன் (DORBERBAN) விற்பனைக்குண்டு.

**077 602 8735**

## தேவை

முள்ளியவளையில் அமைந்துள்ள கட்டிடப்பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு தகைமையுள்ள ஆண் ஒருவர் தேவை.

**076 826 7703**

## அறை வாடகைக்கு

மன்னார் மூர் வீதியில் இணைந்த சமையலறை மற்றும் குளியலறை வசதிகளுடன் இரு ஆசிரியைகளுக்கு வசதியான அறையொன்று வாடகைக்கு உண்டு.

**077 802 0821, 071 861 3403**

## பணிப்பெண் தேவை

கந்தர்மடம் பரமேஸ்வரா சந்திக்கு அருகில் வசிக்கும் 3பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட பொறுப்புகள் அற்ற பெண் பணியாளர் தேவை. உரிய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல - 5540
C O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## திருநெல்வேலியில் வீடு வாடகைக்கு

திருநெல்வேலி பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனத் தேவைக்கு Or அலுவலகத் தேவைக்கு (Office) பாவிக்கலாம்.

தொடர்பு - 076 857 3798, 077 871 5430

## காணி விற்பனைக்கு

நாவற்குழியிலிருந்து கைதடி நோக்கிச் செல்லும் கண்டி வீதியில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு வலதுபுறமாக 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077214 0459/ 021 222 6697**

## கடைத்தொகுதி வாடகைக்குண்டு

இல. 210 ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கடைத்தொகுதி (கீழ்ப்பகுதியில் ஒரு கடையும். மேற்பகுதியில் 3கடைகளும்) வாடகைக்குண்டு. களஞ்சிய வசதி செய்யக்கூடிய இடமும் உண்டு.

**076 831 3674**

## காணி விற்பனைக்குண்டு

ஊரெழு அந்திரானை என்ற காணியில் 33 பரப்புக் காணியளவில் விற்பனைக்குண்டு. பயிர் செய்வதற்கும் வீடு கட்டுவதற்குமான காணி பிரித்து வாங்கலாம்.

கனக நமநாதன் - சட்டத்தரணி
55, பலாலி வீதி, திருநெல்வேலி.
077 667 5080

## வீடு விற்பனைக்கு

K.K.S. றோட்டில் சம்பியன் ஒழுங்கைக்கு அருகில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக உள்ள ஒழுங்கையில் 3 பரப்பிற்கு சற்று குறைவான காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 3 மாடிக் கட்டடம் 11 அறைகளும் எல்லா அறைகளும் இணைந்த குளியலறையுடன் உள்ள வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-077 346 4756

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1984 ஆம் ஆண்டு பிறந்த 8இல் செவ்வாய், பூராடம் முதலாம் பாதம், கட்டாரில் குவான்ரிட்டி சேவியர் (Quantity Surveyor) ஆக உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. கட்டாருக்கு சென்று வசிக்கக்கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**077 712 0229**

## மணமகள் தேவை

யாழ்.இந்து. Diploma in Accounting படித்த 6' உயரம், Bank இல் தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான அழகிய தொழில் புரியும் மணமகள் தேவை.

**077 552 8882**

## காணி விற்பனைக்கு

சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டையில் 5 ½பரப்புக் காணி விற்பனைக்கு.

**077 372 6685**

## விற்பனைக்கு

பசுமாடுகள், பசுக்கன்றுகள் விற்பனைக்குண்டு.

**078 301 7508**

## வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, கந்தர்மடம், நல்லூர் விரும்பத்தக்கது.

**076 447 2090**

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 29 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும். (4 பரப்பு. 6. 8)

**076 857 3798, 077 871 5430**

## பராமரிப்பாளர் தேவை

வயது முதிர்ந்த பெண் ஒருவரை பராமரிப்பதற்கு ஆள் தேவை.

**077 375 2930/ 077 454 4418**

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
### Dealer Apollo Tyres

அனுபவம் வாய்ந்த விற்பனை பிரதிநிதிகளிற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.
Shansu Motors
299, Stanley Road, Jaffna.

**021 221 9113/ 077 731 0414**

## வேலை வாய்ப்பு

யாழ் மண்ணில் பிரபல்யமான Tourist Hotel இற்கு Room Boy, waiter தேவை. தகுதியானவர்களும் தங்கியிருந்து செயற்படக்கூடியவர்களும் மட்டுமே தொடர்பு கொள்ளவும்.

**077 992 4599/ 076 778 1017**

## கணினி இயக்குநர் தேவை

கணினியில் வேலை செய்யக் கூடிய முழு நாள் அல்லது பகுதிநேர கணினி இயக்குநர் தேவை. நேரில் சமுகமளிக்கவும்.

கனக நமநாதன் - சட்டத்தரணி
55, பலாலி வீதி, திருநெல்வேலி.
077 667 5080

## கணினி/ விஞ்ஞான வகுப்புக்கள்

கிளிநொச்சியில் பட்டதாரி ஆசிரியரால் கணித, விஞ்ஞான பாடங்கள் தரம் 06 - 11 வரை கற்பிக்கப்படும்.

**077 026 1966**

## வீடு வளவு விற்பனைக்குண்டு

சுதுமலை தெற்கு, மானிப்பாயில் அமைந்துள்ள 02 பரப்புக்காணியும், 02 அறை விறாந்தையுடன் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு வளவு விற்பனைக்குண்டு. விலை 35 லட்சம்
தொடர்பு - 076 721 5228
பார்வையிடும் நேரம் - பி.ப. 2 மணி தொடக்கம் 4 மணி வரை

## பெயர் மாற்றம்

சுருவில் வீதி, ஊர்காவற்துறையைச் சேர்ந்த நாகலிங்கம் நாகம்மா ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து நாகலிங்கம் நாகேஸ்வரி என பெயர்மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் எனது கையொப்பத்தை நாகலிங்கம் நாகேஸ்வரி எனவே இடுவேன் என உறுதியளிக்கின்றேன்.

நாகலிங்கம் நாகேஸ்வரி

## தேவை

நாற்றுப்போடுவதற்கு இந்தப் போகத்தில் சேகரிக்கப்பட்ட வேப்பம் கொட்டையும் இலுப்பைக் கொட்டையும் தேவை. விற்க விரும்புவோர் பின்வரும் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளவும்.

## விற்பனைக்கு

தேக்கு அலுமாரி - 1

**075 743 2461**

## கட்டார் வேலைவாய்ப்பு ( சுப்பமார்கட் )



ஹெல்பர் - 30 பேர் 900 - 1200 Qrs
சம்பளம் : Rs.37,500 - Rs.50,400
டேட்டா என்றி ஒப்பரேட்டர் - 15 பேர்
1300 - 1500 Qrs சம்பளம் : Rs.54,600 - Rs.63,000
கஷியர் - 10 பேர் 1300 - 1500 Qrs
1300 - 1500 Qrs சம்பளம் : Rs.54,600 - Rs.63,000
மீன் வெட்டுபவர் - 10 பேர்
900 - 1200 Qrs சம்பளம் : Rs.37,500 - Rs.50,400
சேல்ஸ்மென் - 30 பேர்
1300 - 1500 Qrs சம்பளம் : Rs.54,600 - Rs.63,000
A/C ரெக்னீசியன் - 10 பேர்
1800 Qrs Rs.75,600
எலக்சியன் - 10 பேர் 1300 - 1500 Qrs
சம்பளம் : Rs.54,600 - Rs.63,000

**INTERVIEW**
**14,15 - 08 - 2017**



max adz

- தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம்
- வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் / வாரத்தில் 48 மணிநேரம்
- ஒரு நாள் லீவு
- இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும் ஒவ்வொரு 2 வருட சேவை முடிவின் பின்னர்.
- உணவு வழங்கப்படும்.
- ஏனைய நிபந்தனைகளும், விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

RODNEY
FOREIGN EMPLOYMENT AGENCY
இல. 2928-2/1, ஹவ்லொக் றோட்,
கொழும்பு - 05.
பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்
1 QRS = Rs.42.00
Hot Line : 072 720 0005
0112552598 / 0727300005
0726999886

## கடை விற்பனைக்கு

சுன்னாகம் சந்தியில் காங்கேசன்-துறை வீதி 15X72 நீள அகல கடை 90 லட்சம் விற்பனைக்கு உண்டு.

**077 343 4005**

## கல்லீரல் பாதிப்பிலிருந்து மீட்சி

கல்லீரல் கொழுப்பு, ஹெபடைடீஸ், மஞ்சள் காமாலை, கல்லீரல் இளைநார் வளர்ச்சியடைதல், கல்லீரல் புற்றுநோய் போன்ற கல்லீரல் பாதிப்புகள், மதுபானப்பாவனையினால் அல்லது வேறுகாரணிகளினால் உருவாகும் வைரஸ் தொற்று அல்லது வீக்கத்தினால் ஏற்படும்.

அறிகுறிகள் { கல்லீரலில் ஏற்படும் வலி, களைப்பு, பசியின்மை, குமட்டல், கண்கள் மஞ்சள் நிறமாதல், நிறை குறைதல், நீர்க்கோவை, அரிப்பு

எமது நிரூபிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உட்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட கல்லீரல் கலங்கள் மீளமைக்கப்படும்.




FAIR PHARMA (PVT) LTD

**Hotline:**
**0777555600**
**0777708310**
**0777708330**

செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.
**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் - திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரபல பல் வைத்தியசாலைக்கு தாதியர்களுக்கான வேலைவாய்ப்புகள் உண்டு.
தனியார் தாதிய பயிற்சிநெறியை நிறைவு செய்தவர்களுக்கு முன்னிுரிமை அளிக்கப்படும்

**077 234 6034/021 221 2599**

## ஆய்வுகூட பயிற்சியாளர் தேவை

எமது நிறுவனத்திற்கு ஆய்வுகூட தொழில்நுட்ப பயிற்சியாளர் தேவை. G.C.E (A/L) உயிரியல் பிரிவில் கல்விகற்ற இருபாலரும் இணைந்து கொள்ளலாம். இப்பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புத் தொகையும் முடிவில் சான்றிதழும் வழங்கப்படும். சுயவிவரக் கோவையை 17.08.2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

Chairman,
Green Visva Lanka Fram Developers (Guarantee) Ltd.
Keerimalai Road,
Vilavely, Chankanai.

## விற்பனைக்குண்டு

எம்மிடம் 40Kg கோதுமைத் தவிடு மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு (30 மூடைகளுக்கு மேல்) 1400/- இற்கு வழங்கப்படும்.

**077 362 8944**

## வீடு வாடகைக்குண்டு

ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கு மட்டும்

**077 343 2422, 075 777 2158**

## அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் பகிரங்க ஏலவிற்பனை.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தில் சங்கிலி வாட்களின்(ChainSaw) பகிரங்க ஏல விற்பனை பின்வரும் அரசாங்க மரக்கூட்டுத்தாபன விற்பனை நிலையங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

| அரசாங்க மரக்கூட்டுத்தாபன விற்பனை நிலையம் | தொலைபேசி இலக்கம் | எண்ணிக்கை | ஏலவிற்பனை நடைபெறும் திகதி |
|---|---|---|---|
| கிளிநொச்சி | 021 228 5409 | 153 | 17.08.2017 |
| ஒட்டுசுட்டான் | [illegible] | 208 | 18.08.201[illegible] |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சோதனைக் காலம்

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளில் சிங்கள அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் தொடர்ந்து பின்னடித்து வருவதாக உலக நாடுகளின் தூதுவர்களிடம் வெளிப்படையாகவே சொல்லத் தொடங்கியிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அண்மையில் தன்னைச் சந்தித்த நோர்வே மற்றும் அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகளிடம் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கை இந்த மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கான சாத்தியங்கள் பிரகாசமாகத் தெரியவில்லை. அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு கடந்த 10ஆம் திகதி கூடியபோது, இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கான திகதி பற்றி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அதேசமயத்தில் திகதி ஏதும் குறிப்பிடப்படாமல் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

ஓரிரு மாதங்களுக்கு முன்னரே இந்த இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அதன் மீது தமக்கு மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், பொது எதிரணி எனப்படும் மகிந்த தரப்பும் தெரிவித்திருந்தன. அவற்றை எழுத்தில் தருமாறும், அவற்றையும் இடைக்கால அறிக்கையுடன் சேர்த்து நாடாளுமன்றத்தில் முன்வைப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த முடிவு எடுக்கப்பட்டதன் பின்னர் மூன்று தடவைகள் வழிகாட்டல் குழுக் கூட்டம் நடைபெற்றது. ஆனால் அந்த இரு தரப்புகளும் தமது இடைக்கால அறிக்கையுடன் மாறுபடும் தமது முன்மொழிவுகளை முன்வைக்கவில்லை. இருந்தபோதும் அந்த இரு கட்சிகளுக்கும் மேலும் இருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.


இந்தக் கால அவகாசம் முடிவடைவதற்கே மாதக் கடைசியாகிவிடும் என்பதால், இந்த மாதத்திற்குள் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்திற்கு வரும் அறிகுறி இல்லை. போதாததற்கு சுதந்திரக் கட்சி மீதும், கூட்டு எதிரணி மீதும் குற்றஞ்சாட்டிவிட்டு இந்த முயற்சியிலிருந்து நழுவிவிடும் போக்கையே ஐக்கிய தேசியக் கட்சியினரும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் செய்கின்றனர்.

நிலமை இப்படி மோசமாகி வருவதை அடுத்தே சம்பந்தன் அரசமைப்பு முயற்சிகள் தாமதம் அடைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சுயநலனும் காரணம் என்று அமெரிக்க காரங்கிரஸ் உறுப்பினர்களைச் சந்தித்தபோது சாடினார். அதற்கு மறுநாளே நோர்வேத் தூதுவரைச் சந்தித்தபோது சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டு எதிரணி ஆகிய முத்தரப்புகளுமே தாமதத்துக்குக் காரணம் என்பதை அழுத்திச் சொன்னார்.

புதிய அரசமைப்புக்கான இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டபோதே, அதன் மீது தமிழ் மக்களுக்குப் பெரும் நம்பிக்கை இருந்ததில்லை. சிங்களத் தலைவர்கள் தாமாக முன்வந்து அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளப் போவதில்லை என்பதை அவர்கள் உறுதியாக நம்பினர். ஆனால், இந்தத் தடவை உலக நாடுகளின் பார்வை, அதிலும் குறிப்பாகச் சக்தி வாய்ந்த நாடுகளின் பார்வை, இந்தப் பிரச்சினையின் மீது திரும்பியிருப்பதால் இலங்கை அரசு அவ்வளவு இலகுவில் நழுவிச் சென்றுவிட முடியாது, எதையாவது செய்தேயாகவேண்டும் என்று கூட்டமைப்பு நம்பியது, அதன் அடிப்படையில் செயற்பட்டது.

இப்போது உலக நாடுகள் அப்படி எதையாவது செய்துவிடுமா என்பதைச் சோதிப்பதற்கான காலம் கனிந்துள்ளது. தன்னைச் சந்திக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் அரசமைப்பு உருவாக்க முயற்சியிலிருந்து அரசு விலகிச்செல்லும் போக்குக் குறித்து கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முறையிட ஆரம்பித்திருப்பதன் பின்னணியில், கூட்டமைப்பு இதுவரையில் நம்பியிருந்தது சரியா பிழையா என்பது தெரிந்துவிடும். குறிப்பாக இந்த விடயத்தில் இந்தியாவைக் கூட்டமைப்பின் தலைமை தீவிரமாக நம்பியது. இப்போது இந்தியா இந்த விடயத்தில் ஏதாவது செய்யுமா என்பதும் தெரியவந்துவிடும். எனவே இதுவொரு சோதனைக்காலம். நம்பிக்கைகளுக்கும் கட்சிகளுக்குமான சோதனைக் காலம்.





# முதலமைச்சரின் ஆட்டம் முடிவுக்கு வந்துவிடுமா?

■ சேரலாதன்

கூட்டமைப்புக்கு விரோதமாகச் சகல வகையிலும் செயற்பட்டுக்கொண்டு, நான் அந்த அமைப்புக்கு எதிரானவன் அல்லவென வடக்கு முதலமைச்சர் கூறுவதைக் கேட்டு அழுவதா? அல்லது சிரிப்பதா? எனத் தெரியவில்லை. இவர் இனியும் ஒன்றுமறியாத அப்பாவிபோன்று வேடம் புனைவது தேவையற்ற ஒன்றாகும். ஏனென்றால், அவரது இரட்டை வேடம் ஏற்கனவே அம்பலமாக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஒருவர், ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் பதவியை ஏற்பதென்பது அவருக்குக் கௌரவக் குறைவானதொன்றென நீதித்துறையுடன் தொடர்புபட்டவர்கள் கூறுகின்றனர். ஆனால் சி. வி. விக்னேஸ்வரன் இதையெல்லாம் பொருட்படுத்தாமல், வடக்கு மாகாண முதலமைச்சரின் கதிரையில் வந்து அமர்ந்து கொண்டார். அமர்ந்துகொண்டார் எனக் கூறுவதற்குப் பதிலாக அமர்த்தப்பட்டார் எனக் கூறுவதுதான் சரியானது.

### வெளியில் தெரிய வந்த முதலமைச்சரது உண்மையான முகம்

முதலமைச்சரது உண்மையான முகம் தற்போது மக்களுக்குத் தெரிய வந்துள்ளது. தமிழர்களிடையே குழப்பத்தையும், பிளவையும் ஏற்படுத்துவதற்காகவா இந்த முன்னாள் நீதிபதி கொழும்பிலிருந்து வடபகுதிக்கு அழைத்து வரப்பட்டார்? என்ற கேள்விகூடத் தற்போது எழுந்து நிற்கின்றது. அந்த அளவுக்கு மக்களின் நம்பகத் தன்மையை வடக்கு முதலமைச்சர் இழந்து நிற்கின்றார்.

தாமே அமைத்த விசாரணைக் குழுவின் பரிந்துரைகளைக் குப்பைக் கூடைக்குள் வீசிய அவரது செயல் நகைப்புக்குரியது. ஆனால் ஊழல் புரிந்தவர்களைக் காப்பாற்றுவதற்கு உறுதுணையாக இருப்பவர்களும் குற்றவாளிகள்தான் என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

இதேவேளை கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற நான்கு கட்சிகளில் பெரிய கட்சியான தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய சிறிய கட்சிகள் மூன்றும் முதலமைச்சருக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாகவே முதலமைச்சரால் தொடர்ந்து பதவியில் நீடிக்க முடிகின்றது. இதைவிடத் தமிழ் அரசுக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களில் சிலரும் முதலமைச்சருக்குப் பின்னால் நிற்கின்றனர். முண்டு கொடுத்து வருகின்றனர். இவர்களில் ஒருவர் அமைச்சராகிவிட்டார். இவர்கள் அனைவரும் கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பாக ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தாம் பதவிச் சுகத்தை அனுபவிப்பதற்கு கூட்டமைப்பு காரணமா? அல்லது வேறு எவராவது காரணமா? என்பதையும் அவர்கள் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். தம்மைக் கௌரவமான மனிதர்களாய் உலவுவதற்கு உதவிய அந்த அமைப்பைக் கூறுபோடுவதற்குச் சிலர் முயற்சி செய்யும்போது அதை ஆதரிப்பதும், வேடிக்கை பார்ப்பதும் இவர்களுக்கு நியாயமானதாகத் தெரிகின்றதா?

### பதவியேற்ற நாள்முதல் கூட்டமைப்புக்கு விரோதமான போக்கை கையாளுகிறார் முதலமைச்சர்

சி. வி. விக்னேஸ்வரன் தாம் முதலமைச்சராகப் பதவியேற்ற நாளிலிருந்து இன்றுவரை, கூட்டமைப்புக்கு விரோதமானவராக, தம்மையொரு மக்கள் தலைவனாக உயர்த்திக் காட்டும் வகையிலும் தமது செயற்பாடுகளை வகுத்துக் கொண்டுள்ளார். ஆனால் இவற்றையெல்லாம் மற்றவர்கள் புரிந்து கொள்ளாதவாறு நடந்து கொள்கிறார். அவரது இத்தகைய செயற்பாடுகளை நாம் இனியும் அனுமதிக்க வேண்டுமா? என்பதைத் தமிழ் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

சரியாகவும், நேர்மையாகவும் செயற்படுகின்ற ஒருவரை எவருமே ஆதரிக்கலாம். அவருக்கு முரண்டு கொடுக்கலாம். ஆனால் தவறான பாதையில் செல்கின்ற ஒருவரை ஆதரிப்பதும், அவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வதும் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினரான எம். ஏ. சுமந்திரன் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர் - ஒரு மூத்த சட்டத்தரணி. கூட்டமைப்பின் தலைமைக்கு மிகவும் வேண்டியவர். விக்னேஸ்வரன் முதலமைச்சராக வருவதற்குப் பெரும் பங்காற்றியவர். ஆனால் முதலமைச்சரின் தவறான செயற்பாடுகளை கூட்டமைப்பின் தலைமைக்கு முதலில் சுட்டிக் காட்டியவரும் இவர்தான். ஆனால் அப்போது இவர் வெளியிட்ட கருத்துக்கள் மற்றவர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டன. விக்னேஸ்வரனை முற்று முழுதாக நம்பியவர்கள் இவரைத் தூற்றவும் செய்தனர். கூட்டமைப்பின் தலைமைகூட இவரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அன்று விக்னேஸ்வரன் மீதான மயக்கம் அனைவரையும் கட்டிப் போட்டிருந்தது. சுமந்திரன் அன்று கூறியவை மிகச் சரியானவை என்பது இன்றுதான் பலருக்கும் புரிகின்றது. சுமந்திரன் கூறியது போன்று முதலமைச்சருக்கு எதிராக அப்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இன்று உருவாகியுள்ள மிக மோசமான நிலைமை உருவாகியிருக்க மாட்டாது.

### கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டே அதனை விமர்சிப்பது தவறு

சி. வி. விக்னேஸ்வரனுக்குத் தனித்துநின்று அரசியல் செய்வதற்கான சகல உரிமைகளும் உண்டு. அவரது அரசியல் பயணத்தை எவருமே தடுத்து நிறுத்திவிட முடியாது. ஆனால் கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு அதற்கு எதிராக அவர் அரசியல் செய்வதை எவர்தான் ஏற்றுக்கொள்வார்கள்?

இன்று தமிழ் அரசுக்கட்சிக்கும், கூட்டமைப்புக்கும் விரோதமான சக்திகள் யாவும் வடக்கு முதலமைச்சரின் கடைக்கண் பார்வைக்காகக் காத்து நிற்கின்றன. நடந்து முடிந்த தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் முதலமைச்சரால் பாவவிமோசனம் கிடைக்காதாவெனக் காத்துக்கிடக்கின்றனர். ஆனால் பாவப்பட்டவர்கள் மற்றவர்களுக்குப் பாவவிமோசனம் வழங்குவதென்பது நடக்கக் கூடிய காரியமாகத் தெரியவில்லை.

கூட்டமைப்பும், தமிழ் அரசுக் கட்சியும் இனியும் பொறுமை காப்பது, அவற்றின் ஆதரவாளர்களை வெறுப்படையச் செய்துவிடும். இங்கே இடம்பெறுகின்ற சம்பவங்களையெல்லாம் அவர்கள் பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்களே ஒழிய அவற்றை ஏற்றுக் கொண்டவர்களல்ல. ஆகவே, இனியும் முதலமைச்சரின் நாடகத்தை வேடிக்கை பார்க்காது அதற்கொரு முற்றுப்புள்ளி இடப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டுமொரு போர்ச் சூழலுக்குள் யாழ்.குடாநாடு

இந்துமதி

யாழ்.குடா நாட்டில் திடீர் சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறவிருப்பதாகப் பொலிஸ் மா அதிபர் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கிறார். இந்த நடவடிக்கைகளில் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் கடற்படையினரும் ஈடுபடவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இது மீண்டுமொரு போர்ச் சூழலுக்கான அறிகுறியாகவே தென்படுகின்றது.

அண்மைய நாள்களாக குடாநாடு வன்முறைச் சம்பவங்களை எதிர்கொண்டு வருகின்றது. நீதிபதி இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச் சூடு, வடமராட்சியில் பொலிஸார் மீது தாக்குதல், கொக்குவிலில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டு மோசமாகக் காயமடைந்தமை ஆகிய சம்பவங்கள் இவற்றுள் முக்கியமானவை.

இவற்றைவிடச் சில வாள்வெட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சமூக விரோதிகள் ஆயுதங்களுடன் பகிரங்கமாக நடமாடுவதையும் காணமுடிகின்றது. இவற்றினால் மக்கள் பெரும் அச்சத்தினுள் மூழ்கியுள்ள னர். இந்த நிலையில் பொலிஸார் மீதான வாள்வெட்டுச் சம்பவம் அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது. எதிரணியினர் வடக்கில் பொலிஸாருக்குப் பாதுகாப்பு இல்லையெனக் கூச்சல் போட்டு வருகின்றனர். இது தொடர்பாக மக்கள் மத்தியில் குரோதத்தைத் தூண்டி விடுகின்றனர். இதனால் வடக்கின் அசாதாரண நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டிய கட்டாயத்தினுள் அரசு தள்ளப்பட்டுவிட்டது.

### போர் ஓய்ந்த பின்னர் வடபகுதியில் அமைதி

போர் ஓய்ந்தபின்னர், வட பகுதியில் அமைதி நிலவுவதாகவே கூற வேண்டும். போர்க்காலம் போன்று படை நடவடிக்கைகள் இடம்பெறாததால் மக்கள் அச்சமின்றி வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள சில குழுக்களின் நடவடிக்கைகள்தான், மக்களை அச்சத்தில் ஆழ்த்தி வருகின்றன. தற்போது இதையே காரணம் காட்டிப் படையினரைக் களத்தில் இறங்குவதற்குஅரசுதீர்மானித்துள்ளது. வன்செயல்களின் பின்னணியில் முன்னாள் புலிப்போராளிகளும் உள்ளனர் என்று பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளமை, முன்னாள்போராளிகளின் குடும்பத்தினரைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது. நாளை என்ன நடக்குமோ என்ற அச்ச நிலைக்குள் இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். புனர்வாழ்வு பெற்ற போராளிகளில் பலரும் தமது குடும்பங்களுடன் இணைந்து கொண்டு அமைதியாக வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர். கடுமையான பொருளாதார நெருக்கடிகளையும் இவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் ஒட்டுமொத்தமாக இதற்கான பழியை இவர்கள் மீது போட்டுவிட முடியாது. மேலும் கடந்த ஒன்பது ஆண்டுகளாக இல்லாத திடீர் சுற்றிவளைப்புக்களும் தேடுதல் நடவடிக்கைகளும் குடாநாட்டு மக்களைக் குழப்பவே செய்யும். இதனைப் போக்க வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் முக்கிய பொறுப்பாகும். சுற்றிவளைப்புக்கள் இடம்பெறும்போது அந்தப் பிரதேசங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது மாகாணசபை உறுப்பினர்களின் பிரசன்னம் மிகவும் அவசியமானதாகும். இதனால் மக்கள் ஓரளவு அச்சமில்லாத நிலையில் காணப்படுவார்கள். அத்துடன் அது மக்களுக்குப் பாதுகாப்பாகவும் இருக்கும்.


### தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பு

இதேவேளை குடாநாட்டில் முப்படைகளைக் களமிறக்குவதை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முற்றாக எதிர்த்துள்ளது. பொலிஸார் மீதான வாள்வெட்டுச் சம்பவத்தைக் காரணம்காட்டி குடாநாட்டு மக்கள் மத்தியில் முப்படையினரையும் களமிறக்குவதை ஒரு போதுமே ஏற்றுக் கொள்ள முடியாதென இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். ஆனால் இது ஏற்றுக் கொள்ளப்படுமா? என்பது தெரியவில்லை. ஆனால் வெறும் அறிக்கையோடு மட்டுமே நின்று விடாது அரசின் உயர் தலைவர்களுடன் கதைத்து இதற்கு ஒரு தீர்வைக் காண வேண்டியது தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான கூட்டமைப்பி னரின் முக்கிய கடமையாகும்.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அவர் கூட்டமைப்பில் மட்டுமல்லாது தமிழ் மக்கள் பேரவையிலும் முக்கிய பொறுப்புக்களை வகிப்பதால் இதற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன. மேலும் வடக்கு மாகாண சபையின் மூலமாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

குடாநாட்டின் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் எவருக்குமே கருத்து வேறுபாடு கிடையாது. குற்றவாளிகள் எவராக இருந்தாலும் கைது செய்யப்பட்டுத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். வாள்வெட்டு தெருச்சண்டை, திருட்டு, கொள்ளை, வழிப்பறி ஆகியவை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இதற்கு மேலதிகப் பொலிஸாரை ஈடுபடுத்தி நடவடிக்கை எடுப்பதே சிறந்த நடைமுறையாக இருக்கும். இதனால் பொது மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட மாட்டாது. ஆனால் திடீர் சுற்றிவளைப்புக்களிலும் தேடுதல் நடவடிக்கையிலும் முப்படையினரும் ஈடுபடும்போது மக்கள் குழப்பமடையவே செய்வார்கள்.

இதேவேளை குடாநாட்டில் இடம் பெற்ற சில சம்பவங்கள் இனவாதிகளுக்குச் சாதகமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளதாகவும் படையினரை அங்கிருந்து அகற்றக்கூடாதெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போதைய சூழ்நிலையில் வடக்கில்



இருந்து படைமுகாம்களை அகற்ற முடியாதென்ற தோரணையில் கருத்து வெளியிட்டுள்ளது. அத்துடன் முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு தொடர்பாகவும் அந்தக் கட்சி சந்தேகம் வெளியிட்டுள்ளது. எம்மவர்கள் சிலரது தீய நடவடிக்கைகள் இனவாதிகளுக்குத் தீனி போடுவதை இதன் மூலமாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

### குடாநாட்டு இளைஞர்கள் உறுதியாக இருக்க வேண்டும்

குடாநாட்டு இளைஞர்கள் திட்டமிட்ட வகையில் தீய வழிகளில் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் எனக் கூறப்படுவதுண்டு. ஆனால் இதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ள முடியாது. இங்குள்ள இளைஞர்கள் உறுதியாக இருந்தால் எவராலும் எதுவுமே செய்துவிட முடியாது. கடந்த காலங்களில் ஒரு தலைவனின் ஆணைக்குட்பட்டு இலட்சிய வெறியுடன் போராடிய இளைஞர்களையும் நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தீய வழிகளில் செல்கின்ற இளைஞர்களும் இவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும். இன்று இனவாதிகளுக்கு வாய்ப்பை வழங்கிவிட்டு விழி பிதுங்கி நிற்கின்றோம்.

குடாநாட்டில் முப்படையினரை அரசு ஈடுபடுத்துமாயின் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களுக்கும் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும். அத்துடன் மீண்டுமொரு போர்ச் சூழலை இங்கு ஏற்படுத்த முயலும் எந்தவொரு செயலையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

## ஆசிரியருக்கான கடிதம்

### புண்ணியம் பூத்தது

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக எமது மூதாதையர்களால் பல்வகை நோக்கங்களுக்காகத் திட்டமிட்டு அமைக்கப்பட்டவையே கேணிகள், ஆவுரஞ்சிக்கல்லுகள், சுமைதாங்கிகள், தொட்டிகள், சங்கடம் படலைகள், மடங்கள், பொதுக் கிணறுகள் என்பவையாகும்.

இவை வாழ்விழந்து, கவனிப்பாரற்று, தூர்ந்துபோய் மௌனித்திருப்பதைக் கவலையோடு உதயன் தனது வாசகர் திருமுகப் பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தான். ஆவுரஞ்சும் கல், கேணிகளைச் சீரமைக்கத்திட்டம் எனும் தலைப்பில் உதயனில் அண்மையில் வெளிவந்த செய்தியின்படி வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு இவற்றைப் புனரமைக்க, மேம்படுத்த ஆவன புரிந்துள்ளமை புண்ணியமே! மூதாதையர்களின் புண்ணியம் பூத்துவிட்டதில் மகிழ்ச்சியே!

கே.எஸ்.சிவஞானராஜா

### பாராட்டும் கௌரவமும் சிறந்த ஊக்குவிப்பு மருந்து

எந்தவொரு துறையாயினும், இன்றைய காலகட்டத்தில் குறித்த அந்தத் துறையில் செயற்படுவோர் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கப்பட்டால்தான் அவர்கள் தமது பணியில் மென்மேலும் உற்சாகத்தோடு சிறப்பாகப் பணியாற்ற முயல்வர். இன்றைய பன்னாட்டு மற்றும் உள்ளூர் வர்த்தகத்துறைசார் தரப்பினர்களது வெற்றியின் இரகசியம் இதுவே.

அந்தவகையில் யாழ். மாவட்ட சிறு தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப்பொருள்களை அறிமுகப்படுத்தவும் சந்தைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கிலும் இந்த வாரத்தில் நடத்தும் கண்காட்சி முயற்சி பாராட்டுக்கு உரியதொன்று. யாழ் மாவட்டச் செயலக சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் நல்லூர் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் இடம்பெறும் இந்தக் கண்காட்சி, குறித்த துறையினரது உற்பத்திச் செயற்பாடுகளுக்கு உற்சாகம் ஊட்ட வல்லது; இன்றைய காலத்துத் தேவைகளில் முக்கியமான, பொருத்தமான ஒன்றும்கூட.

கு. இரவீந்திரன்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலை விதி மீறலுக்கு விதிக்கும் தண்டம் அதிகம்

## கவலைப்படுகிறார் மகிந்த

கொழும்பு, ஓக. 13
போக்குவரத்து விதி மீறல்களுக்கான குறைந்தபட்ச தண்டத் தொகை அதிகரிப்பானது நியாய மற்றது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
அரசின் இந்த நடவடிக்கையால் குறைந்த வருமானம் பெறுவோரும், முச்சக்கர வண்டி ஓட்டுநர்களும் பெரும் சிக்கல்களை எதிர் கொள்வர்.
மேலும், ரவி கருணாநாயக்க அயலுறவுத்துறை அமைச்சுப் பதவியிலிருந்து விலகியமை வெறுமனே ஒரு கண்துடைப்பு. இந்த ஊழலுக்குப் பின்னால் பல குற்றவாளிகள் உள்ளனர். மக்கள் நீதிமன்றத்தில் கை வைக்க யாருக்கும் முடியாது. நாட்டில் என்ன நடைபெறுகின்றது என்பதை மக்கள் நன்கு அவதானித்துக் கொண்டே இருக்கின்றனர். மக்கள் தற்பொழுது விழிப்படைந்துள்ளனர். இனியும் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது - என்றார். (5)

# வீரமுனை படுகொலை நேற்று நினைவு கூரல்



அம்பாறை வீரமுனையில் 400 க்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட தினத்தின் 27 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று நினைவு கூரப் பட்டது. பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் நினைவிடத்தில் ஒன்றுகூடி உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர். சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக வீரமுனை மற்றும் அதன் சுற்று வட்டக்கிராமங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், வீரமுனை இராமகிருஸ்ண மிசன் பாடசாலை ஆகியவற்றுக்குள் தஞ்சமடைந்திருந்தனர். 1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி ஊர்காவல் படைக் குழுவினரால் 400க்கும் அதிகமான பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டனர். படுகொலைகள் இடம் பெற்று 27 ஆண்டுகள் கடந்துள்ளள்ளன. இதுவரை நீதி கிடைக்கப்பெறவில்லையென மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ-10)

32ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
கமலாதேவி சுப்பிரமணியம்
(முன்னாள் ஆசிரியை - றோ.க.த.க.பாடசாலை, கோப்பாய் தெற்கு)



மண்ணில் 10.02.1956
விண்ணில் 10.08.1985
திதி:- நவமி (16.08.2017)

32 ஆண்டென்ன எத்தனை ஜென்மமானாலும்
எம் தாயைப் போல காண்போமோ?
கண்ணுக்குள் வைத்து காத்த மனைவியே!
கண்ணீருடன் நிற்கின்றோம் உமைப்பிரிந்து
எம் இதயத்தின் தெய்வமே என்றும்
உங்களை மறக்க முடியாதம்மா.....

நீங்காத நினைவுடன்...
கணவர் -சுப்பிரமணியம்
மகன் - சு.சுதர்சன் (பொறியியலாளர்)
கோப்பாய்
கிறிஸ்தவ கல்லூரி முன்பாக,
கோப்பாய்.


# 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு ஆண்டு இறுதிக்குள் இடமாற்றம்

கொழும்பு, ஓக. 13
தேசிய பாடசாலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றிவரும் பத்தாயிரம் ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு முடிவடைவதற்குள் இடமாற்றம் வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.
இந்த விடயம் தொடர்பில் அந்த அமைச்சு ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தி உடன்பாட்டுக்கு வந்துள்ளது.
ஆசிரிய இடமாற்றம் தொடர்பில் அந்த மாகாணங்களில் ஆசிரிய இடமாற்றச் சபைகளை நிறுவுவதற்கும் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அந்தச் சபைகள் ஊடாக இடமாற்றங்கள் நடைபெறவுள்ளன. ஆசிரிய இடமாற்ற நடவடிக்கைகள் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதும் முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் காயம்

கொழும்பு, ஓக.13
பத்தேகம - கொடவத்த தெற்கு பிரதேசத்தில் வீடு ஒன்றில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிகாலை இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில், ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் கராப்பிடிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
பத்தேகம நீதிவான் நீதிமன்றின் பின் புறத்தில் உள்ள வீட்டிலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர் கதவை உடைத்து வீட்டினுள் சென்றுள்ளார். வீட்டில் நித்திரையிலிருந்த நபரை சுட்டு விட்டுதப்பிச் செல்வதற்கு முயன்றுள்ளார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் மற்றும் அவரது மனைவி துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபருடன் சண்டையிட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் பொருள் ஒன்றால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்துள்ளார். காயத்துடன் சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் பத்தேகம காவற்றுறையினரால் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் கைபேசி மற்றும் கொண்டு வந்த துப்பாக்கியை கைவிட்டுச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

மரண அறிவித்தல்




வல்லிபுரம் கார்த்திகேசு

யாழ். மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கார்த்திகேசு கடந்த 09.08.2017 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், சுகுமாரன் (சுகு - சுவிஸ்), சுமங்கலா (சுமதி - லண்டன்), சுதாகரன் (கரன் ஜேர்மனி), மோகனாம்பாள் (மோகனா - லண்டன்), விஜேந்திரன் (விஜய் சுவிஸ்), ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலசிங்கம், கருணாகரன், சிறிதரன், விஜிதா, பகிர்தா, சங்கீதா ஆகியோரின் அன்பு மாமனும், சுபாசினி, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், இலக்கியா, தாரங்கி, இலக்சன், சங்கீர்த்தனா, கௌசிகன், சந்தூஸ்[illegible], சாம்பகி, காவியன், [illegible], அக்ஷயன், அனுஷயன், அஸ்மி[illegible]ன், நிறோசன், கபிலன், [illegible], கஸ்தூரி, கயனிகா ஆகியோரின் அன்புப் பேரனும், நயனியாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [illegible] 2017 ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது [illegible] நடைபெற்று [illegible] எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் [illegible]

தகவல்
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்



செல்வநாயகம் கணேசலிங்கம்

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் கணேசலிங்கம் 11.08.2017 வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கோடை செல்வநாயகம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான களபூமி சுப்பிரமணியம் - அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், தவபாக்கியத்தின் பாசமிகு கணவரும், பிரியதர்ஷினியின் (Office - in - Charge, Srilanka State Trading Corporation) பாசமிகு தந்தையும், லீலா, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் நாகேஸ்வரி, செல்வராணி, சரோசா (டென்மார்க்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், அருளையா, காலஞ்சென்ற கனகேந்திரம் மற்றும் சவுந்தரம், நமசிவாயம் ஆகியோரின் மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 826/17, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
077 973 0401, 071 400 5892

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு, ஓக. 13

திருகோணமலை புல்மோட்டை முதன்மைச் சாலையில், குச்சவெளிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புடவைக்கட்டு பகுதியைச்சேர்ந்த அன்வர் முகம்மட் சஜித் (வயது24) உயிரிழந்துள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த நஸார் பௌஸ் (வயது19) படுகாயமடைந்துள்ளதார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். "திருகோணமலையிலிருந்து புடவைக்கட்டுக்கு வந்த இளைஞர்கள் கடற்றொழிலுக்காகச் செல்ல வேண்டியிருப்பதினால் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்து பேருந்தினை முந்திச் செல்ல முற்பட்ட வேளை மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகினர்" எனத் தமது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5)




தொடர்பு
இந்திக - 0774 636 345 - கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டம்
ரங்கநாத - 0777 283 095 - காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டம்
ஹர்ஷ - 0773 497 641 - கம்பஹா | கேகாலை | கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டம்
ஜனக - 0771 507 552 - குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டம்
ரவீந்திர - 0777 215 746 - அநுராதபுரம் | பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டம்
ஜீவன் - 0772 057 660 - பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டம்
நீல்காந்த் - 0773 748 155 - அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டம்
றொஹான் - 0777 782 739 - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம்
கனேஷ் - 0777 419 411 - திருகோணமலை மாவட்டம்
றினோஷான் - 0773 358 305 - மன்னார் மற்றும் வவுனியா மாவட்டம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டின் ஆரோக்கியமான அமைவு

## பார்வைக்குறைபாடு உடையவர்களுக்கான பணிவிடை

மருத்துவர் பொ.ஜெசிதரன்

வயதுடன் ஏற்படும் பார்வைக்குறைவின் பின்னராகவோ அல்லது பார்வைக்குறைபாடுடையவிருந்தினர்ளங்களுடையவீடுகளுக்கு வருகை தரும் போதோ வீடுகள் அவர்களுக்கு நட்பானதாகவும், ஏற்ற விதத்திலும் பெரும்பாலும் அமைந்திருப்பதில்லை. அவ்வாறு அமையாததன் காரணமாக பல உள அசௌகரியங்களுக்கும், உடல் காயங்களுக்கும் உள்ளாக நேரிடுகின்றது. மிகுந்த விருப்போடு கட்டிய வீடு பார்வைக்குறைவின் பின்னர் வாழ்வதற்கு அசௌகரியமானதாகத் தோன்றுவது எதனால் என்ற கேள்விகளுக்கு பதில் கண்டுகொள்வது நன்று. அழகியலுக்கு முன்னுரிமை கொடுத்து அமைக்கப்படும் வீடுகளில் பார்வைக்குறைபாடு உள்ளவர்களும் வாழ்வதற்கு ஏற்றவகையில் சில அம்சங்களை இணைத்துக் கொண்டால் வேண்டத்தகாத விளைவுகளை தவிர்க்கலாம். புதிதாக வீடுகளை அமைக்கும் போது நாம் கவனிக்க வேண்டிய சில விடயங்கள் குறித்து நோக்குவோம்.

**தரை அமைப்பு**

பார்வைக் குறைபாடுடைய அங்கத்தவர் பயன்படுத்தும் பகுதி வழுக்கும் தரை அமைப்பு அற்றதாக அமைந்திருத்தல் சிறப்பு. பார்வைக் குறைபாடு உடையவர்கள் படிகளை இலகுவில் இனங்காணத்தக்க வகையில் வர்ணத் தெரிவை மேற்கொள்ளுதல் வேண்டும். நில மாபிள் நிறத்திலிருந்து படி மாபிள் நிறத்தைக் கூடும் நிறமாகவோ அன்றி வேறு நிறத்திலோ அமைத்துக் கொள்ளலாம் தரைமட்டங்கள் வெவ்வேறு தளங்களில் அமையும் போது அவற்றை இலகுவில் இனங்கண்டு கொள்ளும் விதமாகவும்,தம்மை நிலை நிறுத்திக் கொள்ளும் வகையிலும் நிறத் தேர்வுகளைச் செய்தல் வேண்டும். அல்லது ஒரு தளத்தின் முடிவை கூடும் நிறத்தில் கோடிட்டுக் காண்பிக்க வேண்டும்.

**சுவர் மற்றும் கதவுகளின் அமைப்பு**

சுவர்களிலிருந்து கதவுகளை இலகுவில் இனங்காணக்கூடிய வகையில் நிறத்தெரிவுகளைச் செய்தல் வேண்டும். சில வீடுகளில் கதவுகளையும் சுவரையும் இனங்கண்டுகொள்ள முடியாது. ஒரே நிறப்பூச்சு களை பூசியிருப்பர். உண்மையில் கதவுகளை இலகுவில் இனங்காணக்கூடிய வகையில் அமைப்பதன் மூலம் தடுக்கி விழுதல், தலையில் அடிபடுதல் போன்ற விபத்துக் களைத் தவிர்க்க முடியும். குறிப்பாக மலசலகூடங்களில் இது குறித்த கரிசனை அதிக அவதானத்துடனும்,கவனிப்புடனும் அமைய வேண்டும். பல வீடுகளில் சுவர் நிறத்திலேயே மலசலகூடக் கதவின் நிறத்தையும் தேர்வு செய்கின்றனர். இந்தச் செயல் நிலைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**கழிப்பறை அமைவு**

மலசல கூட இருக்கையின் வர்ணமும் சுவர் மாபிள் வர்ணமும் ஒரே நிறத்தில் இருத்தல் கூடாது. கடும் மென்மை வர்ணங்களில் அவற்றை அமைப்புற வடிவமைக்கும் போது ஒளி குறைந்த வேளைகளிலும் மலசலகூடத்தை (கொமேட்) இனங்காண்பது இலகுவாக இருக்கும். இது அவர்களின் உளச் சௌகரியத்தை மேம்படுத்தும்.மலசல கூட இருக்கையில் அமர்வதற்கும் எழும்புவதற்கும் ஏற்ற பிடிமான அமைப்புக்களை பொருத்திக் கொள்ள வேண்டும்.

**பொருள்களின் அமைவும் கரிசனையும்**

இந்தச் செயல் மாதிரிகள் வீட்டைப் பார்வை குறைவுற்றவர்களுக்கு ஏற்ற நட்புச் சூழலாக மாற்றி அமைக்கும்.அவர்களின் வாழ்க்கை சௌகரியமாக அமைந்திட உதவிடும்.அத்துடன் நாளாந்தம் வீட்டைப் பயன்படுத்தும் போதும் அவர்களின் நட்புச் சூழலில் குழப்பங்களை ஏற்படுத்திவிடாது பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவர்களுடைய அறையில் குறைந்தளவு பொருள்களையும்,தேவைக்கு உரித்தானவற்றையும் மட்டுமே வைத்திருத்தல் வேண்டும்.

முடியுமானவரை அவற்றைத் தொடர்ந்தும் ஓரிடத்தில் பேணுதல் வேண்டும். அதாவது அடிக்கடி இடமாற்றம் செய்யாது இருக்க வேண்டும்.

நாளாந்தம் வீட்டைப் பயன்படுத்தும் போதும் அவர்களின் நட்புச் சூழலில் குழப்பங்களை ஏற்படுத்திவிடாது பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவர்களுடைய அறையில் குறைந்தளவு பொருள்களையும்,தேவைக்கு உரித்தானவற்றையும் மட்டுமே வைத்திருத்தல் வேண்டும்.

மேடு பள்ளமான தரையமைப்பு, ஈரமான தரை, மங்கிய வெளிச்சம், ஒழுங்கற்று சிதறிக்கிடக்கும் பொருள்கள் போன்ற அமைவுகள் அடிக்கடி தடுமாறி விழக் காரணமாக அமைந்து விடுகின்றன. எனவே இந்த விடயங்களில் அதிக கவனத்தைச் செலுத்தி இயலுமானவரை அதிலிருந்து விடுபட உங்களைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

இறுக்கமற்ற நில விரிப்புக்களை அகற்றிக் கொள்ளுதல் வேண்டும். அல்லது நில விரிப்புக்களைப் போடாதிருத்தல் நன்று. மின்சார ஒழுக்குகள் ஏற்படாதவகையில் பாதுகாப்பான மின்னிணைப் புக்களைப் பொருத்திக் கொள்ளுதலும் இவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் அவர்களுக்கு இணக்கமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும்.




சுகாதார மருத்துவ அதிகாரி,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# கேள்வி பதில்

## தைரொயிட் சுரப்பியின் செயற்திறன் குறைவு பற்றி அறிதல்

மருத்துவர் எம்.அரவிந்தன்




**கேள்வி:** எனது வயது 28 ஆகும். எனது கழுத்துப் பகுதியில் சில மாதங்களாக வீக்கமொன்று காணப்படுகிறது. எனது நிறையானது அதிகரித்துச் செல்வதோடு உடற்சோர்வும் தென்படுகிறது. இது தைரொயிட் தொடர்பான பிரச்சினையாக இருக்குமா...?

**பதில்:** உங்களுக்கு இருக்கும் குணங்குறிகளைப் பார்க்கும் போது தைரொயிட் சுரப்பியின் செயற்படு விகிதம் குறைவாக இருக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றது.

தைரொயிட் சுரப்பி குறைவாக வேலை செய்யும் போது தூக்கம், சோம்பல், உடற்பருமன் அதிகரித்தல், மலச்சிக்கல், குளிரைத் தாங்கமுடியாத நிலை, தலைமுடி உதிர்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். இது போலவே பெண்களில் மாதவிடாயின் போது அதிக குருதி வெளியேற்றம் இருக்கும்.

எனவே நீங்கள் வைத்தியரின் ஆலோசனையை விரைவாகப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். குருதிப் பரிசோதனை மூலம் தைரொயிட் ஹார்மோனின் அளவைப் பரிசோதித்து இதனை அறிந்து கொள்ள முடியும்.

தைரொயிட் ஹார்மோனின் அளவானது குறைவாக இருக்கும் பட்சத்தில் தைரொக்ஸின் சுரப்பி குறைவாகத் தொழிற்படும் நிலைமையை உறுதி செய்து கொள்ள முடியும்.


தைரொயிட் சுரப்பியானது வீங்கிக் காணப்படுமானால் 'ஸ்கான்' பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று தேவையேற்படின் எவ்.என்.ஏ.சி (FNAC) எனப்படுகின்ற இழையப்பரிசோதனையையும் மேற்கொள்ள வேண்டும்.

தைரொயிட் சுரப்பி குறைவாகச் செயற்படும் போது தைரொக்ஸின் மருந்தினைக் காலம் தவறாது கிரமமாக உள்ளெடுக்க வேண்டும். இதன் மூலம் நோயின் குணங்குறியிலிருந்து விரைவாக விடுபட முடியும்.

தைரொக்ஸின் மாத்திரைகளை காலை நேரத்தில் வெறும் வயிற்றில் உள்ளெடுக்க வேண்டும். இதன் பின்னர் அரை மணித்தியாலத்திற்கு உணவு உள்ளெடுப்பதையோ, தேநீர் அருந்துவதையோ தவிர்த்தல் வேண்டும்.

இந்த நோய் பற்றிய மேலதிக விவரங்களை உங்கள் மருத்துவரிடம் கேட்டு அறிந்து கொள்ள முடியும்.


சிறப்பு மருத்துவ நிபுணர்,
நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி,
யாழ்.போதனா மருத்துவமனை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் பதிந்த காட்சி



# சுழியோடி மீன் தேடும் கடலவன்

ஜெ.காயா

அந்தக் கோவில் விசாலமானது. அதன் அருகில் அதற்கேயுரித்தான கேணி அமைந்திருந்தது. அது தனது சுற்றுப்பிரகாரங்களைப் படிக்கட்டுக்களைக் கொண்டு எல்லைப் படுத்தியிருப்பதைப்போலவே தனது குறைந்த ஆழத்தையும் நேர்த்தியான தரையமைப்பால் சீராகக் கொண்டிருக்கின்றது.

சுற்றியமைந்திருக்கும் உயர்ந்த படிக்கட்டில் நின்று பார்க்கையில் சலனமற்ற அந்த நீர் நிலை கொண்டிருக்கும் அமைதியான அழகு மனதை மௌனிக்கச் செய்யும். இவ்வளவையும் தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தது பிரமபுரம், வெங்குரு, தோணிபுரம், வேணுபுரம், பூந்தாரம், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கழுமலம், கொச்சைவயம் எனும் பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்படும் சீர்காழிப்பதி யேயாகும். இது இந்தியாவிலிருந்து பக்தி வளர்க்கும் சிவத்தலம்.

முன்பொரு காலத்தில் அவ்விடத்தில் சிவபாதவிருதயர் என்றொரு அந்தணர் இருந்தார். அவர் தன்னுடைய பிள்ளை சகிதம் சீர்காழித் தலக் கேணிக்கு நீராடச் சென்றார். பிள்ளையைக் கேணிக் கட்டில் இருத்திவிட்டு, நீராட இறங்கியவர், நீருக்குள் மூழ்கித் தலை நனைத்து முழுகினார். நீருக்குள் மூழ்கி விட்டதால் சிறிது நேரத்துக்குத் தன்னுடைய தந்தையைக் காணாத அந்தக் குழந்தை வீறிட்டு அழுதது.

"அம்மா... அப்பா..." என்று தொடர்ந்தும் கண்ணீர் விடத் தொடங்கியது. கதை தொடர்கிறது....

தரம் ஒன்றாகவோ! இரண்டாகவோ! இருக்கவேண்டும். கறுப்பு, வெள்ளைப் படம் பதிக்கப்பட்ட சைவ சமயப் பாடப்புத்தகத்திலிருந்து மனதில் ஒட்டிக்கொண்ட இந்தக் கதைதான் இப்போது பொறி தட்டுகிறது. காரணம்..., இங்கு..., இந்தப் பரந்த ஆழக் கடலுக்குள் மூழ்கிப்போன ஒருவரை நெடுநேரமாகியும் காணவில்லை...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்தெயத் தொழிலாளிமாருக்கு வசதி வாய்ப்புகள் ஏராளம். என்ன மாதிரிச் சுழியோடித் தொழில் செய்யிறவ எங்காலும் ஒண்டு ரெண்டு பேர் தான் இப்ப இருப்பினம். வயசு போச்சுதே தவிர நான் அப்பிடியே தான் இருக்கிறன்.



இனிச் சமகாலக் கதைக்கு வருகிறேன். பண்ணைப்பாலம் தாண்டி மண்டைதீவுப் பாலத்தை அண்மித்ததும் கண்ணில் அகப்பட்டவர் ஒரு அபூர்வமான மனிதராகத் தெரிந்தார். என்னவோ தெரியவில்லை அவரைத் தொடர்ந்து பார்க்க வேண்டும் போலவும் உரையாட வேண்டும் போலவும் விருப்பம் ஏற்பட்டது.

அந்த விருப்பத்தின் உந்துதலால் மெதுவாகச் சென்று கொண்டிருந்த எனது மோட்டார் சைக்கிளை அவர் அருகில் நிறுத்தினேன்.

அவர் வியப்புடன் என்னைப் பார்த்தார். அவரை விட ஆர்வத்துடன் நான் அவரைப் பார்த்தேன்.

முறுக்கேறி வைரம் பாய்ந்த உடம்பு. கறுத்து வலித்திருந்தது. எந்த 'ஜிம்மு'க்கும் போய் அத்தகைய கட்டுக்கோப்பான உடம்பைக் கொண்டு வர முடியாது என்பது உண்மை.

அவருடைய வயதைக் கேட்க வேண்டும் போலிருந்தது.


"அண்ணே உங்களோட கதைக்கலாமோ...?"

பதிலுக்கு மெல்லச் சிரித்தார்.

"என்ன விசயம் தம்பி"

"சும்மா..."

"அப்ப பொறும்... நான் ஒருக்காக் கடலுக்க போட்டு வாறன்" என்றவர் வீதியிலிருந்து இறங்கிக் கடலை நோக்கி நடந்தார்.



வீதியை அண்மித்த அந்தக் கடல் பகுதி சற்று ஆழம் கூடியதாகவிருந்தது. நீரோட்டமும் வேகம் கொண்டிருந்தது. அவர் அந்த ஆழ் பகுதியை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார். நான் கடல் மீதும் வீதியில் செல்லும் வாகனங்கள் மீதும் அவற்றுக்குள் இருக்கும் மனிதர்கள் மீதும் இந்த மனிதர் மீதும் எனது பார்வையை மாற்றி மாற்றிக்கொண்டிருந்தேன்.

கரையில், கற்களின் மேல் இருந்தவர் சிறிது நேரத்தில் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார். நீர் நிலைக்குள் மெல்ல நழுவலானார். அவருடைய கையில் நீண்ட, கூரிய கம்பி ஒன்று இப்போது!

நீரைச் சலனப்படுத்தாமல் நீரின் மேற்பகுதியில் முகத்தைப் புதைத்து சிறிது நேரம் அளவளாவினார். பின்னர் உள்ளே புதைந்து போனார். நீரோடு நீராகிப் போனார். உள்ளே போனவரை நெடுநேரமாகியும் காணவில்லை. அவர் எப்போது திரும்பவும் தோன்றுவார்...!

போனவர் போனதுதான் நிமிடங்கள் கரைந்தன ஆளைக் காணவில்லை. தந்தையைக் காணாத சம்பந்தர்போல என்னால் தேவாரம் பாட முடியவில்லை. பயம் தான் ஏற்பட்டது. எங்கே தொலைந்தார் இந்த மனிதர்...? தேவையில்லாமல் ஒரு சிக்கலுக்குள் அகப்பட்டுவிட்டேனோ...! நான் கலங்கித் துடிக்க அவர் நீருக்குள்ளிருந்து வெளியே வந்தார்.

அவருடைய கையிலிருக்கும் கம்பி ஒரு பெரிய மீனின் வயிற்றுக்குள் புதைந்திருந்தது. வீதிக் கரைக் கற்களில் ஏறி உடலை உதறிக் கொண்டவர். தான் அணிந்திருந்த காற்சட்டையின் பின்பகுதிக்குள்ளிருந்து அளவான இரண்டு மீன்களை வெளியே எடுத்தார். அவற்றின் வயிற்றுப் பகுதிகளிலும் கம்பி தைத்த அடையாளம். தொடர்ந்தும் அவர் தனது உடலை உதறித் தேகத்தை உலர்த்தினார்.

"அண்ணே...! உங்களுக்கு எத்தின வயசு...?" நான் தொடர்ந்தேன்.

"57"

சிறிது நேரத்தில்... "ஏன் தம்பி...?" என்றார்.

"சும்மா கேட்டனான் ஐயா" என்று கதையை முடித்துக் கொண்டேன். காரணம் ஆச்சரியம். இவர் 57 வயதான ஒரு வயோதிபரா!

நீரில் நனைந்த தனது உடலை உலர்த்துவதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அங்கும் இங்குமாகத் தனது உடலைத் திருப்புவதும், குனிவதும், நிமிர்வதுமாகத் தொடர்ந்தது அவருடைய முயற்சி. அதைக் கவனிக்கும்போது ஆணழகர் தேர்வுக்காக மேடையேறித் தமது வெளிப்பாடுகளைப் பார்வையாளர்களுக்கும் நடுவர்களுக்குமாகப் பெரும் சிரமப்பட்டு முன்வைத்துச் செல்லும் நாகரீக ஆடவர்கள் மனத்திரைக்குள் வந்துபோயினர். நகைத்துக் கொண்டேன்.

அவருடைய உடல் வாகு கடின உழைப்பால் வலிந்து இறுகிப் போய்க்கிடந்தது. 'சிக்ஸ் பாக்' என்று சொல்லிக்கொண்டு சொகுசு வேலையுடன் உடற்பயிற்சிக்காகக் காலத்தையும் பணத்தையும் செலவு செய்தபடி அலையும் இன்றைய இளைஞர்களும் மனதுக்குள் இடையிடையே வந்து நகைப்புக் காட்டினர்.

"மீன் பாடு எப்பிடி ஐயா?"

"முந்தி மாதிரி இல்லத்தம்பி. இப்ப சரியாக் குறைஞ்சு போச்சுது. சீவியத்துக்குக் கஸ்ரமாத்தான் கிடக்கு. அந்தக் காலத்தில ஐஞ்சாறு பேர் சேர்ந்து மீன் குத்துறதுக்குப் போன ஏத்துறதுக்கு லொறிக்காரர் தேடி வருவாங்கள்.


இப்ப அப்பிடியில்லை. கடலில மீன்வளம் குறைஞ்சாலும் என்னட்ட ஆப்பிடுற மீன் ஒண்டும் தப்ப ஏலாது..." தன்னைப் பற்றிப் பெருமைப்பட்டும் கொண்டார். அதை என்னால் ஏற்றுக் கொள்ளவும் முடிந்தது. அவருடைய செயலே அதற்கு எடுத்துக்காட்டு.

"57 வயசிலயும் இந்தத் தொழிலைச் செய்யுறியள். கஸ்ரமா இல்லையா?"

"பழகிப் போச்சுது. இப்பத்தெயத் தொழிலாளிமாருக்கு வசதி வாய்ப்புகள் ஏராளம். என்ன மாதிரிச் சுழியோடித் தொழில் செய்யிறவ எங்காலும் ஒண்டு ரெண்டு பேர் தான் இப்ப இருப்பினம். வயசு போச்சுதே தவிர நான் அப்பிடியே தான் இருக்கிறன். இன்னும் ரெண்டு, மூண்டு வருசத்தில எனக்குப் பென்சன் தருவாங்கள்" என்றார் நம்பிக்கையுடன் அந்தக் கடின உழைப்பாளி. என்னுடன் தொடர்ந்தும் நேரத்தைச் செலவு செய்தால், அவருடைய சீவியம் தடைப்பட்டுவிடும் என்பதை உணர்ந்தேன். அவருடைய நிலையும் அப்படித்தான்.

அந்த இரும்பு மனிதர் தான் பிடித்துவந்த மூன்று மீன்களையும் நீருக்குள் அமிழ்த்திக் கற்களால் கடிவாளமிடப்பட்டிருந்த அந்த வலைப் பைக்குள் போட்டார். பழையபடி கற்களின் மேல் அமர்ந்து கடலுக்குள் கவனிக்கலானார்...

முந்தி மாதிரி இல்லத்தம்பி. இப்ப சரியாக் குறைஞ்சு போச்சுது. சீவியத்துக்குக் கஸ்ரமாத்தான் கிடக்கு. அந்தக் காலத்தில ஐஞ்சாறு பேர் சேர்ந்து மீன் குத்துறதுக்குப் போன ஏத்துறதுக்கு லொறிக்காரர் தேடி வருவாங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசைன் போல்ட் 'க்ளீன் போல்ட்'




பிரகாஸ்




தடகள உலகம் மட்டுமல்லாது ஒட்டுமொத்த விளையாட்டு உலகுமே முடங்கிப் போகியுள்ளது. உசைன் போல்ட் என்ற பெரும் ஜாம்பவான் தோல்வியுடன் விடைபெற்றிருக்கிறார். ஜமைக்கப் புயல் தான் இலக்கு வைத்த எல்லையைத் தாக்கத் தவறியிருக்கிறது. லண்டனில் மின்னல் மின்னவில்லை. இதற்கெல்லாம் உசைன் போல்ட் தன்மீது வைத்த அளவு கடந்த நம்பிக்கையும் ஒரு காரணம். ஓவர் கண்பிடன்ஸ் உடம்புக்கு ஆகாது என்று சொல்வார்கள். உசைன் போல்ட்டின் விடயத்திலும் அது சாலப் பொருத்தம்.

### யார் இந்த போல்ட்?

உசைன் போல்ட் பிறப்பால் ஜமேக்க நாட்டவர். 1986ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி போல்ட் பிறந்தார். அப்பாவும் அம்மாவும் கிராமப் புறத்தில் ஒரு பலசரக்கு கடை வைத்திருந்தவர்கள். மாதா பிதா குரு தெய்வம் என்பது இவருக்கு சாலப் பொருந்தும். இவருக்குள் ஒளிந்திருந்த திறமையைக் கண்டுபிடித்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர் இவரின் வகுப்பு ஆசிரியர்தான். இவரது கதையைப் பறக்கக் கற்றுக்கொண்டவன் என்று படமாகவும் எடுத்துள்ளனர்.

### போல்ட் படைத்த சாதனைகள்

இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் ஜமைக்கப் புற்தரைகளில் ஓடித்திருந்த போட்டின் வேகம், மின்னலுக்கும், புயலுக்கும் ஒப்பிடப்பட்டது 2008ஆம் ஆண்டில் தான். 2008ஆம் ஆண்டு சீனாவின் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடர் போல்ட்டின் வாழ்க்கையில் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது. அந்தத் தொடரில் 100 மீற்றர், 200 மீற்றர், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியவற்றில் போல்ட்டுக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது. 2012 லண்டன் ஒலிம்பிக் தொடர், 2016 ரியோ டி ஜெனிரோ (பிரேசில்) ஒலிம்பிக் தொடர் ஆகியவற்றிலும் மூன்று தங்கங்களை அள்ளினார் போல்ட். 3 ஒலிம்பிக் தொடர்களில் 9 பதக்கங்கள் வென்ற ஒரே வீரர் உசைன் போல்ட் மட்டுமே. 2009ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் 100 மீற்றர் தூரத்தை வெறும் 9.58 செக்கன்களில் ஓடிமுடித்து உலக சாதனையைப் படைத்தார். 200 மீற்றர் ஓட்டத்தில் போல்ட்டின் பெறுபேறே சாதனை. இந்தச் சாதனைகள் இன்று வரை உயிர்புடன் உள்ளன. போல்ட் அணியும் காலணிகளுக்குக் கூடிய ஏகப்பட்ட பில்லியன் டொலர்கள் ஒப்பந்தம். பூமா என்ற நிறுவனமே போல்ட்டை தனது முக்கிய ஒப்பந்தக் காரராக வைத்துள்ளது. இன்று அவரின் மதிப்பு சுமார் 60 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று கணக்கிடப்படுகிறது.

### கேத்லின் - போல்ட் இருவரும் நீண்டகாலப் போட்டியாளர்கள்

உசைன் போல்ட்டை வீழ்த்தக் கூடியவரென்றால் அது அமெரிக்காவின் தடகள வீரர் ஜஸ்ரின் கேத்லினே. கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்தே போல்ட்டை வீழ்த்துவேன் என்று பலமுறை தெரிவித்திருந்திருந்தார் கேத்லின். அதன்பின்னர் அவர் இரு தடவைகள் ஊக்கமருந்தைப் பயன்படுத்தி தடைபெற்றார். இதனால் போல்ட்டை எதிர்கொள்ளக் கூடிய போட்டியாளர் தடகள உலகில் இல்லாமல் இருந்தது. கேத்லின் ஊக்கமருந்தைப் பயன்படுத்தியவர். போல்ட் கடின உழைப்பால் சாதனை படைப்பவர் என்ற பார்வையில் தடகள உலகைப் பொறுத்தவரையில் போல்ட் ஹீரோ. கேத்லின் வில்லன். இவர்களுக்கான பகையும் போட்டியும் சுமார் 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக இருந்து வருகிறது.

### 'நான்'

ஒரு செவ்வியில் நான், எனது, என்னுடைய இவ்வாறான வார்த்தைகளை போல்ட் மூச்சுக்கு மூன்னூறு தடவை உச்சரித்துக் கொள்வார். திறமைக்கு ஏற்ப கர்வமும் அவரிடத்தில் எக்கச்சக்கமாய் இருந்தது. லண்டனில் தற்போது நடைபெற்றுவரும் தடகளத் தொடருடன் போல்ட் ஓய்வு பெற்றுள்ளார். இதற்கு முன்னதாக வழங்கிய செவ்வியில், "உலகின் அதவேகமான ஓட்டப்பந்தய வீரர் நானே. எனது சாதனைகள் நீடித்து நிலைக்கும். தற்போது என்னை வீழ்த்தக் கூடியவர்கள் என்று எவரையும் கருதவில்லை. எனது குழந்தைகளுக்கு 20 வயதாகும்போது நானே உலகின் சிறந்த ஓட்டப்பந்தய வீரர் என்று சொல்ல விரும்புகிறேன்" என்று தெரிவித்திருந்தார்.

> கோல்ட் கடின உழைப்பால் சாதனை படைப்பவர் என்ற பார்வையில் தடகள உலகைப் பொறுத்தவரையில் போல்ட் ஹீரோ. கேத்லின் நாயகன். இவர்களுக்கான பகையும் போட்டியும் சுமார் 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக இருந்து வருகிறது.

### தோல்வியுடன் விடைபெற்றார்

இந்த மாதம் 5ஆம் நாள். உலகமே ஆவலுடன் எதிர்பார்த்த போல்ட்டின் இறுதிக் குறுந்தூர ஓட்டம் நடைபெற்றது. போட்டி ஆரம்பமாகிறது. இறுதி ஓட்டம் என்பதால் தனது சாதனையைத் தானே முறியடிப்பார் போல்ட் என்ற எண்ணம் எல்லோரிடத்திலும் இருந்தது. ஆனால் படிப்படியாக ஆதிக்கம் செலுத்திய கேத்லின் தங்கப்பதக்கத்தைத் தனதாக்கிறார். இரண்டாம் இடமும் அமெரிக்க வீரருக்கே. போல்ட்டுக்குக் கிடைத்ததோ வெண்கலம். போட்டி ஆரம்பிக்க முன்னர் போல்ட் தெரிவித்த கருத்துக்களும், போட்டியின் முடிவும் மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் படியாக அமைந்தது. தனது வெற்றியை கேத்லின் கொண்டாடவில்லை. அவரிடம் அழுகையே எஞ்சியிருந்தது. கேத்லின், போல்ட்டுக்குத் தலை வணங்கி விடைகொடுத்தார். ஒன்றுமட்டும் உண்மை. போல்ட் 'போல்ட்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆசாத்



# பாராட்டப்படுவது மனிதாபிமானமே

அண்மையில் வடபகுதிக்குப் பயணம் செய்திருந்த அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த விகாராதிபதி ஆனந்த வீரசேகர தேரர் யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை மரியாதை நிமித்தம் சந்தித்துத் தனது பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தார். நினைவுப் பரிசாக ஒரு புத்தர் சிலையையும் வழங்கியிருந்தார். காற்றுக்கோ, நீருக்கோ இன,பேதம் இல்லையென்றும், நீதிபதியும் இனமத பேதங்களைக் கடந்து தனது மனிதாபிமானத்தை வெளிப்படுத்தியுள்ளார் எனவும் ஒரு விதவையின் காலில் விழுமளவுக்குப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டவர் எனவும் அந்தச் சந்திப்பின்போது அவர் நீதிபதிக்குப் புகழாரம் சூடியிருந்தார்.

நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின்போது நீதிபதி இளஞ்செழியனின்மெய்ப்பாது காவலர் கொல்லப்பட்ட பின்னர் கொல்லப்பட்ட அதிகாரியுடைய மனைவியின் காலில் விழுந்து நீதிபதி கதறியழுததும். அவரிடம் மன்னிப்புக் கேட்டதும் அனைவரின் மனதையும் உருக்கிவிட்டது. அந்த விடயத்துக்கு ஊடகங்களும் பெரும் முக்கியத்துவம் கொடுத்திருந்தன. பதினேழு வருடங்களாகத் தனது உயிரைப் பாதுகாத்து வந்த அந்த மெய்ப்பாது காவலர் உயிரிழந்ததை நீதிபதியால் தாங்க முடியவில்லை. அது பெரும் சோகம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதேவேளையில் அந்தக் குடும்பத்துக்கு ஏற்பட்ட இழப்பு ஈடு செய்ய முடியாதது ஆகும். இந்த நிலையில் அந்தக் குடும்பத்தின் மகனின் எதிர்காலக் கல்விச் செலவையும் நீதிபதி பொறுப்பேற்றார்.

ஒரு நீதிபதி தான் கொண்டிருக்கின்ற பதவியைப் பொருட்படுத்தாது அந்த விதவையின் காலில் விழுந்து அழுதமை அவர் மீதிருந்த மதிப்பைப் பலமடங்காக்கியது. அவரிடமிருந்த மனிதத்தின் உச்சக் கட்ட வெளிப்பாடு அது. நீதிபதியை மெய்ச்சியிருந்த எல்லோரையும் போலவே ஆனந்த தேரரும் அவரைப் பாராட்டியுள்ளார். நீதிபதியின் செயல் நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்று தான் என்பதால், தேரர் பாராட்டியது தொடர்பில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஆனால் அவர் நீதிபதிக்குப் புத்த பெருமானின் சிலையை அன்பளிப்புச் செய்தமை வியப்புக்குரியதாகும். அப்போது அவர் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாகவும்கூட சில கேள்விகள் எழாமல் இல்லை.

### தனிப்பட்ட மனிதாபிமானத்தை நல்லிணக்கமாக கொள்கிறார் தேரர்

நீதிபதி இளஞ்செழியன் வெளிப்படுத்தியிருந்த மனிதாபிமான உணர்வுகள், கொல்லப்பட்டவர் தனது பணியாளர்களில் ஒருவர்என்றஅடிப்படையிலோ அல்லது அவர் ஒரு சிங்களவர் என்ற இன அடிப்படையிலோ அல்லது அவர் ஒரு பௌத்தர் என்ற மத அடிப்படையிலோ எழுந்தவையல்ல. அது அந்த அதிகாரி 17வருடங்கள் தன்னுடன் இரவு பகல் பாராது பணியாற்றித் தன்னைப் பாதுகாக்கும் பணியிலேயே உயிர் துறந்த ஒருவர் என்பதாலும், ஒரு குடும்பம் தனது தலைவனை இழந்து விட்டது என்பதாலும், அந்தக் குடும்பத்தின் மீது கொண்ட பச்சாதாபமும் பாசமும் நிமித்தம் எழுந்த உணர்வாகும். அதுவே மனித குணம்.

அதைக் காற்றுக்கும் இனமில்லை, நீருக்கும் இனமில்லை என்ற கூற்றின் மூலம் இன, மத அடிப்படையில் தேரர் வியாக்கியானம் செய்துள்ளார். இன, மத அடிப்படையில் பிரச்சினைகளை அணுகுவது தவறு என்றும் நீதிபதி அவற்றைக் கடந்து விட்டமையினாலேயே தான் அவரைப் பாராட்டுவதாகவுமே தேரரின் கருத்து அமைந்திருந்தது. தனிநபர் விவ காரங்களில் இன, மத அடிப்படையிலான நோக்கு என்பது தவறானது மட்டுமல்ல ஏற்றுக் கொள்ளப்பட முடியாததும் ஆகும்.

ஆனால் ஒரு இனம் ஒடுக்கப்படும்போது, அந்த இனத்துக்கு அநீதி இழைக்கப்படும் போது அந்த இனம் தனது தனித்துவத்தைக் கைவிட்டு சமரசம் செய்துவிடாது. ஒடுக்கப்படுபவர்களுக்கும், ஒடுக்குபவர்களுக்குமிடையே நல்லிணக்கம் ஏற்பட்டதாக வரலாறு இல்லை.

அப்படி ஒரு நிலை தற்காலிகமாக நிலவினாலும் அது வெகு விரைவில் உடைந்து விடும் என்பதிலும் சந்தேகமில்லை. தனிப்பட்ட மனிதாபிமான விடயங்களைப் பொதுவான இனங்களுக்கிடையேயான நல்லிணக்கமாகக் காட்ட முற்படும் தேரர் போன்றவர்கள் நல்லிணக்கம் நோக்கிய பயணத்தில் தாங்கள் என்ன பங்களிப்பை வழங்குகிறார்கள் என்ற கேள்வியை நாம் கேட்காமல் விட முடியாது.

> நல்லிணக்கம் பற்றிப் பாராட்டி நீதிபதிக்குப் பரிசு வழங்கும் ஆனந்த வீரசேகர தேர் ஏன் அந்தப் படுகொலைகளைக் கண்டிக்கவில்லை?
>
> ஏன் அந்தப் படுகொலைகளை மூடி மறைக்கும் அமைச்சரைக் கண்டிக்கவில்லை?
>
> அவர் அவரது மாவட்டமான அம்பாறையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான மாணிக்க மலை என்ற இடத்தை அபகரித்துப் புத்த கோயில் கட்டுவதை ஏன் கவனத்தில் கொள்ள வில்லை?

### சிறுபான்மையினரின் ஒடுக்குமுறையை தேரர் ஏன் கண்டுகொள்ளவில்லை...?

அண்மையில் அமைச்சர் சாஹல ரத்னாயக்கா 1983 ஜூலை கலவரத்தின்போது 7தமிழர்கள் மட்டுமே கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்திருந்தார். அந்தக் கலவரத்தின்போது ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்பதும் ஏராளமான சொத்துக்கள் சூறையாடப்பட்டும், எரியூட்டப்பட்டும் அழிக்கப்பட்டன என்பதும் உலகறிந்த உண்மை. ஒரு குடும்பம் கார் ஒன்றுக்குள் வைத்து உயிருடன் எரியூட்டப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் கூட இடம்பெற்றிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அரச பாதுகாப்பில் இருந்த வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் வைத்து 53 தமிழ்க் கைதிகள் வெட்டியும், அடித்தும் கண்கள் தோண்டப்பட்டும் கொல்லப்பட்டனர். ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். அந்த நாள்களில் இலங்கை பன்னாட்டு அளவில் கடும் நெருக்கடிக்கு உள்ளானதையும் மறந்து விட முடியாது. உண்மைகள் இப்படியிருக்க அமைச்சர் எழுபேர் மட்டுமே கொல்லப்பட்டுள்ளனார் எனக் கூறியிருக்கிறார். நல்லிணக்கம் பற்றிப் பாராட்டி நீதிபதிக்குப் பரிசு வழங்கும் ஆனந்த வீரசேகர தேர் ஏன் அந்தப் படுகொலைகளைக் கண்டிக்கவில்லை? ஏன் அந்தப் படுகொலைகளை மூடிமறைக்கும் அமைச்சரைக் கண்டிக்கவில்லை?

அவர் அவரது மாவட்டமான அம்பாறையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான மாணிக்கமலை என்ற இடத்தை அபகரித்துப் புத்த கோயில் கட்டுவதை ஏன் கவனத்தில் கொள்ளவில்லை? இவருடைய எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் கொல்லப்பட்டாலும், அவர்களின் சொந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டாலும், அவர்கள் அதைத் தலைகுனிந்து ஏற்றுக் கொண்டு நல்லிணக்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதா?

### தேரர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி!

ஆனந்த வீரசேகர தேரர் ஒரு முன்னாள் இராணுவ உயரதிகாரி. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதாக நீடித்திருந்த போரில் ஆயிரமாயிரம் தமிழ் மக்களை அழித்ததில் நிச்சயமாக அவருக்கும் பங்கு இருக்கும். கலிங்கத்துப் போரில் பல உயிர்களை காவுகொண்டு போரை வென்று கலிங்கத்தை அடிமைப்படுத்தினார் அசோகச் சக்கரவர்த்தி. போரில் ஏற்பட்ட பேரழிவும், உயிரிழப்புக்களும் அவரைப் புத்தபெருமானின் போதனைகளைப் பின்பற்ற வைத்தன. பௌத்த மதத்தைப் பரப்பும் பணியில் அவர் இறங்கியது மட்டுமின்றி தனது மகன் மகிந்த தேரரையும், மகள் சங்கமித்தையையும் துறவறம் பூண வைத்தார். அது எப்படியிருந்தபோதிலும் கலிங்கம்அடிமைப்பட்டது அடிமைப்பட்டது தான்.

தமிழ் மக்களுக்கெதிரான போர் வெற்றியில் பங்கு கொண்ட இராணுவ உயர் அதிகாரி போரின் வெற்றியின்பின் துறவறம் பூண்டு பௌத்த பிக்குவாகி விட்டார். அவர் ஒரு மத குருவாகி கருணையையும் அன்பையும், நல்லிணக்கத்தையும் வாரி வழங்கினாலும் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டது, பறிக்கப்பட்டது தான். படையினரால் அபகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்றோ, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படவேண்டுமென்றோ, அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்றோ தேரர் குரல் கொடுக்கவில்லை. தமிழர்களின் நிலை இப்படியிருக்கஅவரோ நிதிபதி இளஞ்செழியனுக்குப் பாராட்டுத் தெரிவித்து அதே சாட்டுடன் புத்தர் சிலை ஒன்றையும் பரிசளித்து நல்லிணக்கம் பற்றியும் போதனை செய்திருக்கிறார்.

### தேரர்களின் உள்நோக்கங்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டும்

சில மாதங்களுக்கு முன்பு சில முக்கிய பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் வடக்குக்கு ஒரு நல்லெண்ண பயணத்தை மேற்கொண்டனர். அவர்கள் நல்லை ஆதீன முதல்வர் உட்படப் பல இந்து மத தலைவர்களைச் சந்தித்து இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவது பற்றிப் பேச்சுக்களை நடத்தினர். அப்போது சில அடிப்படை விடயங்களை நல்லை ஆதீன முதல்வருக்குத் தெளிவுபடுத்தினார். அவர்களும் சில விடயங்களை ஏற்றுக் கொண்டனர்.

அதன் பின்னர், அண்மையில் மல்வத்தை, அஸ்கிரிய, அமரபுர ஆகிய மத பீடங்களின் மகாநாயக்கர்கள் உட்பட பௌத்த மதகுருமார் புதிய அரசமைப்பின் உருவாக்கத்துக்கெதிராகக் குரல் கொடுத்திருந்தனர். பொதுவாகவே புதிய அரசமைப்பின்போது இனப்பிரச்சினைக்கு குறைந்த பட்ச தீர்வாவது கிட்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் தலைமைகளிடம் உண்டு. அதன் மூலம் அதிகாரப் பரவலாக்கம் சாத்தியமெனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

பல இழுபறிகளின் பின்பு இரண்டு பிரதான கட்சிகளும் ஒரு இணக்கப்பாட்டை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் மதகுருமாரின் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இனப்பிரச்சினைக்கு நிரந்தரதீர்வு காண்பதன் மூலம் உண்மையான நல்லிணக்கம் உருவாவதை அவர்கள் எதிர்த்து நிற்கின்றனர்.

தெற்கிலிருந்து வடக்குக்கு வந்து நல்லிணக்கம் போதிக்கும் இவர்கள் அங்கு பகிரங்கமாகவே நல்லிணக்க உருவாக்கத்தை எதிர்க்கின்றனரென்றால் இவர்களின் உண்மை நோக்கங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனந்த தேரர் மட்டும் இதிலிருந்து எப்படி விதிவிலக்காகிவிட முடியும். ஆனால் அவர் உண்மையில் நல்லிணக்கத்தை விரும்பினால், புத்தர் சிலையை நீதிபதிக்கு வழங்குவதை விடுத்து தெற்கில் இருக்கும் பல பௌத்த பிக்குகளுக்கும் புத்தபெருமானின் போதனைகளை வழங்கியிருக்கலாம். அன்பு, கருணை, சகிப்புத்தன்மை என்பவற்றின் மூலம் நிச்சயமாக நல்லிணக்கத்தை உருவாக்க முடியும். எமது மனிதாபிமானத்தைப் பாராட்டுங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மனிதாபிமான நடவடிக்கைகளை நல்லிணக்கமாகக் காட்டி தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை மறைப்பதை ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோ.கோமளவண்ணன்



"வரலாற்றின் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள மறுப்பவர்கள், அந்தத் தவறுகளை மீண்டும் மீண்டும் செய்வார்கள்" இது ஸ்பெய்ன்நாட்டுத்தத்துவ அறிஞர், கட்டுரையாளர், கவிஞர்மற்றும்நாவலாசிரியரான ஜோர்ஜ்சான்ரயனாவின்கூற்று. இதை இரண்டாம்உலகப்போரின்மூலம்ஜப்பான்மக்கள்சரியாகப்புரிந்துகொண்டிருக்கிறார்கள். அணுகுண்டின்பாதிப்பை அனுபவித்து உணர்ந்த ஹிரோஷிமா, நாகசாகி நகரத்தவர்கள் "அணுகுண்டு ஏற்படுத்தும் அழிவைப் பார்ப்பதற்கு எங்கள் நகரங்களுக்கு வாருங்கள்" என்று உலகத்தவர்களுக்கு வரவேற்பளிக்கிறார்கள். இலங்கையில் உள்ள தமிழர்கள் கடந்த காலங்களில் அனுபவித்திருந்த உள்நாட்டுப்போர் அழிவுகளும் இதுபோல ஒன்றுதான். அவர்களுடைய இந்தக்கூற்றை மனதிலிருத்திச்செயலாற்ற வேண்டும். தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வரலாற்றிலிருந்து கற்றுக்கொண்ட பாடமாகவும் அதன் மூலம் உலகுக்கு அவர்கள் சொல்லவிரும்பும் செய்தியாகவும் வெளிப் படுத்தும் வகையில் எழுந்து நிற்கின்றன இந்த வெளிநாட்டுத் திரைப்படங்கள்.



# 'டன்கிர்க்'

இரண்டாம் உலகப் போரின்போது நடந்த உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் உருவாகியுள்ள மற்றுமொரு திரைப் படம் 'டன்கிர்க்' 'மொமென்டோ', 'இன்செப்சன்', 'இன்டஸ்டெல்லர்', 'த வ்ரெஸ்டிஜ்' போன்ற படங்களை இயக்கியவர் கிறிஸ்ரோபர் நோலன். இவருடைய இந்தப் படம் இரண்டாம் உலகப் போரால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களின் வாழ்வியலைப் பேசுகின்றது. பல வகையான நவீன ரகத்தொழில்நுட்பங்களைப்பயன்படுத்திஎடுக்கப் பட்டிருப்பதால் 1940ஆம் ஆண்டளவில் நடந்த உலகப்போரின்அழிவைஅப்படியேஅச்சுஅசலாக் கண்முன்னே கொண்டு வருகிறது 'டன்கிர்க்'. இதன் முன்னோட்டக்காட்சியே இதற்குச்சான்று. டாம்கார்டி, மார்க்ரைலன்ஸ், கரிஸ்ரைல்ஸ் உள்ளிட்டோர் இந்தத் திரைப்படத்தில் நடித்திருக்கிறார்கள். இந்தத் திரைப்படம் எதிர்வரும் 21ஆம் திகதி வெளியாக உள்ளது. நோலன் படங்களுக்கு இதுவரை இருந்திராத வரவேற்பு இந்தப் படத்துக்கு இருக்கிறது.

அத்துடன்இயக்குநர்கிறிஸ்டோபர்நோலன்எடுத்ததில்மிகவும்குறைந்தநேரப்படமாகவும்இதுவே இருக்கின்றது. இதன் முழுநீளம்ஒரு மணித்தியாலங்களும்47நிமிடங்களுமாகும்நோலன்எடுத்த படங்களில் மிகவும் நீளமானதான இண்டர்ஸ்டெல்லார். 2 மணித்தியாலங்கள் 49 நிமிடங்கள் வரையும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.



# 'த பாட்டில்சிப் ஐலண்ட்'

இரண்டாம் உலகப்போரில் அணுகுண்டு வீச்சுக்கு உள்ளாகிய நாகசாகி நகரத்திலிருந்து 15கிலோமீற்றர்கள் தொலைவில் இருக்கிறது கசிமா தீவு. 'பாட்டில்சிப் ஐலண்ட்' என்று அழைக்கப்படும் இந்தத்தீவு, தெற்குஜப்பானின் வரலாற்றில் புதைக்கப்பட்ட சம்பவங்கள் பலவற்றைத் தன்னுள் வைத்திருக்கிறது. அதில் ஒன்றை 'த பாட்டில்சிப் ஐலண்ட்' என்ற தலைப்பில் மிகப் பெரிய திரைப்படமாக்கியிருக்கிறார் தென்கொரிய இயக்குநர் ரியோ சீங்வான்.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் கொரியாவைத் தனது காலணி ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த ஜப்பான், அங்கிருந்து வலுக்கட்டாயமாகக் குடும்பம் குடும்பமாக அப்பாவி மக்களையும் போர்க்கைதிகளையும் ஜப்பானுக்குக் கொண்டுவந்து தனது வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டது. கசிமாத்தீவில் கடலுக்கடியில் நிலக்கரிச்சுரங்கம் ஒன்றைத் தோண்டி நிலக்கரி எடுத்துக் கொண்டிருந்த ஜப்பான் அப்பாவி மக்களை அதற்குள் அடைத்து வைத்து வேலை வாங்கியது. 'பூமியின் நரகம்' என்று வர்ணிக்கப்படும் நாற்புறமும் கடல்நீரால் சூழப்பட்ட அந்தக் குட்டித்தீவிலிருந்து தப்பிச்செல்ல முடியாமல் அந்த அப்பாவிமக்கள் அவஸ்தைப்பட்டனர்.

சுரங்கத்தில் அன்றாடம் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மடிந்தபடியிருந்தனர். சிறைபோன்ற இந்தக் கொத்தடிமைத் தீவிலிருந்து கொரியத் தொழிலாளர்கள் 400பேர் தங்கள் குடும்பத்துடன் தப்பிச் செல்வதற்குத் படிப்படியாகத் திட்டமிட்டனர். அதை அவர்கள் செயல்படுத்த முனைந்தபோது, நடந்த வரலாற்றுச் சம்பவத்தை விறுவிறுப்பான, சாவுக்கும் வாழ்வுக்குமான உச்சக்கட்டப் போராட்டமாகச்சித்திரித்துப் படமாக்கியிருக்கிறார் இயக்குநர் ரியோ சீங்வான். தென்கொரியா முழுவதும் 2 ஆயிரத்து 500 திரையரங்குகளில் வெளியான இந்தப்படம், தற்போது உலகம் முழுவதும் வெளியாவதற்கு தயராகின்றது.



தமிழில் கிடைக்காவிடினும் புரியாத மொழி என்றாலும் அடிமைப்படுத்தும் கொடூர எண்ணங்கொண்ட அதிகாரவர்க்கம் இழைக்கும் அநீதிகளைக் காட்சிகளில் காண்பதெனின் நீங்களும் ஒரு முறை 'தபாட்டில்சிப்ஐலண்ட்' இனைப் பார்க்கத்தான் வேண்டும்.



அணுகுண்டின் பாதிப்பை அனுபவித்து உணர்ந்த ஹிரோஷிமா, நாகசாகி நகரத்தவர்கள் "அணுகுண்டு ஏற்படுத்தும் அழிவைப் பார்ப்பதற்கு எங்கள் நகரங்களுக்கு வாருங்கள்" என்று உலகத்தவர்களுக்கு வரவேற்பளிக்கிறார்கள். இலங்கையில் உள்ள தமிழர்கள் கடந்த காலங்களில் அனுபவித்திருந்த உள்நாட்டுப்போர் அழிவுகளும் இதுபோல ஒன்றுதான். அவர்களுடைய இந்தக் கூற்றை மனதிலிருத்திச் செயலாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரட்டை ஹிபாகுஷா

1939 செப்ரெம்பர் மாதம் முதலாம்திகதியளவில் ஆரம்பமான இரண்டாம் உலகப்போர் 1945 செப்ரெம்பர் இரண்டாம்திகதியளவில்முடிவுக்கு வந்ததாகவரலாற்றில்பதிவாகியுள்ளது. ஆனாலும் ஜப்பானிய நகரங்களானஹிரோசிமாமற்றும்நகசாகி ஆகியன அமெரிக்காவின் அணுகுண்டுகளைத் தமது மார்பில் தாங்கி ஏராளம் அவலங்களைச் சுமந்தஓகஸ்ட்6ஆம்திகதி(ஹிரோசிமா) மற்றும் ஓகஸ்ட் 9ஆம் திகதி(நகசாகி) ஆகியனவே உலகப்போர் ஆண்டு நினைவாகக் கடைப்பிடிக்கின்றது. பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொன்ற அந்தப்போரும்அந்தஅணுகுண்டு வீச்சுக்களுடன்தான் முடிவுக்கு வந்தது. அது நிகழ்ந்து இன்றைக்கு 71 வருடங்கள். வருடா வருடம் இந்த உலகப்போரைநினைவுகூரும்போது ஞாபகத்துக்கு வருகிறார் ஒருவர். அணுகுண்டுத்தாக்குதலால்பாதிக்கப்பட்டுஅந்தஅனுபவத்துடன்நீண்ட காலம்உயிர்வாழ்ந்தவர்என்றபெருமையும் அவருக்கே உடையது.

'சுடோமு யாமகுச்சி" என்று சொன்னால், "ஓ அவரா...! தெரியுமே" என்று நாம் சொல்ல மாட்டோம். ஏனென்றால்அவரைஎமக்குத்தெரியாது. அவர் ஜப்பானின் நாகசாகியில் பிறந்த ஒருவர். ஆனால், வரலாறு ஒரு நாளும் அவரை மறக்காது. ஏனென்றால், அவர் ஒரு ஹிபாகுஷா.அதுவும்சிறப்புவாய்ந்த ஹிபாகுஷா. அப்படியென்றால் என்னஎன்றுபார்ப்பதற்குமுன்னால்அவருடையகதை.

6, ஒகஸ்ட் 1945. உற்சாகமாக வண்டியில் சென்று கொண்டிருந்தார்சுடோமு யாமகுச்சி. அலுவலக வேலையாக அன்று அவரை ஹிரோசிமாவுக்கு அனுப்பியிருந்தார்கள். அப்போது அவருக்கு இருபது சொச்ச வயது. மிட்சுபிசி எனும் புகழ்பெற்ற ஜப்பானிய நிறுவனத்தில் பொறியியளாளர்; வேலை. படித்து முடித்தவுடன் வேலை. நல்ல சம்பளம்.

வண்டி நின்றது. தனது பையை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினார். அவருக்குத் தெரிந்த நகரம்தான் அது. சுற்றிலும் ஒருமுறை பார்த்தார். இன்று எவ்வளவு நேரம் வேலை இருக்கும்? எவ்வளவு ஓய்வு கிடைக்கும்? ஓய்வு கிடைத்தால் எங்கே போகலாம்? என்ன சாப்பிடலாம்? யோசனையுடன்நடக்கஆரம்பித்தார். முதல்அடிஎடுத்து வைத்திருப்பார், அவ்வளவுதான்.

எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை. இதுவரை கேட்காதஅளவுக்குஒருபெரியசத்தம். நிலம்அதிர்ந்தது. ஒருவேளைநிலநடுக்கமாக இருக்குமோ? ஜப்பானுக்கு நிலநடுக்கம்இயல்புதான்என்றாலும்காதைப்பிளக்கும் அளவுக்கு இவ்வளவு பெரிய சத்தம் கேட்காதே. யாமகுச்சி பயத்துடன் அண்ணார்ந்து பார்த்தார்.

திடுக்கிட்டார். வானம் நகர்ந்து கொண்டிருந்தது. நிலநடுக்கம் என்றால் நிலம் சட்டென்று நகர்ந்து விரிசல்கள் தோன்றும். சில கட்டிடங்கள் இடிந்து கீழே விழும். ஆனால், வானம் ஏன் நகர்கிறது? வானத்தில் ஏன் விரிசல் விழுகிறது. உண்மையில் வானம் அல்ல மேகங்கள் தான் நகர்ந்துகொண்டிருந்தன. யாமகுச்சி உற்றுப் பார்த்தார். சில மேகங்கள் அடர்த்தியான கறுப்பு நிறத்தில் இருந்தன. சில மேகங்கள் மெல்லிய சிவப்பு நிறத்தில் இருந்தன. இந்த இரண்டு மேகங்களும் ஒன்றுசேர்ந்த போது ஐஸ்கிறீம் உருவம் உருவானது. கிட்டத்தட்ட குடைபோல் அது விரிந்தது.

அதற்குப் பிறகு யாமகுச்சியால் எதையும் பார்க்க முடியவில்லை. விழித்து விழித்துப் பார்த்தார். கண் தெரியவில்லை. கசக்கினார். எரிந்தது. கை, கால், உடல் எல்லாம் எரிச்சல். காதைப் பொத்திக்கொண்டாலும் ஓயாமல் சத்தம். யார் யாரோ கத்தியபடி ஓடினார்கள். 'டொம் டொம்' என்று கட்டிடங்கள் இடிந்து கொண்டிருந்தன. யாமகுச்சி ஓட ஆரம்பித்தார். காலுக்குக் கீழே மனிதர்கள் செத்துக் கிடந்தார்கள். அவருக்கு அதுதெரியாது. அவர்பயத்துடன்ஓடிக்கொண்டிருந்தார். அவரது இடது காதிலிருந்து குருதி வழிந்துகொண்டிருந்தது.

'லிட்டில்போய்'எனும்அணுகுண்டைஹிரோஷிமாமீது அமெரிக்கா வீசியிருந்தது பிறகுதான் அவருக்குத் தெரியவந்தது. அன்றைய தினம் மட்டும் ஒரு லட்சத்து அறுபதாயிரம் ஜப்பானியர்கள்கொல்லப்பட்டிருந்தனர். யாமகுச்சி இருந்த இடத்திலிருந்து மூன்று கிலோமீற்றர்கள் தொலைவில் குண்டுபோடப்பட்டது. மறுநாள்காலை உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பேருந்து நிலையத்துக்கு ஓடினார் யாமகுச்சி.

ஆனால், அவருக்கு ஒரு விடயம் தெரியாது. மற்ற வெடிகுண்டுகளைப் போன்றதல்ல அணுகுண்டு. அதன் கதிர்வீச்சு நாலாபுறமும் பரவிக் கொண்டிருக்கும். நீங்கள் ஓடினாலும் அது உங்களைத் துரத்திக் கொண்டிருக்கும். யாமகுச்சியைக் கதிர்வீச்சுத்தாக்கியது. ஆனால், அதை அவர் உணரவில்லை. எப்படியாவது வீட்டுக்குப் போய் விட வேண்டும். அது ஒன்றே போதும்.

அவருடைய வீடு எங்கே இருக்கின்றது தெரியுமா? நாகசாகியில். சரியாக இரண்டே நாள்கள் கழித்து, அதாவது ஓகஸ்ட் 9ஆம் திகதி அன்று அங்கும் ஓர் அணுகுண்டை அமெரிக்கா போட்டது. ஹிரோஷிமாவில் என்னவெல்லாம் நடந்ததோ, அதெல்லாம் மீண்டும் நாகசாகியிலும் நடந்தது. அதேபோன்ற மேகங்கள். பயமுறுத்தும் அதே குடை. அதே சத்தம். அதே கதறல். அதே ஓட்டம். கட்டிடங்களும் மனிதர்களும் போட்டி போட்டுக்கொண்டு சரிந்து விழுந்துகொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட எழுபதாயிரம் பேர் செத்து மடிந்தார்கள். ஒரே ஒரு வித்தியாசம்தான். ஹிரோஷிமாவில் விழுந்த குண்டின் பெயர் 'லிட்டில் போய்' என்றால் நாகசாகியில்விழுந்தது 'பற் மன்'. இரண்டுமே வேடிக்கையான பெயர்கள்.

ஆனால், பல லட்சம் பேரின் அழிவுக்கு இந்த இரண்டும் காரணமாகிவிட்டன. அத்தோடுமுடிந்ததா? கதிர்வீச்சுக் காரணமாகப்பலஆண்டுகள்கழித்தும்ஜப்பானியர்கள் கடும் துயரத்தை அனுபவித்தார்கள். அவ்விடத்தில் புல்,பூண்டுகள் கூட முளை விடவில்லை.

அதிலும் பரிதாபம் யாமகுச்சியின் நிலை. பாவம் அவர். லிட்டில் போயிடம் இருந்து தப்பி ஓடி வந்து, பற்மனிடம் மாட்டிக்கொண்டார்.

ஆனால், இந்த முறையும் அவர் உயிர் பிழைத்துக் கொண்டார். இன்னொன்றுதெரியுமா? ஹிரோஷிமாவில் நடந்ததைப் போலவே நாகசாகியிலும் மிகச் சரியாக அவர் இருந்த இடத்திலிருந்து மூன்று கிலோமீற்றர்கள் தள்ளித்தான் அணு குண்டு விழுந்தது.

பிறகு, 2010ஆம் ஆண்டுதனது 94ஆவதுவயதில்புற்று நோய் காரணமாக யாமகுச்சி இறந்துபோனார். அந்த நோய்க்கான காரணம், ஹிரோஷிமாவும் நாகசாகியும் தான்.

சரி, அதென்ன ஹிபாகுஷா? அமெரிக்க அணுகுண்டுகளிடம் இருந்து தப்பி உயிர் பிழைத்தவர்களை ஜப்பானிய மொழியில் இப்படித்தான் அழைக்கிறார்கள். அப்படியானால் சுடோமு யாமகுச்சி ஓர் இரட்டை ஹிபாகுஷா, இல்லையா...?

மூலம் தி ஹிந்து

ஜப்பானிய நகரங்களானஹிரோசிமா மற்றும் நகசாகி ஆகியன அமெரிக்காவின் அணுகுண்டுகளைத் தமது மார்பில் தாங்கி ஏராளம் அவலங்களைச் சுமந்த ஓகஸ்ட் 6ஆம் திகதி (ஹிரோசிமா) மற்றும் ஓகஸ்ட் 9ஆம் திகதி (நகசாகி) ஆகியனவே உலகப்போர் ஆண்டு நினைவாகக் கடைப்பிடிக்கின்றது.






விட்டில் போயால் சிதைக்கப்பட்ட ஹிரோசிமாவின் ஒரு சிறு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம் கொள்ளாதே!



சமாதானபுரம் என்ற ஊரில் ஒரு உழவன் வாழ்ந்து வந்தான். அவன் மான் ஒன்றை அன்பாக வளர்த்து வந்தான். ஒருநாள் அந்த மான் காணாமல் போய்விட்டது. மானைத் தேடி உழவன் ஊர் முழுவதும் அலைந்தான். எங்கும் கிடைக்கவில்லை. கவலையால் துடித்தான். மானைக் கண்டுபிடிக்க அவன் செய்த முயற்சிகள் எவைவும் பயன் தரவில்லை.

இறுதியில், தன்னுடைய மான் உயிருடன் இல்லை, அது கொல்லப்பட்டு விட்டது என்பதை அவன் உணர்ந்தான். மானைக் கொன்றவனைக் கண்டு பிடிக்கக் கடவுளை நினைத்துக் கடுமையான தவம் செய்தான். அவன் முன் கடவுள் தோன்றினார். "கடவுளே! எனது மானைக் கொன்றவனை இங்கே கொண்டு வந்து நிறுத்துங்கள்" என்று கோபத்துடன் சொன்னான். "அன்பனே! கோபம் கொடியது. யார் கோபம் கொள்கிறாரோ, அவரை அந்தக் கோபமே அழித்துவிடும். கோபத்தை விடு. உன்மானை வேண்டுமானால் தருகிறேன்" என்றார் கடவுள். கோபம் சிறிதும் அடங்காத அவன், "எனக்கு மானும் வேண்டாம், வரமும் வேண்டாம். மானைக் கொன்றவன்தான் வேண்டும்" என்றான். "அப்படியே ஆகட்டும்" என்று வரமளித்த கடவுள் அங்கிருந்து மறைந்தார்.


அப்போது பயங்கரமாகக் கர்ஜித்தபடி சிங்கம் ஒன்று அவன் முன் தோன்றியது. "ஐயோ! என் மானைக் கொன்றது இந்தச் சிங்கமா? கோபத்தால், இப்படி ஒரு வரம் கேட்டுவிட்டேனே. என்ன செய்வேன்?" என்று அலறியடித்து ஓடினான். சிங்கம், அவன் மேல் பாய்ந்து தாக்க முற்பட்டது. அவன் ஒருவாறு தப்பிவிட்டான். இதற்குப் பிறகுதான் கோபம் கொடியது என்பதை அவன் உணர்ந்தான்.

## சிந்தனைக்கு


பொறாமை
கொள்ளாத
உள்ளத்தில்,
கடவுள்
விரும்பி வந்து
உறைவார்.



ச.சங்கவி,
தரம் – 2ஏ,
யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தி.



மதியழகன் காவியா,
தரம் – 4ஏ,
யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை.



# பணிவோம் நிமிர்வோம்

புகழ்பெற்ற அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், அயராத உழைப்பாளி. அதிபுத்திசாலி. ஆனால், தன்னைப்போல் ஆய்வு கூடத்திலிருந்து அதிக நேரம் ஆய்வில் ஈடுபடக் கூடியவர்கள் எவருமே இல்லை என்ற இறுமாப்பு அவரிடம் இருந்தது. ஆய்வுகூடக் கதவுக்கு உட்புறமாகத் தாழ்ப்பாளைப் போட்டபடியே எப்போதும் சோதனைகளில் ஈடுபட்டிருப்பார். அவரைச் சந்திக்க வருபவர்கள் யாராவது கதவைத் தட்டினால், "உங்களால் என் ஆய்வு பாதிக்கப்பட்டுவிட்டது" என்று அவர்களுடன் முரண்பட்டுக் கொள்வார். இதன் காரணமாக அவரைச் சந்தித்துப் பேசுவதற்குப் பலபேர் பயந்து விலகியே இருந்தார்கள்.

மனிதர்கள் வந்து அவரைத் தொந்தரவு செய்யாத போதிலும் அவர் ஆசையுடன் வளர்த்து வந்த இரண்டு பூனைகள் அவ்வப்போது வந்து அவர் மடியில் அமரும், விளையாடும், தொந்தரவு செய்யும். ஒரு பூனை பருமானானது. மற்றைய பூனை மெலிதானது. இந்த இரண்டு பூனைகளின் நடமாட்டம் அடிக்கடி ஆய்வறையில் நடந்ததால் எரிச்சல் அடைந்தார் ஐன்ஸ்டீன். வேலைக்காரனை அழைத்து,"ஆய்வுகூடச் சுவரில் பெரிதாக ஒரு துவாரமும் சிறிய அளவில் ஒரு துவாரமும் அமை. பருத்த பூனை பெரிய துவாரத்தின் வழியிலும், மெலிதான பூனை இன்னொரு சிறிய துளை வழியிலும் வெளியே சென்றுவிடும்" என்றார்.

அப்போது வேலைக்காரன், அதற்கு ஏன் "இரண்டு துவாரங்கள்? ஒரு பெரிய துவாரம் அமைத்தால் அதன் வழியே இரண்டு பூனைகளும் சென்றுவிடுமே" என்று சொன்னான். வேலைக்காரன் இப்படியொரு பதிலைச் சொன்னதும் அவர் சிந்தித்தார். "இந்தச் சின்ன விடயம் கூட எனக்குப் புலப்படவில்லையே! நானா புத்திசாலி?" என்று தனக்குள் கேள்வி கேட்டார். மேதையின் மனதில் நிரம்பி வழிந்த பேதமை அகன்றது.

ஆணவ இருட்டை எம்மிடமிருந்து அகற்றினால், அந்த இடத்தில் அடக்கமும் பணிவும் வந்தமர்ந்து கொள்ளும். பணிவின் வெளிச்சம் நம்மைப் உலகுக்குக் காட்டும். எம் புகழை மேலும் கூட்டும். எம் பெயரை **வரலாற்றில் தீட்டும்**. ஆதலால் பணிவோம் உயர்வோம்.

# சிந்தனைக்கு சில வரிகள்...

1. வெற்றி பெறும் வரை குதிரை வேகத்தில் ஓடு. வெற்றி பெற்ற பின்னர், குதிரையை விட வேகமாக ஓடு. அப்பொழுதுதான் உன் வெற்றி, உன்னிடம் நிலைத்து நிற்கும்.
2. கதவைத் தட்டாதவர்கள் எத்தனையோ வாய்ப்புக்களை இழந்திருக்கிறார்கள். ஆதலால், நீ எப்போதும் கதவைத் தட்டிக்கொண்டே இரு. உனக்கான வாய்ப்பு உன்னைத் தேடிவரும்.
3. அழகாக இல்லை என்று வருத்தப்படாதே. உன் தகுதி உயரும்போது, நீயும் அழகாகத் தெரிவாய்.
4. எந்த இலட்சியமும் இல்லாது இந்த உலகத்தில் வாழாதீர்கள். ஏனென்றால், வரலாற்றில் நீங்கள் காணாமல் போய்விடுவீர்கள்.
5. கற்பதைப் போன்ற இலகுவான காரியம் உலகத்தில் எதுவுமே இல்லை. ஆதலால், கற்க வேண்டிய வயதில் நன்றாகக் கற்றுக் கொள்ளுங்கள்




## சிரி...சிரி....



ஆசிரியர் : ஏன் கலர் கலராக நூல் கொண்டு வந்திருக்கிறாய்?
மாணவன் : நீங்கதானே சேர் வாங்கிவரும்படி சொன்னீங்க?
ஆசிரியர் : நான் எப்போது சொன்னேன்?
மாணவன் : உங்க வீட்டில இருக்கிற நல்ல நூல்களை நாளைக்குப் பள்ளிக்கு வரும்போது கொண்டு வாங்கோ என்று சொன்னீங்களே
ஆசிரியர் : அட...

# நடன அசைவுப் பாடல்



வண்ண மலரே! வண்ண மலரே!
விஷயம் தெரியுமா? உன்
கிண்ண மதுவை வண்டெடுத்து
கிளையில் சேர்க்குது
மரக்கிளையில் சேர்க்குது.

புள்ளி மானே! புள்ளி மானே!
புதுமை தெரியுமா? உன்
கள்ள மில்லாப் பார்வை கண்டு
கணை தொடுக்கிறான் வேடன்
கணை தொடுக்கிறான்.

வெள்ளைக் கறையான்! வெள்ளைக் கறையான்!
வேடிக்கை அறிவாயோ உன்
நல்ல புற்றில் பாம்பு வந்து
நடன மாடுது கபட
நடன மாடுது.

செல்லக் கிளியே! செல்லக் கிளியே!
செய்தி தெரியுமா? உன்
சொல்லைக் கேட்டு மகிழ்ச்சி கொள்ள,
சிறையில் வைக்கிறான் மனிதன்
சிறையில் வைக்கிறான்.

ஆற்று மீனே ஆற்று மீனே
ஆபத் தறிவாயோ? உன்
கூற்று வந்து புழு வடிவில்
காத்திருக்குது கவனம்
காத்திருக்குது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்கனவே சாதாரண கணவனமாரைக் கலியாணம் முடிச்ச பெண்கள் அவங்களாலை சரியாய்க் கஸ்ரப்படுகினம். அடி. உதையெண்டு பெரிய வேதனை. இதோட குடியும் வேற. இப்ப பல ஆண்கள் ஜிம்முக்குப் போய் பயிற்சியெடுத்து இருக்கிறதால எங்களுக்கும் பெரிய ஆபத்துக் காத்துக் கிடக்கு..

# தோட்டவேலையில் எடுப்பதும் ஜிம்மில் எடுப்பதும் காட்சி மாறிவிட்டது!

தொல்புரம், சி.கதிர்காமநாதன்

இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்திலுள்ள பழைய, புதிய வீடுகள் புதுப் பொலிவு பெறத் தொடங்கி விட்டன. வீடு புடைந்து பற்றைக் காடாகக் கிடந்த வளவுகள் எல்லாம் திடீரெனப் பற்றைகள் வெட்டப்பட்டு, சரிந்த மதில்கள் நிமிர்த்தப்பட்டு, சுவர்கள் யன்னல்கள் எல்லாம் சுரண்டப்பட்டு வர்ணம் பூசி, புது வாசத்துடன் புதுப்பொலிவு பெறத் தொடங்கிவிட்டன.

பொலிவு பெற்ற வீடானது, முன்பள்ளியாகவோ, தனியார் கல்வி நிலையமாகவோ, நிறுவனமாகவோ, சமுர்த்தி அலுவலகமாகவோ, உயர் கல்வி போதிக்கும் கல்லூரியாகவோ, அழகுக் கலை நிலையமாகவோ அல்லது நவீன மயமான கொத்துரொட்டிக் கடையாகவோகூட மாறிவிடுகின்றது.

இப்படிப் படுவேகமாக ஆரம்பிக்கும் தொழிலானது தொடர்ந்தும் இயங்குவதென்பது கேள்விக்குறி. தொடங்கிய வேகத்திலேயே கடைகள் பூட்டப்படுவதுமுண்டு.

வேலை காரணமாகச் சென்று வரும்போதுதான் நகருக்கு அண்மையில், முக்கிய வீதியில், சனப்புழக்கம் உள்ள இடத்தில் அமைந்திருந்த அந்த வீடு நான் பார்க்கும்போதெல்லாம் பூட்டப்பட்டே இருந்தது. யாரும் அங்கே வசிப்பதற்கான அறிகுறிகள் தெரியவில்லை.

அப்படியிருக்க இருந்தாற்போல அந்த வீடு திருத்தப்பட்டது. வளவு துப்புரவு செய்யப்பட்டு, சுவர் எல்லாம் வர்ணம் பூசி, கடைசியாக வீட்டு வாசலில், முகப்பில் பெரியளவு விளம்பரப் பலகை வைக்கப்பட்டது. அதில் ஆண்கள் இடுப்பளவு தோற்றத்தில் திறந்த மேனியராகக் கறுப்பு, வெள்ளை நிறங்களில் கட்டுமஸ்தான உடம்பில், தோள்கள் புடைக்கும்படியாகப் 'போஸ்' கொடுத்துக் கொண்டிருந்தனர். பாகுபலி நாயகன் பிரபாஸ் மாதிரியாக அவர்கள் பார்வைக்குத் தெரிந்தார்கள். அது ஒரு உடற்பயிற்சி நிலையம்(ஜிம்) என்று புரிந்தது.

என்ன எல்லாரும் வெளித்தேசத்து ஆண்மக்களாகவே இருந்தார்கள். செழிமையாகத் தெரிந்தார்கள். ஒருவரும் எங்கட ஊர் ஆக்கள் இல்லை. சொல்லப் போனால், அனைவரும் படங்களில் வரும் 'மல்யுத்த வீரர்கள்' போலத் தெரிந்தார்கள். ஒரு சில நாள்களில் அந்த வீட்டுக்கு முன்னால் பல வகைப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

உள்ளே பல வகையான இயந்திர சாதனங்களுக்கு முன்னால், எமது முன்னைய காலங்களில், ஜல்லிக் கட்டில் காளைகளை அடக்கிய ஆண்மக்கள் அந்த இயந்திரங்களை அசைத்து, தூக்கி, உருட்டித் தேகப்பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். அநேகமாகக் காலை வேளையில் இந்தப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாலையிலும் அது இயங்கிக் கொண்டுதான் இருந்தது.

காற்சட்டை, பெனியன் அல்லது ரீசேட் அணிந்து வியர்க்க வியர்க்க உடலைக் கடுமையாக வருத்திப் பலர் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். எல்லோரும் வாலிபர்கள். அவர்கள் தங்கள் மனங்கவர்ந்த நாயகர்களை நினைத்துக்கொண்டு, அது இளைய தளபதி விஜயோ, தல அஜித்தோ அல்லது குத்துச் சண்டை வீரர், டபிள்யூ, டபிள்யூ, இ. புகழ் ஜோன் சீனா மாதிரி, யாராகிலும் ஒருவரை நினைத்து அதைச் செய்து கொண்டிருக்கலாம். தாங்களும் அவர்கள் மாதிரி மாறுவதற்கு ஆசைப் பட்டிருக்கலாம்.



அன்றும் வழமைபோல் வேலைக்குப் போகும்போது பேருந்தானது போக்குவரத்து நெரிசலுக்குள் சிக்கிச் சரியாக அந்த ஜிம் வீட்டுக்கு முன்னால் போய் நின்றது. யன்னலோரம் இருந்தவர்கள் அந்த வீட்டுக்குள் நடக்கும் இளசுகளின் உடற்பயிற்சியை வேடிக்கை பார்த்தார்கள். ஏகப்பட்ட வினாக்களை அருகிலிருந்தவர்களிடம் தொடுத்தார்கள்.

"தம்பி முந்தி ஆயுதப் பயிற்சி செய்து பெடியள் சண்டைக்குப் போச்சினம், இப்ப உவையள் என்ன செய்யப் போயினம்...?"

"அப்ப உந்தக் கோதாரி ஒண்டுமில்ல"

"உந்தப் பெடியளுக்கு வீடு வாசலிலை வேலையள் ஒண்டுமில்லையோ...?"

"வீட்டில அந்தரத்துக்கு ஒரு வாளித் தண்ணி அள்ளிக் கூடத் தர மாட்டான், ஜிம்முக்குப் போறானாம் காசைக் கரியாக்க"

ஏகப்பட்ட புலம்பல்கள். வண்டி இப்போது ஓடத் தொடங்கிவிட்டது. எல்லாம் காலத்தின் கோலமென்று ஏற்றுக்கொள்ள வேண்டியது தானா...?

மருத்துவம், மனிதன் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறது. உடல் மாத்திரமல்ல உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று அத்துறை சார்ந்தவர்கள் சொல்கிறார்கள். விளக்கமாகச் சொல்வதென்றால், வடக்கு மாகாண சபை மாத்திரம் ஆரோக்கியமாக இருந்தால் போதாது. மக்களும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.

"ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அது தாண்டா வளர்ச்சி" பழைய பாடலும் இதையே சொல்கிறது.

இந்த உடற்பயிற்சி என்ன செய்கிறது...?

இருக்கிற உடம்பை அதிகரிக்கச் செய்ய இந்த உடற்பயிற்சி உதவுகிறதா...?

ஏற்கனவே தேவையில்லாமல் ஊதிப் பெருத்துவிட்ட உடம்பைக் குறைக்க உதவி செய்கிறதா...?

சீரான உணவுப்பழக்கமும், நாளாந்தம் செய்யும் சாதாரண வேலைகளுமே உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகின்றன.

இளவயதில் உடம்பு பெருக்க வேண்டிய அவசியம் என்ன?

எல்லாவற்றுக்கும் மோட்டார் சைக்கிளில் ஏறி அமர்ந்தால் நிலை என்னவாகும்?

வீட்டு அம்மாக்களும் சமையலை விட்டு 'ஓடர்' மூலம் உணவை எடுக்கப் பழகி விட்டார்கள். கொத்து ரொட்டிக்குள் குடும்பமே ஐக்கியமாகி விட்டது.

உடலுக்கு வேலை என்பது மறந்தே போயாச்சு?

முப்பது நாற்பது வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் எப்படியிருந்தது?

விடியல் காலை நேரம் கிராமத்து வீடுகளை விட்டுத் தகப்பனும் மகனும் எங்கே நின்றார்கள்? தோட்டத்தில் வேலை செய்யத் தொடங்கியிருப்பார்கள். சூரிய வெளிச்சம் வரும் வரை மண்ணில் வேலை செய்து கொண்டு இருப்பார்கள். உடலிலிருந்து வியர்வை ஒழுகும். தசைகள் புடையும். வெயில், பனி, காற்று என உடல் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு பழக்கமடையத் தொடங்கியிருக்கும்.

தோட்ட வேலை முடிந்த பின்னர் தானே புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடம் ஓடிப் போனது.

தோட்டத்துக்கும் வீட்டுக்குமாக எத்தனை தடைவைகள் சைக்கிள் ஓடியிருப்பார்கள். தோட்டத்தில் விளைந்த மரக்கறிகளைக் கடகத்தில் சுமந்து கொண்டு பொடி நடையாகச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்றுத் தனது உடலையும் முழுக் குடும்பத்தையும் ஆரோக்கியமாக வைத்திருந்தவர்கள் எத்தனைபேர்.

அவர்களது வாழ்க்கையே அவர்களுக்கு உடற்பயிற்சியானது. இப்போது காலம் மாறிப்போய் விட்டது. நிறைய விடயங்களை வளர்ச்சியானது புரட்டிப்போட்டு விட்டது. பண வரவு அதிகமாகி விட்டது. பணத்தைப் புரட்டும் எண்ணம் வளர்ச்சியடைந்து விட்டது.

அநேகமாக இப்பொழுது அதிக ஊர்களிலும் உடற்பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. படித்து முடித்து விட்டவர்களும், படித்துக் கொண்டிருப்பவர்களும், சும்மா இருப்பவர்களும் ஜிம்முக்குப் போகத் தொடங்கிவிட்டார்கள்.

இதனால் இனி வரும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் ஆண் அழகர்கள் அதிகமாகக் காணப்படுவார்கள். தொப்பை இல்லாமல், தசைகள் இறுக்கமாகக் கதாநாயகர்கள் போல் அவர்கள் பெண்களைக் கவரத் தொடங்குவார்கள்.

பெண்களும் இதைப் பார்த்துச் சும்மா இருப்பார்களா?

இவர்களுக்கென்றும் ஜிம் நிலையங்கள் தொடங்கிவிடும் மிக விரைவில்( தொடங்கி விட்டதோ தெரியவில்லை) ஆண்களுக்கு நிகராக இவர்களும் தமது புஜபலத்தைக் கூட்டுவார்கள். வலிமையாகி விடுவார்கள்.

சரி, ஏனம்மா ஆண்கள் மாதிரி ஜிம்முக்குப் போறியள் என்ன காரணம்.?"

"ஏற்கனவே சாதாரண கணவன்மாரைக் கலியாணம் முடிச்ச பெண்கள் அவங்களாலை சரியாய்க் கஸ்ரப்படுகினம். அடி, உதையெண்டு பெரிய வேதனை. இதோட குடியும் வேற. இப்ப பல ஆண்கள் ஜிம்முக்குப் போய் பயிற்சியெடுத்து இருக்கிறதால எங்களுக்கும் பெரிய ஆபத்துக் காத்துக் கிடக்கு. இதாலை நாங்களும் ஜிம்முக்குப் போய் உடல் பலத்தைக் கூட்டினால் தான் உவையளைச் சமாளிக்க முடியும். சரியே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சோலை படுகொலை

## நினைவு நாளில் எங்கள் தெரிவு என்ன...?



காயத்திரி

**2006** ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதி தமிழர் வரலாற்றில் துயர் படிந்த நாளாகி நாளையோடு பதினொரு வருடங்கள் கடக்கின்றன. தமிழர்களின் நெஞ்சு கனக்கும் துயரில் பெரியதுயர்இதுவென்றும்சொல்லலாம். உலகத்திலேயே அதிகளவு பெண்கள், அதுவும் பாடசாலை மாணவிகள் ஒரே தடவையில் கொல்லப்பட்டது. இதுவே வரலாறாகவும் இருக்கிறது. உலகின் எந்த மூலையிலும் இப்படி ஒரு செயல் நடக்கவில்லை. அந்தச் சாதனையை இலங்கை அரசு 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அதிகாலை வேளை நடத்தி முடித்திருந்தது.

### திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர் மாணவிகள்

பேனா ஏந்திய கரங்கள் துண்டாடிப் போய்க் கிடந்தன. துள்ளிக் குதித்து ஓடித் திரிந்த உடலங்கள் தசைக் குவியல்கள் ஆகின. ஆயிரமாயிரம் கனவுகளைச் சுமந்த நெஞ்சு குண்டுச் சிதறலால் கிழிக்கப்பட்டு குருதி கொட்டிக் கிடந்தது. அதிகாலைவேளைகிணற்றடியிலும், மலசல கூடத்திலும், சமையலறையிலும்தத்தம் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவிகள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர்.

காலையிலயே விழித்து வந்த கிபிர் விமானங்கள் ஆறு தடவைகள் குண்டுகளைக் கொட்டின. அதில் முதல் குண்டு திட்டமிட்டபடிவளாகத்தின்முக்கியவாயிலில் போடப்பட்டது. மாணவிகள் வாயிலின்ஊடாகவெளியேறமுடியாதபடிவகுக்கப்பட்டதிட்டத்தின்முதல்நகர்வு இது.

அடுத்தஐந்துகுண்டுகளும்கண் இமைக்கும் நேரத்துக்குள் நான்கு திசைகளிலும் போடப்பட்டன. ஆறாவது குண்டு மீண்டும் வாயிலில் போடப்பட்டது.

### அரசு மற்றும் நடுநிலையாளர்களின் அலட்சியப்போக்கு

அங்கிருந்த நூற்றுக்கணக்கான மாணவிகளின் ஓலம் இப்போதும்காதில் ஒலிக்கிறது. ஒவ்வொரு உடலாக அள்ளி எடுத்த கரங்கள் இப்போதும்குருதிக்கறை மாறாதுஇருக்கின்றன. அன்றுஆட்சியில் இருந்தவர்கள் இந்தக் கொலை பற்றி வாய்மூடிமௌனிகளாகவேஇருந்தனர். இன்று வரை அந்தப் பெரிய படுகொலை பற்றி எந்தவித விசாரணைகளோ அல்லது பொறுப்புக்கூறல்களோ இடம் பெறவில்லை.

அப்போது பதவியில் இருந்த ராணுவப்பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல, கொல்லப்பட்டவர்கள் மாணவிகள் இல்லை என்ற கருத்தை முன்வைத்திருந்தார். சம்பவ இடத்தைநேரில்சென்று பார்வையிட்ட நடுநிலை அமைப்புக்களான ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமும் இலங்கைப்போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கொல்லப்பட்ட அனைவரும் அப்பாவி மாணவிகளே என்பதை உறுதிசெய்தன. இருப்பினும் இந்தத்தாக்குதலுக்கு ஐக்கியநாடுகளின் சிறுவர்நிதியம்மற்றும்பன்னாட்டுச்சிறுவர் அமைப்புக்கள், பெண்கள்அமைப்புக்கள் எனஎவையும்நடவடிக்கைஎடுக்கதவறிஇருந்தமை இன்றைய நாளில் சுட்டிக்காட்டத்தக்க விடயம் ஆகும்.

### தமிழ் மக்களுக்கு முன்பாகவுள்ள கேள்வி

ஈழத்தமிழ் மக்கள் வரலாற்றில் செஞ்சோலை தாக்குதல் என்பது அழிக்க முடியாத ஒரு துயர நிகழ்வு. அடக்குமுறைக்கு எதிராகப் போராடினால், பெரியவர்கள் என்ன? சிறியவர்கள் என்ன?எல்லோருக்கும்ஒரேபதில்தான். அது அவலமான, வேதனைமிக்க சாவுதான் எனச் சிங்கள ஆக்கிரமிப்பு அரசு மறுபடியும் உறுதி செய்த நாளாகவே ஒகஸ்ட்14ஆம் நாள் பார்க்கப்படுகிறது. தழிழ்மக்களின்விடுதலைப்போராட்டம் இடைநடுவில் தடுக்கப்பட்டாலும் போர் நிறைவடைந்து ஒரு தசாப்தத்தை எட்டவுள்ள நிலையிலும் தமிழ் மக்களுக்கு இதுவரையில் சரியான தீர்வு கிடைக்கவில்லைஎன்றகசப்பானஉண்மையை நாங்கள் மீண்டும் நினைவு கொள்வோமாக...!

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் நடந்த எண்ணற்ற படுகொலைச் சம்பவங்களைப்போலசெஞ்சோலைப்படுகொலைச் சம்பவமும் ஒரு பதிவாகவே இருக்கப் போகிறதா? அல்லது இதுபோன்ற சம்பவங்களை மனத்திலிருத்தி சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டஅரசியல்தலைமையின் கீழ் ஒன்றிணைந்து, நீதியான, நேர்மையான வழியில் அரசியல் ரீதியாகப் போராடி தமிழ் மக்களின் விடுதலையைப் பெற்றெடுக்கப் போகின்றோமா...? ஒரு திடமான முடிவை இன்றைய நாளிலாவது நாம் தெரிவு செய்வோமா?

# பண்டாரவன்னியன் 8



இராம. இராகவா

## தொட்டு வணங்கி மீண்டவள் நாச்சி...

"குருவி
இக் கணமே
இக் களத்தை விட்டு
வெளியேறு"

வன்னியன் உரைத்த
வார்த்தையைக் கேட்டதும்
நெஞ்சம் அடைத்து
நெக்குருகிப் போனது காண்
அக் கணமே குருவி
அரைச் சடலம் ஆனாள்

வெளியே
அவள் கரும்புரவி
கனைத்தது
உள்ளே
அவள் இதயம்
துடித்தது.

"ஐயனே
உமது வார்த்தைக்கு
அடங்குகிறேன்
இது சத்தியம்
நீ இல்லாத உலகு வேண்டாம்
உன் உயிருக்கு ஒன்றெனில்
என் உயிரும்
காற்றோடு கலக்கும்"

மீசை துடிக்கத்
திரும்பினான் வன்னியன்
கரும்புரவி
அவளை ஏற்றிக் கொண்டு
தூரப் போயிற்று
தளபதிகள்
சுவடாரத்துக்குள் சுவடினர்

1803 ஐப்பசித் திங்கள்
முப்பத்தொராம் நாள்
அடிவானம் மெல்லச்
சிவக்கத் தொடங்கியது

சம்மளங்குளத்தில்
ஆயிரத்து எண்ணூற்றிப்
பதினோராம் ஆண்டில்
ஒரு நாள்.
நடு நிசி
தாண்டிக் கொண்டிருந்தது
ஓலைக் குடிலின்
வாசலில்
ஒற்றைப் பந்தம்
காற்றில் படபடத்தது
இரு விழி நீர்சிந்த
போர்ச் செய்தி
தாங்கி வரும் ஒற்றனின்
காலடியோசைக்காக
குருவிச்சை நாச்சியார்
காத்துக் கிடக்கிறாள்.

வேதனையின் சாகரத்துக்குள்
வீழ்ந்திடும் அனைவருக்கும்
காலங்கள் மெல்ல
நகரும்
கண்ணீரும்
மண்ணில் கரையுடைத்தோடும்

நாச்சியின் கண்ணீரும்
ஓய்வின்றி ஓடிக் கொண்டிருந்தது.

உடையாவூரின்
தாக்குதல் முடிவுகள்
வரத் தாமதமாவதேன்...!

படைவீடு விட்டு வந்த
மூன்று வருடங்களில்
கடந்த பாதைகளின்
துக்கங்கள்
நெஞ்சை முட்டிக் கிடந்தன.

1803இல்
படைவீடுகள் பத்தும்
பற்றி எரிய
தளபதிகளின் சந்திப்பு

பாதியில் முறிய
பண்டாரவன்னியனைத்
தோற்கடிகடித்தன
வெள்ளைப் படைகள்.

அப்புலத்தை
கற்சிலைமடு என
வரலாறு எழுதிக் கொண்டது.
உற்ற துணையான தோழி
இச் செய்தி
உரைத்தபோது
குருவி
துடிதுடித்து
மண்ணில் வீழுந்தாள்

வன்னியன் வீரம்
பழுதென்றானதா?
காட்டிக் கொடுத்து
பின்னிய வலைக்குள்
எங்கள் மறவர்
வீழ்ந்து போனாரா?
சிங்க நிகர் வீரரெல்லாம்
தங்கள் உயிர் கொடுத்தனரே
பதினான்கு வீரரோடு
பண்டார வன்னியன்
பின் நகர்ந்து போனானாம்

காற்றும் கனத்து
கன்னங்கள் உரசிப் போனது.
வேரும் விழுதும்
விறகென்றானதா?
போரும், வாழ்வும்
இல்லையென்றானதா?
வேதனை மூள
புலம்பித் தீர்த்தாள் குருவி.

கைகள் வாள் தொட்டன
கால்களில் உரம் வந்து சேர்ந்தது
கட்டளைக்காகக்
காத்திருக்கத் தொடங்கினாள்.
அழைப்புக்காய் காத்துக் கிடந்து
போருக்கென்று ஆர்ப்பரித்துப்
போனபோது
அந்நியப் படையின்
ஆதிக்கம்
கண்டிருக்கிறாள்

1810இல்
மும்முனைத் தாக்குதலில்
எம்மவர் சளைக்காது
வீரம் காட்டிய மண்ணை
ஒருமுறை
தொட்டு வணங்கி
மீண்டவள் நாச்சி...

(தொடரும்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செல்லும் வழியின் தூரம் 14





■ ப்ரியமதா பயஸ்

பயஸ் களப்பணிக்காகப் போய் இரண்டு நாள்கள் கடந்துவிட்டன. அயலில் விழுந்து கொண்டிருக்கின்ற செல்கள், கொத்துக்குண்டுகள், அவ்வப்போது வரும் துப்பாக்கிச் சன்னங்கள் எல்லாமே உயிரைப் பிளிந்துகொண்டிருந்தன. "இன்று எப்படியும் வருவேன்" என்றுதானே சொன்னார். அழைத்துச் சென்றவர்களும் "இன்று பக்குவமாகக் கொண்டுவந்து விடுவோம்" என்றுதானே சொன்னார்கள். ஏன் இன்னும் காணவில்லை...! மனம் அங்கலாய்த்தது. இந்த அங்கலாய்ப்பையும் அவஸ்தையையும் உயிரைத் தின்னும் வலியையும் இலகுவாகச் சொல்லில் உணர்த்திவிட விடமுடியாது.

## உயிர் தின்று கொண்டிருந்தது களம்

கணவனைக் களத்துக்கு அனுப்பிவிட்டுக் கைக்குழந்தையுடன் போரின் இறுதித் தருணத்தில் தவித்துக் கொண்டிருக்கும் பெண்ணவளான எனது மனநிலை எப்படியிருக்கும் என்பது சொல்லி மாளாது. இதுவே போருக்குள் அகப்பட்ட பெண்கள் பெரும்பாலாரினதும் நிலையும். அவர்கள் அனுபவித்த உச்சக்கட்டத் துயரும்கூட பல நாள்களாகப் பட்டினி கிடந்த கணவனைக் களத்துக்கு அனுப்பிவிட்டுத் துயரையும் வலியையும் சுமைக்குமேல் சுமையாகச் சுமந்துகொண்டேன். நேரம் நகர நகர மனதில் கனம் அதிகமாகியது. கணவனை இன்னும் காணவில்லையே. அவர் போய் இருப்பது சாதாரண களம் அல்ல. உலகப் படைகளைத் திரட்டி மூர்க்கத்தனமாக அனைத்து முனையாலும் முன்னேறிக் கொண்டிருக்கும் பெரும் படையை குறுகிய நிலத்துக்குள் எதிர்த்து நிற்க வேண்டிய இக்கட்டான களம் அது. அயலில் விழும் கொத்துக்குண்டுகளை அலட்சியப்படுத்திக் களத்துக்கு விரைந்த பயஸின் நினைவுகளே நிறைந்திருந்தன என்னிடம். கணத்துக்குக் கணம் வீரச்சாவடையும் ஒவ்வொருவரின் சடலங்கையும் வீட்டுக்குக் கூடக் கொண்டுவரமால் இறுதிச் சடங்குகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு போராளியும் சாவை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தான். மக்களுக்கும் அதுவே நிலை. இதை எல்லாம் நினைக்கையில் மனம் சரிந்தே போனது.

## சில ஆயிரங்களுக்குச் சிறிய பொருள்கள்.

எனது கூடாரத்துக்கு அருகில் ஒரு சிறிய சந்தை ஒவ்வொரு நாளும் கூடும். இலத்திரனியல் பொருள்கள் உட்பட உடு புடவைகள், பாத்திரங்கள், கொப்பராத் தேங்காய்கள், முட்டுக்காய்த் தேங்காய்கள், நாயுண்ணி இலைகள், வாழைத்தண்டுகள், வாழைக்கிழங்குகள், பனம் குருத்துக்கள், ஆலமரப் பட்டைகள், காரை இலைகள், இவைகளும் அவ்வப்போது கண்ணில் தென்படும். விற்பவர்கள் கேட்குமளவுக்குக் காசைக் கொடுத்து மக்கள் அவற்றை வாங்கிக்கொண்டு போவார்கள். அன்று மூன்று 'லெமன் பொப்' பிஸ்கட் பைகளோடு ஒருவர் வந்தார். அவரை இருபது, முப்பது பேர் வரையில் மொய்த்துக்கொண்டனர்.

"எனக்கு ஒன்றைத்தா தம்பி... குழந்தைப்பிள்ளை காச்சலோட கிடக்கு, எவ்வளவு வேணும் எண்டாலும் தாறன்"

ஆளுக்காள் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லிக் கெஞ்சி மன்றாடினர். நானும் ஒன்றை வாங்கலாம் என்றால், எப்படி முடியும்...? அவரிடம் இருப்பதோ மூன்றே மூன்று பக்கற்றுக்கள்தான். கொண்டு வந்தவர் யாருக்குக் கொடுப்பது என்ற திரிசங்கு நிலையில் தவித்தார். ஆயிரம் ரூபாத் தாள்கள் நீட்டப்பட்ட திசையில் மூன்று பைகளும் ஒவ்வொன்றாகப் பறந்து போயின. மற்றவர்கள் ஏமாந்தவர்களாக நடையைக் கட்டினர். மூன்று பிஸ்கட் பைகளையும் மூவாயிரம் ரூபாவுக்கு விற்ற மகிழ்வில் அவரும் கிளம்பிவிட்டார். சற்று நேரத்தில் இருபது வரையான இளனித் தேங்காய்களுடன் ஒருவர் வந்தார். அவரை ஐம்பதுபேர் வரையில் சுற்றிக்கொண்டனர். அவர் ஒவ்வொரு தேங்காய்களையும் ஆயிரம், ஐநூறு என விலைபேசி விற்கத் தொடங்கினார்.

பார்த்துப் பாராமல் மக்கள் கூடி அதை வாங்கிக் கொண்டிருந்தனர்.

சற்றுத்தொலைவில் தமிழீழ காவல் துறைச் சீருடைகள் தெரிந்தன. விற்றுக் கொண்டிருந்தவர் விற்றது பாதி விற்காதது பாதியாக எல்லாவற்றையும் போட்டுவிட்டுத் ஓடித்தப்பினார். கூடி நின்ற மக்கள் ஆளாளுக்கு அடிபட்டு அவற்றைப் பொறுக்கிக்கொண்டு அவ்விடம் விட்டகன்றனர். காரணம், அதிக விலைக்கு மக்கள் மத்தியில் பொருள்களை விற்பதையும், தமது உயிரைப் பணயம் வைத்து அவர்கள் தேங்காய் பிடுங்குகின்ற செயற்பாட்டைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், திருட்டுக்கள் அதிகரிக்கக்கூடாது என்பதற்காகவும் காவல் துறையினர் இக்கட்டான இந்த வேளையிலும் தமது கண்காணிப்பைத் தொடர்ந்தனர். ஆனால், ஆயிரங்களுக்கு விலைபோகும் தேங்காய்கள் அரு மருந்தாகவே இருந்தன.



> உலகப் படைகளைத் திரட்டி மூர்க்கத்தனமாக அனைத்து முனையாலும் முன்னேறிக் கொண்டிருக்கும் பெரும் படையை குறுகிய நிலத்துக்குள் எதிர்த்து நிற்க வேண்டிய இக்கட்டான களம். ஒவ்வொரு போராளியும் சாவை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தான். மக்களுக்கும் அதுவே நிலை. இதை எல்லாம் நினைக்கையில் மனம் சரிந்தே போனது.

## என்னை இறுக்கிக் கொண்ட கட்டுக்கள்.

இப்படியான சம்பவங்களுக்கு மத்தியில் வலைஞர் மடம் பிணங்களை விழுங்கிக் கொண்டிருந்தது. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் 'வயோதிபர் பாஸ்' எடுத்து அவர்களைக் கப்பலில் அனுப்புவோம். மாமா, மாமியையும் அப்படியே அனுப்பலாம் என முடிவெடுத்தோம். ஆனால், பாஸ் எடுப்பது பெரும் சிரமம். அதவிடக் கப்பல் வரவேணுமே!! பயஸ் வந்ததும் இதையே முதலில் செய்யலாம் என முடிவெடுத்துக் கொண்டேன். அவ்வப்போது மக்கள் கதைக்கும் கதைகளும் காதுகளுக்கு வந்துதான் போகின்றன.

"வலைஞர்மடம் ஊடு பகுதிக்குள்ளால சனம் ஆமிற்றப் போய்ச் சரணடயுதாம். போனவையின்ர பாடு என்னமாதிரி எண்டு தெரியாது. ஆனால், சனம் ஊட்டுக்குள்ளால அங்கால போகுது"

"கடலால போகுதாம்...! காட்டுக்குள்ளால போகுதாம்...!" மக்கள் பல்வேறு விதமாகப் பேசிக்கொண்டனர். காணவனைக் காணவில்லை. நான் என் செய்வேன்...? இமாலய இக்கட்டில் நான் இருக்கின்றேன் என்பது சொல்லித்தெரியவேண்டியதில்லை. இந்த நேரம் பார்த்து மழை கொட்டோ கொட்டென்று கொட்டுகின்றது. கடல் அலை சீரான இடைவெளியில் கூடாரத்தைத் தட்டித் தடவிச் சென்றது. தறப்பாளுக்குள்ளாலே வெள்ளம் ஓடிக் கடலோடு கலக்கின்றது. மக்களின் கண்ணீரும் வியர்வையும் குருதியும் அந்த வெள்ள நீரோடு ஓடி வலைஞர்மடம் கடலோடு இரண்டறக் கலந்துகொள்கின்றன. குண்டு மழை, குருதி மழை, வான் மழை என எல்லாம் சேர்ந்து அகப்பட்டவர்களை வாட்டி வதைக்கின்றது. களம் சென்ற கணவன் இனியும் வராவிட்டால், நான் என்ன செய்வேன்...? என்கின்ற கேள்வி எனக்குமுன் வந்து நிற்கின்றது. என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் அந்த வேதனையில், அழுகை பீறிடுகிறது. அதை என்னால் எப்படித்தான் அடக்க முடியும்....?

## எங்கே நடக்கிறாய் என் எழிலி...!



மேனி நடுங்கும் மார்கழிக்குளிரில்
ஐயனார் கேணியில்
தோய்ந்தெழுகிறாய் நீராடி
மேற்கு வீதியில் பாவைப்பண் பாடி வருகிறாள்
கொல்விழிப் பாவை.
வாசலில் சுடர்ந்தெரியும் கற்பூரப்புகையில்
கையினை வாட்டுகிறாள் வைசாலி.
மைவிழி மணிவாசகன் என்ன
உனக்கு தாய் வழி உறவா...?
எப்படி அறிந்தான் உன்காதல் மனதை
"எங்கொங்கை நின் அன்பர்
அல்லார்தோள் சேர்க்க"
ம்... இது பல ஆண்டுகளுக்கு முன்னே
ஒரு முன் பனிக்காலத்துக் கதை தான்
அது சரி
இன்று நெருப்பெரியும் வெயில் நடுவே

[illegible] வீதியிலே
வாடி வதங்கி எங்கே நடக்கிறாய்
என் எழிலி...?

*வேலணையூர்தாஸ்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அரகர நமப் பார்பதி பதயே...!

மிருசுவில் தமிழ்தாசன்

அது ஒரு அழகான சிவன் கோவில். அதைச் சூழ ஏராளமான அத்தி மரங்கள். அத்துடன் வில்லை, நெல்லி, வேம்பு, அரசு, ஆல் என்று அத்தனையும் அங்கே அழகு பரப்பிக் கொண்டிருந்தன.

அன்று மகா சிவராத்திரி. சிவனுக்கான இராத்திரி. இந்தப் புனிதமான இராத்திரியில் விரதம் கடைப்பிடித்து நான்கு சாமப்பூசைகளிலும் பங்கு பற்றிச் சிவனின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்யும் பொருட்டு அந்தக் கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருகை தந்திருந்தனர்.

ஒரு வாரத்துக்கு முன்பே கோயில் வீதிகள் அனைத்தும் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்யப்பட்டிருந்தன. கருவறை தொடக்கம் சந்நிதானம் வரைக்கும் வர்ணம் பூசப்பட்டு பளபளவெனக் காட்சியளித்தன. எல்லாமே சிவராத்திரிக்காகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டவைகள் தான்.

அதற்காகத் தானே மனேச்சர் மகாலிங்கமும் கடைக்காரக் கனகசபையாரும் தங்கள் தங்கள் சோலிகளை மறந்து வீடுவீடாக, நாயாகப் பேயாக அலைந்து ஏராளமான பணத்தைச் சேகரித்திருக்கின்றார்கள். இவர்களுக்குப்பக்க உதவியாகப் பாலசிங்கம் வாத்தியார் சைக்கிள் கடைச் சண்முகம், குளத்தடிக் குண பாலசிங்கத்தார் என்று இன்னமொரு குழுவும் தீவிரமாக இயங்கியபடியால் தான் உந்தச் சிவராத்திரி விழா மிகப் பெருமெடுப்பில் ஏற்பாடாகியிருக்கிறது.

மாவிலை தோரணங்களுடன், மணி மாலைகள், வண்ணவண்ணக் காகிதச் சோடனைகள் சிவனின் சந்நிதானத்தை அழகுபடுத்திக்கொண்டிருந்தன. மின்னொளியில் எம்பெருமான் சிவனாரும் தேவி பரமேஸ்வரியும் அர்த்தனாரீஸ்வரராகக் காட்சியளித்தனர். இதைப் பார்ப்பதற்குப் பதினாறு கண்கள் வேண்டும். அத்தனை அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது அந்தச் சந்நிதானம். ஏராளமான பக்தர்கள் உற்சாகத்துடன் காணப்பட்டனர். இத்தனை பக்தர்களும் சிவனை வழிபட்டு அருள்பெற வேண்டுமென்று தான் வந்திருக்கின்றார்கள் என்று ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது. வந்தவர்களில் கணிசமானவர்கள் இன்று இடம் பெறவிருக்கும் சிறப்புப் பிரசங்கத்தைக் கேட்பதற்காகவே ஆலயத்துக்கு வந்திருக்கின்றனர் என்பதே உண்மை.

இந்தியாவிலிருந்து வந்து கடந்த ஆறு மாதங்களாக நாட்டின் பிரசித்தி பெற்ற பல கோயில்களுக்கும் சென்று அருளுரை வழங்கிக் கொண்டிருக்கிறார் முத்தையாச் சாமியார்! இவர் ஒன்றும் சாதாரணமான பிரசங்கியாரல்ல. தன்னுடைய அருள் மொழிகளால் ஆயிரக்கணக்கான அடியவர்களைக் கட்டிக் கவரக் கூடியவர். இவருடைய சொற்பொழிவுகள் இந்தப் பகுதிகளில் இதுவரை நடந்ததில்லை. அத்துடன் இவருடைய மகிமைகளைப் பந்தி பந்தியாகப் பத்திரிகைகள், துண்டு அறிக்கைகள் மூலம், இன்னமும் வேறு மார்க்கங்கள் வாயிலாகவும் மக்கள் அறிந்திருந்தனர். எனவே தான் இந்த அரிய வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்ற எண்ணத்தில் ஏராளமான அடியவர்கள் கோவிலுக்குப் படையெடுத்து வருகை தந்திருக்கின்றனர்.

சமகால இளைஞர் யுவதிகளுக்கு ஆன்மிகப்பற்றை ஊட்ட வேண்டும். சமயத்தின் மகிமைகளை அனைவரும் அறியச் செய்து நல்லதொரு விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். அத்துடன் இந்த வட்டாரத்தில் எந்தக் கோயிலிலும் நடைபெற்றிராத ஒரு புதுமையான நிகழ்வை நடத்திக் காட்டித் தாங்களும் புகழ் தேடிக் கொள்ளவேண்டுமென்பது தான் இன்றைய விழா அமைப்பாளர்களான மகாலிங்கத்தார், கனகசபையர் குழுவினரின் திட்டமாகவும் இருந்தது.

இரவு எட்டுமணி.

ஒலிபெருக்கியில் "பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார்..." பாடல் சாந்தனின் குரலில் தேன்பாய்ச்சி ஒலித்தது.

"எடே! உவங்கள் எங்க போட்டாங்கள்! டேய்! நாதன்! முதல் பூசைக்கு முந்திக் கொஞ்ச நேரம் மேளக்காரரையும் அடிக்க விடுங்கோ வன். குடுக்கிற காசுக்கு அவங்களும் சின்னதா ஒரு கச்சேரி செய்யட்டுமன்"

"விடுவம் கனகண்ணை! அது முடியப் பூசையை முடிச்சுக் கொண்டு முத்தையாச்சாமியாரை மேடையிலை ஏத்துவம். சனங்களும் கொஞ்சம் கூடட்டும்"

கனகசபையாரின் பிரேரணையை மறுப்பெதுவுமின்றி உடனடியாக ஆமோதித்தான் நாதன். நேரமும் ஓடிக்கொண்டிருந்தது. அத்தியடிச் சிவன் கோயில் பக்தர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது

"பாத்தியோடா கோபாலு! எங்கட கோயிலுக்கு உப்பிடி எப்பவெண்டாலும் சனங்கள் தொகையாய் வந்திருக்குதோ! சனங்களை வரப்பண்ணுறதுக்காகத் தான் இவ்வளவு காசு செலவழிச்சு இந்தியப்பிரசங்கியாரைக் கொண்டு வந்திருக்கிறம். இவ்வளவு சனங்களும் அள்ளுப்பட்டு வந்ததெண்ட பெருமையே காணும். சனங்களைக் கவர என்ன வித்தையைச் செய்ய வேணுமெண்டு எனக்குத் தெரியும். பார்! சனக் கூட்டத்தை! எள்ளுப்போட்டால் எள்ளுவிழாது. அப்பிடிச்சனம்"

மகாலிங்கம் பெருமைப்பட்டுக் கொண்டார். அப்படியொரு சனத்திரள் அலைமோதிக் கொண்டிருந்தது.

"இதுவரை நீங்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த ஆன்மிகச்சுடர், சைவச்சமுத்திரம், அருள்மணிநாதர் தமிழகத்துப் பிரசங்கி யார் முத்தையாச் சாமியார் அவர்களின் பிரசங்கம் ஆரம்பமாகவிக்கின்றது. பக்தர்கள் அனைவரும் ஐயாவின் பிரசங்கத்தைக் கேட்டு அருள் பெறும் வண்ணம் எங்கள் அத்தியடிச் சிவன் தேவஸ்தானம் சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்."

காகிதத்தில் எழுதிவைத்திருந்தவைகளை ஒலிவாங்கியூடாகப் பக்குவமாக அறிவிப்புச் செய்தான் கனகசிங்கம் மாஸ்டரின் இரண்டாவது புத்திரன் நிரஞ்சன். ஒரு காலத்தில் இசைக்குழுவொன்றில் அறிவிப்பாளனாகக் கடமையாற்றியவனுக்கு நீண்ட நாள்களுக்குப் பின்பு கையில் ஒலி வாங்கி கிடைத்து விட்டதில் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. மெல்ல ஒரு பார்வையைப் பெண்கள் பக்கமும் மேய விட்டுத் தனக்குள்ளே பெருமைப்பட்டுக் கொண்டான்.

ஆறடிக்குக் குறையாத தோற்றம். வயது எழுபதென்று சொல்ல முடியாத தேகப்பொலிவு. எலுமிச்சம்பழ நிற மேனி. மொட்டைத் தலையில் கிட்டத்தட்டக் கிருபானந்தவாரியாரை நினைவுபடுத்திக் கொண்டிருந்தார் முத்தையாச்சாமியார். கைகளைக் கூப்பி அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தார். நான் முந்தி நீ முந்தியெனச் சபையோர்கள் மாலையணிவித்து அவரைக் கௌரவித்தனர்.

"அரகர நமப் பார்பதி பதயே!" பிரசங்கியார் ஆரம்பித்துவிட்டார்.

"அரகர மகாதேவா"

சபையிலிருந்த பக்தர்கள் மிக உற்சாகமாகக் கோஷமெழுப்பப் பிரசங்கம் களைகட்டத் தொடங்கியது.

பிரசங்கியாரின் அழகிய தமிழ் வார்த்தைகள், மென்மையான உச்சரிப்புக்கள் என்பன அருவியாகக் கொட்டிக் கொண்டிருக்கச் சபையிலிருந்த பக்தர்கள் பிரமிப்பில் ஆழ்ந்தனர். அமர்ந்திருந்தவர்கள் பலர் எழுந்து, துள்ளிப் பிரசங்கியாரின் திருத்தோற்றத்தைப் பார்க்க முண்டியடித்தனர். சிவபெருமானின் திருவருளையும் அதன் மகிமைகளையும் பாடல்களுடன் கலந்து சுவைபடக்கூறினார் அவர். சிவராத்திரி பிறந்த வரலாறையும் அதைப்பற்றிய தத்துவங்களையும் தெள்ளு தமிழில் அள்ளி அள்ளிக் கொடுத்தார். அடியார்கள் தம்மை மறந்து பிரசங்க மழையில் நனைந்து கொண்டிருந்தனர்.

இரண்டாம் சாமப்பூசைக்கான ஆயத்த மணி ஒலித்தது. இனிப்பூசை முடிந்த பின்பு தான் பிரசங்கம் தொடருமென அறிவித்தார்கள். சுவாமியாருக்கும் சற்று ஓய்வு தேவைப்பட்டது.

"வாடா சிறி! உங்கை தண்ணிப்பந்தலிலை தேத்தண்ணி குடிச்சிட்டு வருவம்."

சும்மா நின்ற சிறியை வெளியே அழைத்துச் சென்றான் ரவி. வீதியில் தேநீர் சூடாக, இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த விடயம் பலருக்குத் தெரியாமலிருந்தது. இப்போதுதெரிந்துகொண்டதால் கூட்டம் கூட்டமாகச் சிறியவர்கள், வாலிபர்கள், முதியவர்கள் என்று தேநீர் பருகுவதில் ஆர்வம் காட்டினர். மூசிப்பெய்யும் மாசிப்பனிக்குளிருக்கு ஓசித்தேனீர் மிகவும் உவப்பாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.ஜே. ஞானேந்திரன்

# அதிகரிக்கும் சனத்தொகையை தாங்குமா பூமி?

சனத்தொகையில் முதலிடத்திலிருக்கும் சீனாவின் போக்கு தொடருமானால், அடுத்த நான்கு வருடங்களுள், அதன் சனத்தொகை 1.4பில்லியனாக உயரும்.

உலகின் ஏழுகண்டங்களில், ஆறுகண்டங்கள் பெரும் தொகை மக்களுடன் திணறிக்கொண்டிருக்கின்றன. முன்னணியில் நிற்பது ஆசியக் கண்டம். அது கொண்டுள்ள 4.3மில்லியன் மக்கள், உலக சனத் தொகையில் 60 வீதமாக திகழ்கி றார்கள், சனச்செறிவு அதிகம் கொண்ட சீனாவிலும், இந்தியாவிலும் வாழ்பவர்கள், உலக சனத் தொகையின் 37வீதத்தை நிறைக்கிறார்கள். இருண்ட கண்டம் என்று கூறப்படும் ஆபிரிக்காவிலும் கீயோ மாயோ என்று பிள்ளைகள் குறுக்கு நெடுக்காக ஓடித் திரிகிறார்கள். நோய்கள், பஞ்சம், பட்டினி, உள்நாட்டுப்போர் என்று பல காரணிகளால் இலட்சம் இலட்சமாகப் பலர் சாவடைதலும், உலக சனத்தொகையில் 15வீதத்தினர் இங்குதான் இருக்கின்றனர். இங்குள்ள சனத்தொகையை ஒரு பில்லியனாகக் கணித்துள்ளர்கள். குறைந்து கூடும் குறிப்பிட்டளவு சனத் தொகையுடன் காணப்படுகிறது அந்தாட்டிக்கா. அங்கு ஆய்வுகூடங்களை அமைத்து, உலகின் காலநிலை தொடக்கம் வெவ்வேறு விஞ்ஞானரீதியான விடயங்களை ஆராய்வதற்காகப் பன்னாட்டவர்கள் கூடி, முகாமிட்டுத் தங்கள் பணியை முடித்துவிட்டுப்போகின்றார்கள். இதுநிரந்தர வாழ்வுக்கு உகந்த பிரதேசமும் அல்ல.

## 8 பில்லியன் மக்கள்...!

இதுவே 2023ஆம் ஆண்டில் பூமியின் சனத்தொகையாக இருக்கப்போகின்றது என்கிறது ஐ.நா. இந்தக்காலகட்டத்தில் ஆண்கள்தான் பெண்களை விட அதிகமாகக் காணப்படுவார்கள் என்றும் கூறும் இவர்களது புள்ளி விபரங்கள், அடுத்த வருடம் 60வயதுக்கு மேற்பட்டவர்கள் தொகை ஒரு பில்லியனைத் தொடப்போவதாகவும் கூறி இருக்கிறது.

உலக சனத்தொகை சம்பந்தமாக ஐ.நா. விடுக்கும் வருடாந்த அறிக்கையில்தான் இந்தப் புள்ளி விபரங்கள் காணப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளை விட ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் தான் சனத்தொகை கிடு கிடு வளர்ச்சி கண்டு வருகின்றது. இப்போதைய ஐ.நா தகவலின்படி தென் சஹாரா, ஆபிரிக்காப் பகுதிகளில்தான், 2023ஆம் ஆண்டுக்குள் ஏற்படும் வளர்ச்சியின் பாதித் தொகை இருக்கும் என்று அறியப்படுகிறது. ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது, கருவுறுதல் விகிதம் இந்தப் பிராந்தியங்களில்தான் அதிகமாக இருக்கும் என்றும் சொல்லப்படுகின்றது.

## போட்டி போடும் பத்து நாடுகள்

சனத்தொகையை அதிகரித்துக்கொண்டிருக்கும் நாடுகள் எவையென்று அறியும் ஆர்வம் நமக்குள் தலைதூக்குகின்றது அல்லவா? இதன்போது குறிப்பிட்ட 10நாடுகளின் பெயர்கள் வெளிக்கிளம்புகின்றன. உலக சனத்தொகை வளர்ச்சியின் பாதித் தொகைக்கு இந்த நாடுகளே காரணமாகப் போகின்றன. தொடர்ந்தும் சீனா, இந்தியா தமது இடத்தைவிட்டுப் பின்வாங்கவில்லை. அதைத் தொடரும் நாடுகளாக நைஜீரியா, கொங்கோ குடியரசு ஆகிய ஆபிரிக்க நாடுகளும், அதையடுத்து பாகிஸ்தான், அடுத்து ஆபிரிக்க நாடுகளான எதியோப்பியா, தன்சானியா, இவற்றை அடுத்து அமெரிக்கா. அமெரிக்காவுக்கு அடுத்து இன்னொரு ஆபிரிக்க நாடான உகண்டா. உகண்டாவைத் தொடர்வது இந்தோனேசியா. இந்தப் 10நாடுகளில் 5நாடுகள் ஆபிரிக்க நாடுகள். இப்போது புரிகிறதா எந்தக்கண்டத்தில் சனத்தொகை கிடுகிடு வளர்ச்சியடைகிறது என்று. 2050ஆம் ஆண்டளவில் சனத்தொகை அதிகம் கொண்ட 20உலக நாடுகளில் 7 நாடுகள் ஆபிரிக்கநாடுகளாக இருக்கும் என்பது ஐ.நாவின் ஆரூடமாக இருக்கிறது.


## ஐரோப்பிய நாடுகளின் நிலை

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இந்தச் சனத்தொகை விடயத்தில் நன்றாகவே பாதிக்கப்பட்டுள்ளதையும் புறந்தள்ள முடியாது. பல்கொரியா, குரேசியா, லற்றிவியா, லிதுவேனியா. போலந்து, மொல்டோவா குடியரசு ரோமானியா, செர்பியா, உக்ரைன் ஆகிய நாடுகளின் சனத்தொகை 15வீதவீழ்ச்சி காணப்போகின்றது என்பதும் இவர்களது கணிப்பேயாகும். இன்னொரு சுவாரசியமான கணிப்பையும் இவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு102ஆண்களுக்கும்100பெண்கள் இருப்பார்கள் என்பதுதான் அது. இப்படியே போனால் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொகை 2018ஆம் ஆண் டில் ஒரு பில்லியனாக இருக் கும். அதுவே 2050ஆம் ஆண்டில் 2பில்லியனாக அதிகரிக்கும் என்பது இவர்கள் சேகரித்த சில புள்ளி விபரங்கள். 2050 ஆம் ஆண்டின் சனத்தொகையில் 15வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் தொகை, உலக சனத்தொகையின் காற்பங்காக இருக்கும்! என்பது, எம்மை ஆச்சரியப்படுத்தும் இன்னொருவிடயம்.



## அபிவிருத்தி குறைந்த நாடுகளில் சடுதியாக அதிகரிக்கும் போக்கு

மிகக்குறைந்த அபிவிருத்தியைக்கண்டுள்ள நாடுகளில், பெண்களின் கருவுறுதல் விகிதம் பொதுவாகவே அதிகம்தான். அவ்விடங்களில் ஒரு பெண்ணுக்கு 4அல்லது 5 பிள்ளைகள் என்று கணிக்கிறார்கள். 2050ஆம் ஆண்டில் இங்கு சனத்தொகை அண்ணளவாக 2பில்லியனாக அதிகரிக்கும் என்கிறார்கள். கல்வியறிவு குறைவு என்பதால் திட்டமிடல் இங்கு குறைவு. குறைந்த பிள்ளைகள் இருந்தால் நிறைந்த வாழ்வு கிடைக்கும் என்ற எண்ணம் இருப்பதில்லை. பெண் என்பவள் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டும், சமைத்துக்கொண்டும், வீட்டுவேலைகளைச் செய்து கொண்டிருக்க வேண்டியவள் என்று முத்திரை குத்தி விடுவ தால், வீட்டில் பல சுமைகளோடு நிதிச் சுமையும் இவர்கள் தோளில் ஏறி அமர்ந்து கொள்கிறது. சனத்தொகை அடிப்படையில் 7ஆம் இடத்திலுள்ள நைஜீரியா, 3ஆம் இடத்திலிருக்கும் அமெரிக்காவை 2050ஆம் ஆண்டுகளில் இதனால் ஓரம்கட்டிவிடும் என்கிறது ஐ.நாவின் இன்னொரு புள்ளிவிபரம்.



## சிம்மாசனமிட்டிருக்கும் சீனா, இந்தியா

சனத்தொகையில் முதலிடத்திலிருக்கும் சீனாவின் போக்கு தொடருமானால், அடுத்த நான்கு வருடங்களுள், அதன் சனத்தொகை 1.4பில்லியனாக உயரும். ஆனால் அதன் பின்னர் அது வீழ்ச்சி காண ஆரம்பிக்கும் என்கிறார் அமெரிக்கப் பல் கலைக்கழகம் ஒன்றில், சனத்தொகை பற்றி ஆய்வு செய்யும் சீனப் பேராசிரியர் வங் என்பவர்.

சீனா தற்போது உலகின் அதிக சனத்தொகை கொண்டநாடாக இருந்தாலும் 2025ஆம் ஆண்டில், இந்தியாவே முதல் இடத்தில் நிற்கும் என்கிறார் ஒரு இந்தியப் பேராசிரியர். 'குடும்பத்துக்கு ஒன்று' என்ற தீவிரமான போக்கை 70களில் கடைப்பிடித்த சீனா, 2015ஆம் ஆண்டில் தான் இந்தப் போக்கை கைவிட்டு, இரண்டாவது பிள்ளை பெற்றுக்கொள்ளப் பச்சைக்கொடிகாட்டியது. 1947இல் இந்தியா சுதந்திரமடைந்த காலத்திலிருந்த சனத் தொகையுடன் தற்பொழுது உள்ள 1.3 பில்லியன் சனத் தொகையை ஒப்பிட்டுப் பார்த்தால், அது நான்கு மடங்கு அதிகரித்திருப்பது புலனாகும். 2011வரை17.7வீதசனத்தொகை அதிகரிப்பைக் கொண்டிருந்த இந்தியா, 2050ஆம் ஆண்டில்1.7 பில்லியன் தொகையை எட்டிப் பிடிக்கும் எனவும் பின்பு அது மெல்ல மெல்லச் சரிய ஆரம்பிக்கும் எனவும் கூறுகிறது ஐ.நா.

## எதிர்த் திசையில் பயணிக்கிறது ஜப்பான்

சனத்தொகையைப்பொறுத்தமட்டில் ஜப்பான் ஒரு தர்மசங்கடமான நிலையில் இருக்கின்றது. இங்கு சனத்தொகை வேகமாக அருகிவருவதே இதற்கான காரணம். 2010ஆம் ஆண்டுக்கும், 2015ஆம் ஆண்டுக்கும் இடையில் 9லட்சத்து47ஆயிரத்து345 பேரை ஜப்பான் இழந்துள்ளது. ஆண்டுக்கு ஆண்டு இந்த வீழ்ச்சி தொடரும் என்கிறார்கள்.

சுருங்கச்சொன்னால் ஜப்பான் 'கிழடு தட்டிக்கொண்டு' போகிறது என்று சொல்லலாம். அங்கு நிலவும் பிந்திய வயதுத்திருமணம் மிகக் குறைந்த குழந்தைகளுக்கே இடமளிக்கிறது. இப்படியே போனால், 2100ஆம் ஆண்டளவில் ஜப்பானின் சனத் தொகை 83 மில்லியனாகக் குறையப் போகின்றது என்றும், அதில் 35 வீதமானவர்கள் 65வயதைத் தாண்டியவர்களாக இருப்பார்கள். ஜப்பானுக்கு இது ஆரோக்கியமான விடயமல்ல.

2012ஆம் ஆண்டில் ஜப்பானில் சராசரி பிறப்புவிகிதம் 1.4ஆக இருந்து, இப்பொழுது 1.8ஆக உயர்ந்திருந்தாலும், ஒரு பெண்ணுக்குச் சராசரியாக 2.1 பிள்ளை என உயர்த்தி, சனத்தொகையை 100 மில்லியனாக உயர்த்துவது என்பது இலேசுப்பட்ட விடயமல்ல என்றும் பெருமூச்சு விடுகிறார்கள் ஆய்வாளர்கள். பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலையே போதிய சனத்தொகை நாட்டில் இல்லையே என்று அவதியுறும் ஜப்பானுக்கு. அங்கு வேலைசெய்வதற்குப் போதிய ஆட்கள் இல்லாதிருக்கின்றனர். இதனால் 2030ஆம் ஆண்டில் தொழிலாளர் தொகை 7.9 மில்லியனால் வீழ்ச்சி கண்டு 55.61 மில்லியனாக மாறப்போகிறது.

2050ஆம் ஆண்டில் எம்மில் பலர் இந்தப் பூமியில் இருக்கப் போவதில்லை.

''நாமே இல்லை பிறகெதற்கு இதைப் பற்றியெல்லாம் யோசிப்பான்...?" என்று உங்களில் சிலர் கேட்கக் கூடும். அன்று அப்பா ஆசையுடன் வளர்த்து நெடுந்தோங்கி வளர்ந்து நிற்கும் தென்னை மரம்தானே இன்று எமக்குத் தேங்காய் தருகிறது. அப்பாவுக்குப் பயன்படாதது, பல வருடங்கள் கழித்து, இன்று பிள்ளைக்குப் பயன்பட வில்லையா? எதற்கும் ஒரு தொலை நோக்குப் பார்வை வேண்டும். அவ்வளவுதான் சொல்லமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகவழிபாட்டுத் தலங்கள் 6

# 2,500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்து தலை நாக வழிபாடு

அருணா செல்லத்துரை





அடங்காப்பற்று-வன்னிப் பிரதேசத்தில், மழை காலத்தில், மலைக் குன்றுகள், மண் மேடுகள் போன்றவற்றிலிருந்து வடிந்து பாயும் நீரை மறித்துக் குளங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆற்றங்கரைகளில் மட்டுமல்லாமல் குளங்கள் கட்டிய இடங்களில் எல்லாம் நாகசிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் இருந்து மன்னார் செல்லும் வீதியில் கிட்டத்தட்ட நான்கு கிலோ மீற்றர்கள் தூரத்தில் கட்டப்பட்டுள்ள நெளுக்குளம் முக்கியமானதாகும். மண்மேடுகளாகக் காணப்படும் பகுதியின் நடுவே உள்வளைவாகக் குளக்கட்டுக் கட்டப்பட்டு நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. நெளுச்சிச் செடிகள் நிறைந்திருந்த காரணத்தால் இதற்கு நெளுக்குளம் எனப் பெயர் வைக்கப்பட்டதாகப் முன்னோர்கள் தெரிவித்துள்ளனர்.

நடுச்செட்டிகுளம் பிரிவுக்குள் நெளுக்குளம் பதியப்பட்டுள்ளது. கி.பி. 1750 தொடக்கம் 1810ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பல முறை பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் வன்னிப் பிரதேசத்திலிருந்த அநேக குளங்கள் உடைப்பெடுத்துள்ளமை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெளுக்குளத்திலுள்ள ஐந்து தலை நாகசிலை நாகர்காலத்தில் கட்டப்பட்ட குளம் என்பதற்குச் சான்றாகின்றது. இந்த ஐந்துதலை நாகசிலை குளக்கட்டில் அல்லது அதன் அருகே இருந்திருக்க வேண்டும். இதனால் நெளுக்குளத்தின் கரையில் இருந்த சிலையும் வெள்ளப்பெருக்கால் இடம் மாறியிருக்கிறது.

குளக்கட்டுக்கு அருகில் உள்ள வயல் வெளியில் கண்டெடுக்கப்பட்டுள்ள ஐந்து தலை நாக சிலை, தற்போது குளக்கட்டின் ஓரமாக உள்ள மரத்தின் கீழ் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு இடம்பெற்று வருகிறது. இந்த நாகசிலை நாகர் காலத்துக்கான ஒரு அடையாளமாகும்.

**நெளுக்குளம் ஐந்துதலை நாகசிலை**

நெளுக்குளத்திலிருந்து செட்டிகுளம் செல்லும் வீதியில் பல குளங்கள் உள்ளன. அவற்றில் நடுச்செட்டிகுளம் பிரிவுக்குள் அடங்கிய இராசேந்திரம் குளம் ஓரளவு பெரிய குளமாக இருக்கிறது. குளத்தின் கீழுள்ள வயல் வெளியில் இருந்து வடிந்து பாயும் நீர், அருவி ஆற்றின் கிளையுடன் கலக்கின்றது. இந்தக் குளத்தின் வலது கரையிலுள்ள மேட்டுப் பகுதியில் சைவசமய வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான பல புராதன சின்னங்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன. இராசேந்திரம் குளத்தின் இடது கரையிலிருந்து சிறிது தூரத்தில் நாகர்இலுப்பைக்குளம் இருக்கின்றது. இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற நாகர்குலத்தின் பெயரைக் குறிக்கும் குளங்களில் இதுவுமொன்றாகும்.

இந்தக் குளத்தை அண்மித்துள்ள காணி உறுதிகளில் நாகர்இலுப்பைக்குளம் என்றும் சில பதிவுகளில் வேறு பெயர்களும் பதியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் குளத்தின் நீர்ப்பாய்ச் சல் தடத்தில் சேதமாக்கப்பட்ட நிலையில் இருந்த நாக சிலை எடுத்து வரப்பட்டு குளக்கட்டில் வைக்கப்பட்டு நாக வழிபாடு இடம்பெற்று வருகின்றது.



**நாகர்இலுப்பைக்குளம் சிலை**

நாகர்இலுப்பைக் குளத்தின் வயலில் இருந்து வடிந்து பாயும் நீர் அருவி ஆற்றின் கிளையில் கலக்கிறது. இந்தக் குளத்துக்கு அடுத்து சுமார் 8 கிலோ மீற்றர்கள் தூரத்தில் இரண்டு மலைக்குன்றுகளுக்கு இடையே அருவி ஆற்றுக் கிளை பாய்ந்துள்ளது. இது நடுச்செட்டிகுளம் பிரிவுக்கு அடுத்திருந்த சின்னச் செட்டி குளம் கிழக்குப் பிரிவுக்குள் பதியப்பட்டுள்ளது. ஆறு பாய்ந்த இடைவெளியை மண்ணால்நிரப்பிஅணைக் கட்டுக் கட்டி, நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்புராதனபெயர்'வைகை கட்டின உளுக்குளம்' எனப் பதியப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தையும் அதற்கு அருகிலிருந்த பெரிய உளுக்குளத்தையும் அணைக்கட்டு மூலம் தொடுத்துள்ளமை தெளிவாகிறது. 1895ஆம் ஆண்டு வரைபடத்தில் வைகை கட்டின உளுக்குளத்தின் பெயர் 'பாவற்குளம்' என மாற்றிப் பதியப்பட்டுள்ளது. பாவற்குளத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்றைய குளத்தின் பெயர் பெரிய உளுக்குளம் எனவும் வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. பாவற்குளம் தமிழ் மக்களுக்கான குடியேற்றமாக மாற்றப்பட்டது.

'பெரிய உளுக்குளம்' சிங்கள மக்களுக்கான குடியேற்றமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் 'பெரிய' என்ற தமிழ்ப் பதத்தை 'மகா' என்று மாற்றி 'மகா உளுக்குளம்' எனப் பதியப்பட்டுள்ளது.

பாவற்குளம் (வைகைட்டின உளுக்குளம்) பகுதியில் பல சைவ சமய வழிபாட்டு அடையாளங்கள் இருந்துள்ளன. அண்மைக்காலத்தில் சிவலிங்க சிலையும், உடைந்த கோமுகைக் கல்லின் ஒருபகுதியும் கண்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு நெளுக்குளம் விக்னேஸ்வரர் ஆலயத்துக்கான நடுகல் கி.பி.1911களில் இங்கிருந்து எடுத்து வரப்பட்டமையும் தெரிய வந்துள்ளது.

நீர்த்தேக்கத்தின் இடது கரையின் குறுக்கே கருங்கல் பொளிவுகளை அடுக்கி அணைக் கட்டைக் கட்டித் துருசு வைக்கப்பட்டிருந்தது. அங்கு தனிக்கல்லில் பொளியப்பட்ட ஐந்து தலை நாக சிலை இருந்தது. இதனை 1880களில் குளங்களைப்பற்றி ஆய்வு செய்த பார்க்கரும் குறித்துள்ளார். அண்மைக்காலத்தில் துருசு திருத்திக் கட்டப்பட்டுள்ளது. துருசின் ஊடாக நீர்பாயும் வெளிப் பகுதியில் தனிக்கல்லில் பொளியப்பட்ட ஐந்துதலை நாகசிலையை வைத்து சிமெந்தால் கட்டியுள்ளனர். மூன்றரை அடி உயரமான கருங்கல்லில் இந்தச் சிலை பொளியப்பட்டுள்ளது. சிதைந்திருந்த இதன் மேல் பகுதிகள் தற்போது சிமெந்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ளன. துருசு கட்டப்பட்ட போது நாக சிலையின் புராதனத்துக்குப் பங்கம் ஏற்படாத வகை யில் பாதுகாப்பாக வைத்துள்ளதால் நாகர்காலத்துக்கான மற்றுமொரு அடையாளமாகத் பாவற்குளம் நாகசிலை திகழ்கின்றது.




பாவற்குளம் ஐந்துதலை நாகம்



## நூல் அறிமுகம்

தொகுப்பு - எஸ். மல்லிகா




**நூல் : பொன் விழா மலர் - 2017**
**வெளியீடு : சத்திய சாயி சேவா நிலையம், யாழ்ப்பாணம்.**

### அன்பின் மகத்துவம் உரைக்கும் நூல்

அன்புதான் அகிலத்தில் உயர்ந்தது என்ற மகத்துவத்தை உரைக்கின்றது பகவான் சத்திய சாயி சேவா நிலையத்தின் பொன்விழா மலர். மலரின் உள்ளே குறித்த நிறுவனத்தின் வரலாறு, கட்டடங்களின் அபிவிருத்தி, நிலையச் செயற்பாடுகள், இறைவனின் அற்புதங்கள், இறைவனை அடையும் வழி மற்றும் சுவையான பல ஆக்கங்கள் உள்ளன. நூலைப் படிக்கும்போதே மனதினுள் தெய்வீகம் மலர்கிறது. உயிர்கள் மீது அன்பு பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் மேலெழுகின்றது. தேவைப்படுவோருக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பும் வருகின்றது.

**நூல்: தெய்வீக வாழ்வு வாழ 500 இறை சிந்தனைகள்**
**ஆசிரியர் : அராலியூர் வி.செல்வரத்தினம்**
**வெளியீடு : செல்வி விஜயதெய்வேந்திரன் திருவருள்சோதி**
**விலை: 120 ரூபா**

### இறைவனை உணரவைக்கும் புத்தகம்

அனைத்து உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற செய்தியை உரைத்து, இறைவனை உணரவைக்கின்றது 'தெய்வீக வாழ்வு வாழ 500 இறை சிந்தனைகள்' எனும் நூல்.



இறை சிந்தனையில் மனிதன் மூழ்கும்போது, அவனுடைய உள்ளம் தூய்மையடைகிறது. அந்தச் சிந்தனைகளை நமக்குள் நிறைக்கும் நூலாக இது அமைந்துள்ளது. எளிய மொழிநடையில் அமைந்துள்ள ஒவ்வொரு நற்சிந்தனையுமே தேவாமிர்தம்தான். தெய்வீக வாழ்வு வாழும் அனைவரும் இதைக் கட்டாயம் படிக்கவேண்டும்.

அராலியூர் வி.செல்வரத்தினம், ஒரு ஆன்மீக எழுத்தாளர். கணித விஞ்ஞான உயர்வகுப்பு மாணவர்களுக்கு உகந்த நூல்களை ஆக்கியவர். எண்ணற்ற நூல்களின் சொந்தக்காரர். இன்றும் எழுத்துலகில் இயங்கிக்கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தென்கிழக்கு திசையில் இருந்து...

அனார்கலி

## கவலையளிக்கிறது கல்முனை

இந்த மாதத்தின் ஆரம்ப வாரம் உலகத் தாய்ப்பாலூட்டும் வாரமாக அமைந்தது. இந்த நிலையில் தான், கல்முனைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் குழந்தைகளுக்கான பால்மாவுக்காக வருடாந்தம் ஐம்பது கோடி ரூபாவைப் பொதுமக்கள் செலவிடுகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கல்முனைப் பிரதேச தாய், சேய் நல தலைமையகச் சுகாதார மருத்துவ அதிகாரி எம்.ஏ.சீ.எம்.பஸால் கல்முனைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற தாய்ப் பாலூட்டல் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு ஒன்றின்போது மேற்படி தகவலை வெளியிட்டார்.

தாய்ப்பாலூட்டலில் இலங்கை முன்னனியிலிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் பெருமைப்படுத்தியுள்ள நிலையில் கல்முனைப் பிரதேசத் தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்குப் பின்னிற்பதுவும் பால் மாவுக்காக இவ்வளவு அதிகமாகப் பணம் செலவிடுவதுவும் வருத்தமளிக்கும் செயலன்றி வேறென்ன? தாம் பெற்ற பிள்ளைகளுக்குக் கெடுதி இழைப்பது இவர்களுக்குத் தெரியாமலிருக்கின்றதா? "தாய்ப்பாலூட்டுவதன் முக்கியத்துவம் இவர்களுக்கு இன்னும் அவசியமே!"



## கடலரிப்பு! கவனம் திரும்புமா...?

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளதாக மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒலுவில் மீன்பிடித்துறை முகம் அமைக்கப்பட்டதன் பக்கவிளைவாக இருந்துவரும் இந்தக் கடலரிப்பு இடரால் ஒலுவில், மாட்டுப்பளை, அட்டப்பள்ளம், நிந்தவூர் போன்ற பிரதேசங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.


நாளுக்கு நாள் கடலரிப்பு உக்கிரமடைந்துவரும் நிலையிலும் நிரந்தரத்தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையென மக்கள் தமது குமுறலை வெளிப்படுத்துகின்றனர்.

இந்த விடயத்திலாவது பிரதேச அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் அக்கறை கொள்வார்களா? கவனம் திரும்புமா? எனவும் அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

## சிலை கையளிப்பு

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 125ஆவது ஆண்டு நினைவு நிகழ்வாக அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதான வீதியிலுள்ள முச்சந்தியில் (விபுலானந்தா சதுக்கம்) நிறுவப்பட்டுள்ள விபுலானந்தர் சிலை உத்தியோக பூர்வமாகக் காரைதீவு பிரதேச சபையிடம் கையளிக்கப் படவிருக்கின்றது.

காரைதீவு புஸ்பா பொருளாதார கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் முன்னாள் பிரதேச சபைத்தவிசாளருமான செல்லையா இராசையாவின் முயற்சியால் இந்தச் சந்தியில் விபுலானந்தருடைய சிலை நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சிலை கையளிப்பு வைபவம் எதிர்வரும் 19ஆம் திகதி பெருவிழாவாக நடைபெறவிருப்பதுடன் வைபவத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் முதன்மை அதிதியாகவும் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி பிரபு பிரேமானந்தா ஆன்மிக அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.



## கூடுகிறது மு.கா.

முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மத்திய குழு நீண்ட இடைவெளிக்குப்பின் இந்த வாரம் கூடவிருக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நிந்தவூரில் நடைபெறவிருக்கம் அந்த மாவட்ட மத்திய குழுக்கூட்டத்தில் சமகால அரசியல் நிலமைகள் தொடர்பாக ஆராயப்படவிருப்பதுடன் தலைவர் ஹக்கீம் சமகால அரசியல் நிலை தொடர்பாகச் சிறப்புரையொன்றையும் ஆற்றவுள்ளார்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியல்களம் இப்பொழுது கலங்கிப் போயிருக்கின்றது. அதைக் கூடிப் பேசித்தானே தெளிய வைக்க வேண்டும் என்கின்றனர் இந்தச் செய்தி கேட்டறிந்த மக்கள்.

## சிங்கத்துக்குத் தலைவராக ஊடகவியலாளர்

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 2017/2018 வருடத்துக்குரிய புதிய தலைவராக ஊடகவியலாளர் ஏ.ஜே.எம்.ஹனிபா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அண்மையில் அவர் பதவி ஏற்றுள்ளார்.

சம்மாந்துறையைச் சேர்ந்தவரும், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயலாளருமான லயன் ஹனிபா, கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் நீண்டகால உறுப்பினர் ஆவார்.

"ஊடகப் பணியோடு சமூகப்பணியையும் முன்னெடுத்து தலைவராக உயர்ந்து நிற்கும் ஹனிபா நமக்கு எடுத்துக் காட்டானவர்" என அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தலைவர் கலாபூசணம் மீரா எஸ்.இஸடீன் வாழ்த்தியுள்ளார்.

'வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்'



## உள்வீட்டு மோதல்

வடக்குக் கிழக்கில் பலம் பொருந்திய தொழிற்சங்கமாகத் திகழும் இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் உள்வீட்டுப் பிரச்சினைகளால் சின்னா பின்னமாகும் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

சங்கத்தலைவர் எஸ். லோகநாதனின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளும் அகங்கார நடவடிக்கைகளுமே இந்தத் தொழிற்சங்கக் குழப்பநிலைக்கு முக்கிய காரணமென சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சங்கத்தின் முக்கிய தூணான செயலாளர் தனது பதவியைத் துறப்பதாகவும் சங்கத்தின் அங்கத்துவத்திலிருந்து விலகுவதாகவும் உறுதிபட அறிவித்துள்ளார்.

தொழிற்சங்க உறுப்பினர்கள் ஏழு பேரைச் சங்கத் தலைவர் இடைநிறுத்தியுள்ளமை அவருடைய தன்னிச்சையான முறைகேடான செயற்பாடு என்றும், அவர் தொழிற்சங்க சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்படாவிட்டால் ஏனையோரும் அதன்படி செயற்பட முடியாது எனவும் செயலாளர் வகாப் தலைவர் லோகநாதனுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

'உங்களுக்குள் ஏனிந்த உள்வீட்டு மோதல்...?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருக்கின்றோம் சுதந்திரமாக...



சுதந்திரமாகத்தான் இருக்கின்றோம்.
கிளுவைகள் பிடுங்கப்பட்டன
ஆனால்,
முட்கம்பி வேலிகள் நடப்பட்டன,
'பூட்ஸ்' சத்தங்கள் கேட்கின்றன
ஆனால்,
நாய்கள் அதற்கு வாலாட்டப் பழகவில்லை.
பிள்ளைகளைப் பெற்றோர்
தேடிக்கொண்டிருக்கின்றார்கள்

ஆனால்,
ஆன்மாக்கள் மட்டுமே
கண்ணீர் சிந்துகின்றன.
சொந்த நிலத்தில்
குடியேற
ஆசைதான்
ஆனால்,
அடுப்படிக்குள் இன்னும்
பூனைதான் கிடக்கிறது.

துப்பாக்கிகள் உறங்கிக்கொண்டிருக்கின்றன
ஆனால்,
குண்டுகளில் யாரோ ஒருவர் பெயர்
பொறிக்கப்பட்டிருக்கின்றது.
யாவரும் நலமாக உள்ளார்கள்
ஆனால்,
உள்ளம்தான் ஊனப்பட்டுக் கிடக்கின்றது.
ஆனாலும், நாம்
சுதந்திரமாகத்தான் இருக்கின்றோம்...!

சறோன்



# அழிப்பதும் ஆக்குவதும் கணினியின் வித்தை

சி. சிவபாலன்

கணினியில் நாம் சேமித்து வைத்திருக்கும் கோப்புகள், படங்கள், தகவல்கள் (ஏதாவதாகவும் அமைந்த தரவுகளை) தேவையற்றவை என்று கருதியோ அல்லது தவறுதலாகவோ நீக்குகிறோம். அதாவது அழித்து விடுகிறோம். அதன் பின்னர் அவை எமக்குத் தேவையாக இருந்தால் மீளக்கிடைக்குமா...? அவற்றை நாம் தெரிந்தே அழித்து விட்டால், மீளவும் தேவைப்படும்போது கவலைப் பட்டுக் கொள்கிறோம். தவறுதலாக அழித்து விட்டோம் என்றாலும்கூட அதை எப்படித் திரும்பவும் எடுத்துக் கொள்வது எனும் தர்மசங்கடம் எமக்குள் ஏற்படுகிறது. இப்படியான சர்ந்தர்ப்பங்களில் அவற்றை மீளப் பெறுவதற்கு வழி இருக்கின்றது. அதற்கு முன்னர் நாம் தரவுகளை நீக்குவதில் அவதானமாக இருக்கவேண்டும்.

### கண்ணுக்குக் கணினி காட்டும் மாயை!

சாதாரணமாக நாம் குறிப்பிட்ட தரவைக் கணினியிலிருந்து நீக்கும் கட்டளையைச் செயற்படுத்த முற்படும்போது அது நீக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான கேள்வியைக் கணினி உங்கள் முன் காட்சிப்படுத்தும். நீங்கள் தவறுதலாக அதை நீக்க முனைந்திருந்தால் இப்போது அதிலிருந்து தெளிவு பெற்று தரவு அழிக்கப்படவிருப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம். நாம் தவறுதலாக நீக்குவதற்கான கட்டளையைப் பிறப்பித்திருந்தால், அதை உறுதிப்படுத்துமாறு கணினி தரும் தகவலில் இருந்து உசாரடைந்து அதைத் தடுத்து நிறுத்தி விடலாம். அதையும் கவனிக்காதுவிட்டால் கணினி அவற்றை நீக்கிவிடுகிறது.

இவற்றை நீக்கும் முறையில்கூட இரண்டுவகை உள்ளது. கணினியின் வன்தட்டில் (காட்டிஸ்க்) இருந்ததை அழித்துவிடுவது ஒன்று. மற்றையது நாம் பாவிக்கின்ற 'எஸ்.டி. காட்', 'பென்றைவ்' என்பனவற்றில் இருப்பவற்றை அழித்து விடுவது. தரவுகளை நாம் நீக்குமாறு கட்டளை வழங்கும்போது இந்த இரண்டுவகை சேமிக்கும் தளங்களில் இருக்கும் தரவுகளை எமது பார்வையிலிருந்து மறைக்கும் வகையிலான செயற்பாட்டை மட்டுமே கணினி செய்கிறது. தவிர அந்தத் தரவுகளை அது நீக்கிவிடுவதில்லை. அது அமையப் பெற்றுள்ள முறையில், அதற்குரிய அமைப்பில் சிறிய மாற்றம் ஒன்றைச் செய்து எமது பார்வையிலிருந்து மறைத்துவிடும். நாம் அழிக்கும் தரவுகளை எப்போது அது முற்றாக நீக்கும் என்றால், குறிப்பிட்ட சேமிப்புத் தளத்தில் நாம் வேறு பல புதிய விடயங்களைச் சேமிக்க முயலும்போது, அதில் இடம் இல்லை என்றால் மட்டுமே ஏலவே நாம் அழிக்குமாறு கட்டளையிட்டவற்றை முற்றாக நீக்குகிறது. எனவே இவ்வாறு நடப்பதற்கு முன்னர் நாம் அழித்த தரவுகள் மீளவும் தேவை எனும் எண்ணம் எமக்கு ஏற்பட்டால் அதனை நாம் மீண்டும் கொண்டு வர முடியும்.

### குப்பைக்குள் போட்டாலென்ன திரும்பவும் எடுக்கலாம்...!

கணினியின் வன்தட்டிலுள்ள ஒரு விடயத்தை அழித்தால், அதை மீளப் பெறுவது சுலபமானது. அதாவது நாம் நீக்கும் கோப்புகள், படங்கள் என்பன குறிப்பிட்ட வன்தட்டிலேயே கணினித் திரையில் குப்பைத் தொட்டி வடிவக் குறியீடாக இருக்கும் 'றிசைக்கிள் பின்' எனும் ஒரு பகுதியில் சேமிக்கப்படும்.

அதாவது நாம் குப்பைக் கூடை ஒன்றுக்குள் தேவையற்றவை என்று அவற்றைப் போட்டுவிடுகிறோம். கணினியில் வன்தட்டிலுள்ள ஏதாவது தரவுகளை அழித்தால் முதலில அது மேலே குறிப்பிட்டவாறு 'றிசைக்கிள் பின்' என்னும் பகுதிக்குள் கொண்டு சென்று வைக்கிறது.

குப்பைக்கூடைக்குள் தவறுதலாகக் கசக்கிப்போடப்பட்ட தாள் ஒன்றை எவ்வாறு மீள எடுத்துவிட முடியுமோ அவ்வாறே கணினியிலும் 'றிசைக்கிள் பின்' பகுதியிலுள்ள கோப்புகளை நாம் மீளவும் பெறமுடியும்.


ஆனால், அங்கும் இடப்பற்றாக்குறை ஏற்பட்டால், அல்லது அதிலிருந்தும் தரவை நாம் தவறுதலாக அழித்துவிட்டால், அந்தக் குப்பைக் கூடையிலிருந்தும் தரவுகள் காணாமல் போய்விடுகின்றன. அவை முற்றாக நீக்கப்படுகின்றன.

### பணிச் செயல்முறை, மென்பொருள்கள் கொண்டும் மீள எடுக்கலாம்...!

இவ்வாறாக 'றிசைக்கிள் பின்' இலிருந்து தரவுகள் நீக்கப்பட்டாலும்கூட அவற்றை மீளப் பெறுவதற்குப் பணிச்செயல்முறைமைகளில் (அன்றோய்ட்) கட்டளைகள் உண்டு. அதேவேளை 'எஸ்.டி. காட்', 'பென்றைவ்' என்பவற்றிலிருந்து அழிக்கப்படும் தகவல்கள் இவ்வாறு வேறு பகுதிகளில் சேமிக்கப்படுவதில்லை. ஏனெனில் அவை கொள்ளளவில் சிறியவை ஆகையால் அவை 'றிசைக்கிள்' எனும் ஒரு பகுதியைக் கொண்டிருப்பதில்லை. அவ்வாறான நிலையில் அவற்றிலிருந்து அழித்தவற்றை மீளப்பெற அதற்கெனத் தயாரிக்கப்பட்ட மென்பொருள்களைப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் அவற்றிலிருந்து அழித்தவற்றையும் மீளப் பெறுவது சாத்தியமாகும். இதற்கான மென்பொருள்களை இணையதளங்களிலிருந்து தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவி, அவற்றை உபயோகித்து நீக்கப்பட்ட கோப்புக்களை மீளப்பெறமுடியும்.

### கணினியும் கைவிரிக்கும் நிலை வரலாம்...!

இப்போது மீளப்பெற்றுத்தரும் மென்பொருள்கள் இல்லாமலேயே புதிய பணிச்செயல் முறைமைகளில் இருக்கின்ற வசதி கொண்டு இவ்வாறாக நீக்கப்பட்ட தகவல்களை மீளப்பெற முடியும். அதுவும் விரைந்து செயற்பட்டால் மட்டுமே மீளப் பெறமுடியும். அதாவது அவற்றை நீக்கியபின் அவை சேமித்திருந்த தளங்களில் வேறு தரவுகளைச் சேமித்துவிட்டோமானால், நாம் நீக்கிய கோப்புகளை மீளப்பெறமுடியாது போய்விடும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.



'றிசைக்கிள் பின்' இலிருந்து தரவுகள் நீக்கப்பட்டாலும்கூட அவற்றை மீளப் பெறுவதற்குப் பணிச்செயல்முறைமைகளில் (அன்றோய்ட்) கட்டளைகள் உண்டு.

## என்னைப் பொருத்த முடியவில்லை



நாங்கள் ஒரு எல்லைக்
கல்லை
நிர்ணயிக்க முனைந்தோம்
இயேசுவைத்
தாங்கிக்கொண்ட
சிலுவையைப் போல.

எங்களுக்கு நிறையத்
தோழர்கள்
அருகு அருகிலேயே
இருந்தார்கள்
யூதாஸின் பள்ளியில் பயின்ற
சிஷ்யர்களைப் போல.

நாங்கள் பல வெற்றிகளைக்
குவித்தோம்
இறுதியில் எங்கள் கைகள்
சவப்பெட்டியிலிருந்து
வெளியில் நீண்டன
அலெக்சாண்டரின்
கைகளைப் போல.

நாம் ஒரு கை காட்டி மரத்தை
முத்தசாப்தங்களாக
நிறுவினோம்
சுடுகாட்டுக்கு வழிகாட்டும்
வீதிப் பெயர்ப்
பலகையைப் போல.

எங்கள் நெஞ்சுகளைக்
காப்பாற்ற
கவசங்களை
அணிந்து சென்றோம்
கர்ணனிடமிருந்து கவரப்பட்ட
கவச குண்டலங்களைப் போல.

இறுதியில் எங்களுக்கான
தேசப்படத்தை நாங்களே
வரைந்தோம்
யூதர்கள் இஸ்ரேலை
வரைந்ததைப்போல

யூதர்கள் இஸ்ரேலுடன்
பொருந்திப் போனார்கள்
என்னை என் தேசப்படத்தில்
பொருத்தவே முடியவில்லை.

வேல். லவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பட்டுத் தெளிந்த பைத்தியம்

ஓரிரு நாய்களின் ஓலங்கள்
மெய் தடவிச் செல்லும் மாருதம்
ஆலமரத்தின் அடிப்பாக வேர்
விழுதினூடு பார்க்கும் சந்திரன்
ஊரே ஓய்வுக்குச் சென்றது
எனக்குள் ஏகப்பட்ட மோதல்கள்

எண்ணற்ற சிந்தனைகளுடன்
எழுந்து நடக்கிறேன்
மறக்கத் துடிக்கும்
அவளின் நினைவுகள்

மனதைத் திரும்பத் திரும்ப
வாட்டி வதைக்கின்றன

குருவி, கோட்டான்
குந்தவில்லை
ஈ, காக்கா பறக்கவில்லை
எந்த அரவமும் அருகிலில்லை
எனினும் எதையெதையோ

எனக்குள் தேடி
அலைகிறேன்

நாள் - ஓகஸ்ட் பதினாறு
நேரம் - இரவு பதினொன்று.
இடமோ காக்கைதீவு
என் தோளில் ஓர் கை
எதிர்ப்பட்டேன்,

ஒரு பொலிஸ்காரர்
ஏதேதோ நினைத்தார்
எனைப்பற்றி...

"சிறு மாற்றம் உண்டு சேர்
பட்டுத்தெளிந்த பைத்தியம்"

லயனல்

நா.நவராஜ்

# சிறுவர்கள் வேலை செய்வது தவறானதா?



உலகம் பலவழிகளிலும் முன்னேற்றம் கண்டு வருவதாக நம்பப்படுகின்றது. எனினும் அதில் மாற்றமுடியாத, தீர்க்க முடியாத பல பிரச்சினைகள் நீடித்த வண்ணமே உள்ளன. மனிதன் செவ்வாய்க்குச் சென்று ஆராய்ச்சியை மேற்கொள்ளலாம்...! அது அவனுக்குச் சாத்தியப்படலாம்...! ஆனால், தான் இருக்கும் இந்தப் பூமியைச் செம்மையாக வைத்திருப்பது அவனுக்குக் கடினமாகவே இருக்கிறது.

அண்டவெளியைப் பற்றித் தேடியறிவதில் தனது மண்டையைக் குடையும் மனிதன் தான் வாழும்பூமிக்கு அந்நியனாகவே மாறிவருகிறான். தன்னை, தனது வாழ்க்கையைத் திறம்படக் கொண்டு நடத்த அவனுக்குத் தெரியவில்லை. இதனால் இங்கு பல பிரச்சினைகள் மேலெழுந்து நிற்கின்றன. இவற்றைத் தீர்ப்பது பற்றியும், சரிசெய்வது பற்றியும் சிந்திக்க அவனுக்கு நேரம் இருப்பதில்லை. எனவே ஒவ்வொரு பிரச்சினை பற்றியும் சிந்திப்பதற்கு அவன் வருடத்தில் ஒவ்வொரு நாளை ஒதுக்கி வைத்திருக்கின்றான். அந்த நாளில் அதுபற்றிச் சிந்தித்து வருகின்றான்.

இவ்வாறு சிந்திக்கப்படும் ஒரு பிரச்சினையாகத்தான் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் தீங்குகளும் அமைகின்றன. இந்தக் கட்டுரையில் இது பற்றிச் சிந்திப்போம். சிலர் சிந்திப்பதுடன் மாத்திரம் இதை நிறுத்திவிடுவார்கள் என்பது தெரிந்திருப்பினும் இதுபற்றி ஒரு சிலருக்காவது விழிப்புணர்வை ஏற்படுத்தினோம் என்ற திருப்தியாவது எமக்குக் கிட்டும்.

**உலகின் முதன்மைப் பிரச்சினை இது**

சிறுவர்களுக்குத் தீங்கிழைக்கப்படுவது என்பது உலகில் இருக்கும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாகவே கருதப்படுகின்றது. இதற்கு ஏன் அவ்வளவு முக்கியம் கொடுத்துத் தீர்வுகாண வேண்டும்? என்ற கேள்வியை எழுப்பினால், மனித வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியாக இருப்பது சிறுபராயம் அந்தப் பராயத்தினருக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் சிக்கல்கள் அவர்களது எதிர்கால வாழ்க்கையைச் சூனியமாக்கிவிடும் என்பதால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்படுகின்றது என்று மறுமொழி சொல்லலாம். எனவே சிறுபராயத்தில் பிள்ளைகளை நல்ல முறையில், நல்ல சூழலில் வளர்க்க வேண்டியது சமூகத்தினதும் பெற்றோரினதும் ஆசிரியரினதும் கடமையாகும். இந்தக் கடமையை எல்லோரும் சரிவரச் செய்தால்

*ஏடு தூக்கிப் பள்ளியில்*
*இன்று பயிலும் சிறுவரே*
*நாடு காக்கும் தலைவராய்*
*நாளை விளங்கப் போகிறார்.*

என்ற கவிதை வரிக்கமையப் பிள்ளைகளை உருவாக்க முடியும்.

**பிள்ளைகளைக் கையாளுதல்**

பிள்ளை வளர்ப்பில் எல்லோராலும் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய் முடிவதில்லை. அவர்களது சூழல், வாழ்க்கை முறைகள் அதனைத் தீர்மானிக்கின்றன. பிள்ளைகளை வளர்க்கும்போது தமது கடமையில் இருந்து தாம் தவறும் பட்சத்தில் அதனால் உண்டாகும் விளைவுகளைப் பெற்றோரும் சமூகமும் உணரத் தவறிவிடுகின்றனர். பிள்ளைகள் சந்திக்கும் பிரச்சினைகளை இது இயற்கையானதுதான் வளரவளர எல்லாம் சரியாகிவிடும் எனக் காரணம் கூறித் தப்பித்தும் விடுகின்றனர்.

இதற்கெல்லாம் காரணம் சிறுவர்களைச் சரிவரக் கையாள்வது எப்படி என்பது பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லாமையே ஆகும். ஆதலால் அதுபற்றிய அறிவை அனைவரும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். சிறுவர்களுக்கு இழைக்கப்படும் தீங்குகள் பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் சிறுவர்கள் என்றால் யார் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

**சிறுவர்கள் என்போர் யாவர்...?**

சிறுவர்கள் யார் என்று வரையறுப்பதிலேயே சில முரண்பாடுகள் இருக்கின்றன. சிலர் 18வயதுக்குட்பட்டவர்களே சிறுவர்கள் என்றும் சிலர் 12வயதுக்குட்பட்டவர்களே சிறுவர்கள் என்றும் கூறுகின்றனர். சட்டத்தில் 18வயதுக்குட்டபட்டவர்களே சிறுவர்கள் என வரையறுக்கப்பட்டிருக்கின்றது. ஒரு மனிதனுக்கு 12தொடக்கம் 13 வயதில் தான் சுயசிந்தனை ஆரம்பிக்கின்றது என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர். இதனைக்கருத்தில் கொண்டு சுயசிந்தனை உருவாகாத பருவத்தில் இருப்பவர்கள் சிறுவர்கள் என்ற முடிவுக்கு நாம் வர முடியும். இத்தகைய பருவத்தில் இருப்பவர்களிடத்தே மேற்கொள்ளுகின்ற உடல், உளரீதியாகக் காயப்படுத்தும் செயற்பாடுகளை அவர்களுக்கு இழைக்கப்படும் தீங்குகள் என்று நாம் கருதலாம்.

இதைப் பல வழிகளிலும் சாதரணமாக, இயல்பாகவே சிறுவர்களுக்கு ஏற்படுத்திவிடுகின்றனர் சில பெற்றோர். அவர்கள் அறியாமல்கூட அது நிகழ்ந்து விடுகிறது. உதாரணமாகப் பெற்றோர் பிள்ளைகளைப் புறக்கணித்தல், அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை வழங்காமல் அலட்சியமாக இருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் உடல்ரீதியாகக் காயப்படுத்துதல், கடுமையான தண்டனைகள், பாலியல் துன்புறத்தல்கள், போதைப் பொருள்பாவனைக்குத் தூண்டுதல். வேலைக்கு அமர்த்துதல் போன்றவை தெரிந்தே அவர்களுக்கு இழைக்கப்படும் தீங்குகளாகும். இவை சிறுவர்களை உடல், உளரீதியாகப் பாதிக்கின்றன.

**கவனமாகக் கையாளுதல்**

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் என்பது இன்று உலகளாவிய ரீதியில் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுவர்கள் வேலை செய்வது தவறானதா? என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர். எமது பிள்ளைகளைக் கொண்டு வீட்டு வேலைகளைச் செய்விக்க முடியாதா? அவர்களுடைய வேலைகளை அவர்களே செய்வதும் தவறானதா? எனச் சில பெற்றோர் அங்கலாய்க்கின்றனர். ஆதலால் இக்கேள்விக்குரிய பதிலைச் சொல்லுகின்ற கடப்பாடு இது பற்றிப் பேசும் அனைவருக்கும் இருக்கின்றது. எனவே முதலில் நாம் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வலிந்து செய்வித்தலுக்கும் அவர்களுக்கெயுரித்தான அன்றாட வேலைகளை, கடமைகளை அவர்களைக் கொண்டே செய்வித்தலுக்கும் இடையில் இருக்கின்ற வேறுபாட்டைக் கண்டறிய வேண்டும். அது சிறுவர்களை உடல், உள ரீதியாக எவ்வகையிலும் பாதிக்காத வண்ணம் எப்படிக் கையாள்வது என்கிற தெளிவையும் அனைவரும் கொண்டிருத்தல் வேண்டும்.

**வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியாக இருப்பது சிறுபராயம் அந்தப் பராயத்தினருக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் சிக்கல்கள் அவர்களது எதிர்கால வாழ்க்கையைச் சூனியமாக்கி விடும் என்பதால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்






# அமைச்சரை தாக்கியவருக்கு அமைப்பாளர் பதவியா...?

ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அரசமைத்தாலும்கூட அவர்களிடையே நல்லதொரு புரிந்துணர்வு இல்லை. ஆளை ஆள் காலை வாரும் வேலையைத்தான் செய்கின்றனர். மகிந்த அணியைக் கொண்டு மைத்திரி அணியை வீழ்த்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி முயற்சிகள் செய்வதும், ஐக்கிய தேசிய கட்சியைப் பழி வாங்குவதற்கு மைத்திரி அணி காய் நகர்த்துவதும் எனச் சதி வேலைகள்தான் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

அவ்வாறான சதிகளுள் ஒன்றுதான் இது... 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி அப்போதைய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி அம்பாந்தோட்டையில் இடம்பெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளைக் கண்காணிப்பதற்காகப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

அந்தப் பயணத்துக்கு மகிந்தவின் அடிஆள்கள் இடையூறுகளை விளைவித்தனர். ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்களை நடத்தினர். இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் நீதிமன்றில் வழக்கு ஒன்றைப் பதிவு செய்தனர்.

இந்த நிலையில்தான் அதிர்ச்சி மற்றும் ஆத்திரம் ஊட்டும் செய்தி ஒன்றை அரச தலைவர் மைத்திரிபால ஐக்கிய தேசிய கட்சியினருக்கு வழங்கியுள்ளார்.

அந்தச் சம்பவத்தின்போது இப்போதைய ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர் அஜித் பீ பெரேராவைத் தாக்கிய நபரை அம்பாந்தோட்டையில் உள்ள தொகுதி ஒன்றின் அமைப்பாளராக மைத்திரி நியமித்தமைதான் அந்தச் செய்தி. இதனால் அமைச்சர் அஜித் பீ பெரேரா கடுப்பில் உள்ளாராம்.

இந்தத் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை விரைவில் வரவிருப்பதால், அதில் தன்னைத் தாக்கிய இந்த புதிய அமைப்பாளரை ஒரு கை பார்ப்பதற்கு காத்திருக்கின்றாராம் அமைச்சர்.

# ரவிக்கு ஆப்புக்கு மேல் ஆப்பு...!

மத்திய வங்கி பிணைமுறி மோசடிக் குற்றச்சாட்டுக்கு இலக்காகி அமைச்சுப் பதவியைத் துறந்திருக்கும் ரவி கருணாநாயக்க அடிப்படையில் ஓர் ஊழல் பேர்வழிதான் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல் அவர் எதிர்கொண்டுவந்த மோசடிக் குற்றச்சாட்டுக்கள் ஏராளம்.

அந்தக் குற்றச்சாட்டுக்களில் ஒன்று தான் மத்திய வங்கி பிணைமுறி மோசடிக் குற்றச்சாட்டு. அதைத்தான் இன்று எதிர்க்கட்சிகள் பெரிதாகத் தூக்கிப் பிடித்து, அவரை அமைச்சுப் பதவியில் இருந்து விலகச் செய்தன.

அத்துடன் விட்டுவிடாது அவர் மீண்டும் அமைச்சுப் பதவியை ஏற்றால் மீண்டும் இது போன்ற ஏதாவது சிக்கலைக் கிளப்புவதற்கு எதிர்க்கட்சிகள் தயாராக உள்ளனவாம். அப்படி அவர்கள் கிளப்பவிருக்கும் சிக்கலும் ரவியின் இன்னொரு வீடு சம்பந்தப்பட்டதுதானாம்.

ஆட்சி மாற்றத்துக்கு முன்னர் ரவி ஒரு நிறுவனத்திடமிருந்து வீடுகள் மூன்றைக் கொள்வனவு செய்திருந்தார். அந்த வீடுகள் ஒவ்வொன்றுக்கும் தலா 10லட்சம் ரூபா கொடுத்ததோடு சரி. நீண்ட காலமாக மீதிப் பணத்தைச் செலுத்தாமல் இழுத்தடித்து வந்தார். பொறுமையை இழந்த அந்த நிறுவனம் 'நீங்கள் தந்த 30லட்சம் ரூபாவை திருப்பித் தந்துவிடுகிறோம். நீங்கள் வீடுகள் மூன்றையும் திருப்பித் தந்துவிடுங்கள்' என்று ரவியிடம் கூறியது. அதற்கு ரவி இணங்கவில்லை.

இந்த நிலையில்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதோடு அதில் அவருக்கு நிதி அமைச்சர் பதவியும் கிடைத்தமை அவரது தில்லாலங்கடி விளையாட்டுக்கு வாய்ப்பாகப் போனது. அவருக்கு அமைச்சுப் பதவி கிடைத்து இரண்டு மாதங்களில் ஒரு வர்த்தகர் முன்வந்து அந்த மூன்று வீடுகளுக்குமான மீதிப் பணம் முழுவதையும் செலுத்தி முடித்திருக்கின்றார்.

ரவியிடமிருந்து எவ்வாறான சலுகைகளைப் பெற்றமைக்காக இந்தப் பரிசு அமைச்சருக்கு மேற்படி வியாபாரி இடமிருந்து கிடைத்து என்ற உண்மை மகிந்த அணிக்குத் தெரியுமாம். தேவை ஏற்படும்போது இந்த விடயமே ரவிக்கு எதிராக களத்தில் இறக்கப்படுமாம். இந்தச் சூடு தணிந்து ரவி மீண்டும் அமைச்சுப் பதவியை பெறுவாராக இருந்தால் இந்த விவகாரம் ரவிக்கு எதிரான அடுத்த ஆயுதமாகப் பயன்படுத்தும் என்கிறது மகிந்த வட்டாரம்.



"அப்போ... அண்ணன் இனி அமைச்சுப் பதவியை நினைத்துப் பார்க்கவே முடியாது [illegible]..."

# வருத்தக்கார அமைச்சர்கள்!

நாடாளுமன்றில் உள்ள மருந்தகத்துக்கு ஒருவர் வருகை தந்தால், சாதாரண மக்களைவிட அரசியல்வாதிகளுக்கு வித்தியாசமான நோய்களா ஏற்படுகின்றன? என்ற கேள்வி அவருக்கு எழும்.

அமைச்சர்களுக்காக அங்கு பைகளில் நிரப்பி வைக்கப்பட்டிருக்கும் மாத்திரைகள் தான் அந்தக் கேள்விக்குக் காரணம்.

இந்த மருந்தகம் ஓரிரு நாட்களுக்கு முன் ஒரு சிக்கலை எதிர்நோக்கியது. இதற்கான மருந்து விநியோகத்தை ஔடத கூட்டுத்தாபனம் இடைநிறுத்தியது. காரணம்...., தனக்கான மருந்துப் பொருள்களை ஔடத கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுக் கொண்ட நாடாளுமன்றம் அவற்றுக்கான பணத்தை இன்னும் செலுத்தவில்லையாம். தொகை எவ்வளவு தெரியுமா? ஒன்றரைக் கோடி ரூபாவாம். 2014ஆம் ஆண்டில் இருந்தே இது நிலுவையிலுள்ள, செலுத்த வேண்டிய தொகையாம்.

'ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு மருந்து பாவிக்கும் அளவுக்கு எமது நாடாளுமன்ற அமைச்சர்கள் நோயாளிகளா...?' நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது.



# அயலுறவு அமைச்சும் தலைமை அமைச்சரின் உள்குத்தும்...

ரவிக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட உடனேயே சிலர் அவரது அயலுறவு அமைச்சு மீது குறி வைக்கத் தொடங்கினர்.

ரவி எப்படியும் தனது பதவியை இழந்துவிடுவார்; அல்லது வாக்கெடுப்புக்கு முன்னர் பதவியைத் துறந்து விடுவார் என்பதை முன்கூட்டியே அறிந்த அவர்கள் தலைமை அமைச்சரை அணுகியும் அவருக்குத் தூது விட்டும் அயலுறவு அமைச்சைக் கேட்டுப் பார்த்தனராம்.

அவர்களுள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் ஒருவர்.

தலைமை அமைச்சருக்குத் தூது அனுப்பி பதவியைக் கேட்டுப் பார்த்தாராம். அவர் அதைக் கணக்கிலேயே எடுக்கவில்லையாம்.

"எதிர்க்கட்சியாக இருக்கும்போது தன்னை விட்டுவிட்டு மகிந்தவுடன்போய் இணைந்த ஒரே காரணத்துக்காகவே அவர் நவீனைத் தவிர்த்திருக்கிறார்" என்று விடயம் அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வலது கை உலகைச் சமன் செய்ய முனையும்


ஸ்டோ ஸ்வாமி



# இடது கைக்காரர்கள்!

இன்று பன்னாட்டு இடது கைக்காரர்கள் தினமாகும். உலக சனத்தொகையில் ஏறக்குறைய 10விழுக்காட்டினர் இடது கைப் பாவனையாளர்கள் என்று நம்பப்படுகிறது. 1976ஆம் ஆண்டிலிருந்து கடைப்பிடிக்கப்படும் இந்தத் தினம், வலது கைப் பாவனையாளர்கள் நிறைந்த உலகில் இடது கைப் பாவனையாளர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றித் தெரியப்படுத்தவும், அவர்கள் தொடர்பில் நிலவக்கூடிய மூட நம்பிக்கைகள் பற்றித் தெளிவூட்டவும் உதவுகிறது.

மனித உடலில் அதிக முக்கியம் பெறும் உறுப்பாகவிருக்கும் கை, பல்வேறு தொழில்பாடுகளை நிகழ்த்தத் தக்க கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது. ஆனால் பழக்கமான ஒரு கை செய்யும் ஒரு வேலையை பாவனை குறைவான மற்றைய கையால் அதே வினைத்திற னுடன் செய்ய முடிவதில்லை. தமது கையை அன்றாடக் கருமத்தை ஆற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்கும்போது பெரும்பாலானவர்கள் பயன்படுத்துவது தமது வலது கையையே. இத்தகைய கைக்கான தெரிவு அவர்கள் விரல் சூப்பும் காலத்திலேயே நடந்துவிடுவதாகக் குறிப்பிடப்படுகிறது. மனிதர்களின் இந்தக் கைத் தெரிவின் முன்னுரிமைக்குரிய பின்னணி இன்னும் துலங்காத மர்மமாகவே இருக்கிறது. எதுவித திணிப்புமின்றி நிகழும் இந்தக் கைத்தேர்வை விளக்குவதற்குப் பல கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனாலும் அவை திருப்தியான முடிபு எதையும் தந்திருக்கவில்லை.









### மூளைக்கான தொடர்பு!

மனித உடலின் இடது பகுதியை மூளையின் வலது பக்க அரைக்கோளமும் உடலின் வலது பகுதியை மூளையின் இடது பக்க அரைக்கோளமுமே கட்டுப்படுத்து கின்றன. அல்லது செயற்படுத்துகின்றன. அதற்கேற்றவாறே மூளையின் இயங்கு பகுதிகளும் அமைந்துள்ளன. இயல்பாகவே மூளையின் இடது பக்க அரைக்கோளமே வினைத்திறன் மிக்கதாக இருந்து உடலின் வலது பக்கச் செயற்பாடுகளை கட்டுக்குள் வைத்திருக்கும். ஆனால் இந்த இடதுகைக்காரர்களில் வலது பக்க அரைக்கோள மூலையே வினைத்திறனுடையதாகவிருக்கும் என்று நம்பப்படுகிறது. வலது பக்க அரைக்கோளத்தால் கட்டுப்படுத்தப்படும் செயற்பாடுகளில் இடதுகைக்காரர்கள் சிறந்து விளங்குவதை இதற்கு ஆதாரமாகச் சுட்டுகின்றனர். அத்துடன் இரண்டு கைகளையும் வினைத்திறன் உடையவையாகப் பயன்படுத்தும் ஆற்றல், இடது கைப் பாவனையாளர்களுக்கு இருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

### பிரபல இடதுகைக்காரர்கள்!

பொது இடங்களில் நாம் சந்தித்த ஒரு சிலரைத் தவிர வேறு யாரெல்லாம் இடதுகைக்காரர்கள் என்று பார்த்தால், அந்தப் பட்டியலில் பல முன்னாள் இந்நாள் பிரபலங்களும் இடம் பிடித்திருக்கிறார்கள். இந்தியாவின் மகாத்மா காந்தி, மாவீரன் அலெக்சாண்டர், நெப்போலியன், ஜூலியஸ் சீசர், அரிஸ்டோட்டில், மேரி கியூரி அம்மையார், மார்க் டுவைன், ஹெலன் ஹெல்லர் போன்றோர் மாத்திரமன்றி மைக்கல் ஆஞ்சலோ, டாவின்சி, பிக்காஸோ போன்ற ஓவியர்களும் இடது கைத்திறன் வாய்ந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அமெரிக்க அரச தலைவராக விளங்கிய பலர், இடதுகைக்காரர்களாக இருந்திருக்கிறார்கள். ஜோன்.எவ். ஹெனடி, றொனால்ட் றீகன், ஜோர்ஜ். எச்.டபிள்யூ. புஷ், பில் கிளின்டன் இவர்களுடன் பராக் ஒபாமாவும் இடது கைக் காரர்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்.

திரைத்துறைக் கலைஞர்களில் சார்ளி சப்ளின், சில்வெஸ்டர் ஸ்ரோலன், றொம் குருஸ், ஏஞ்சலினா ஜொலி, நிக்கோல் கிட்மன், மர்லின் மன்றோ போன்றோர் இடதுகைக்காரர்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றனர். விளையாட்டுத்துறையிலும் இடதுகைக்காரர்கள் கொடிகட்டிப்பறந்திருக்கிறார்கள். மார்டின் நவரத்திலோவா, மரடோனா, பீலே, பிரைன் லாரா, அலன் போர்டர், சச்சின் டெண்டுல்கர் மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோர் இடது கைப்பயன்பாட்டில் சிறந்து விளங்கியிருந்தனர்.

இவர்கள் மாத்திரமின்றி, ஓபரா வின்ப்ரே, வின்ஸ்டன் சேர்ச்சில், பிடல் காஸ்ட்ரோ மற்றும் மைக்ரோசொவ்ட்டின் பில்கேட்ஸ் ஆகியோரும் இடதுகைக்காரர்களே.

இலங்கையின் தற்போதைய அரசியலரங்கில் இருக்கும் சபாநாயகர் கரு ஜயசூரிய, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள, சமரவீர மற்றும் துறைமுக மற்றும் கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே ஆகியோர் குறிப்பிடத்தக்க இடதுகைக் காரர்களாக விளங்கு கின்றனர்.

### இடது கரம் பற்றிய தவறான அபிப்பிராயம்

இடது என்பது தாழ்வான அல்லது குற்றத்துக்குரிய எனும் மனப்பாங்கு உலகின் பல சமூகங்களிலும் நிலவி வருகின்றது. ஆங்கிலத்தில் வலது என்பது சரியானது என அர்த்தம் தரும் [illegible] இலத்தீன் மொழியில் right என்பது Dexter என்று குறிப்பிடப்படுகின்றது. இதன் அர்த்தம் திறனுடையது என்பதாகும். ஆனால் அதே இலத்தீன் மொழியில், sinister என்றே இடது கரம் குறிப்பிடப்படுகின்றது. இது அதிஷ்டமற்ற அல்லது கேடு விளைவிக்கின்ற என்று பொருள்படுகிறது. இடது கரம் மங்கலகரமானது அல்ல எனும் மனப்பாங்கு இன்றும் நம் மத்தியில் பலரிடம் குடிகொண்டிருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் வலது பக்கத்துக்கோ வலது கரத்துக்கோ கொடுக்கப்படும் முன்னுரிமை இடது கரத்துக்கு வழங்கப்படுவதில்லை.

### அன்றாடம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்!

வலதுகரப் பாவனையாளர்களை அதிகமாகக் கொண்ட உலகில் பாவனைப் பொருள்கள் பலவும் வலதுகைப் பாவனையாளர்களைக் கருத்தில் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. கணினியாக இருக்கட்டும், விரிவுரைக்குப் பயன்படும் எழுது மேசையுடன் கூடிய கதிரையாக இருக்கட்டும், கிற்றார் வாத்திய உபகரணம், தேநீர்க் கோப்பை என எல்லாமே வலதுகைப்பாவனையாளர்களுக்கு உரிய வகையிலேயே உருவாக்கப்படுகின்றன. இத்தகைய பொருள்களைக் கையாள முனையும் இடதுகரக்காரர்கள் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். நாளாந்தம் இந்தக் கருவிகளுடன் அவர்கள் பெரும் போராட்டத்தையே நடத்தி வருகிறார்கள் எனலாம். இவ்வாறான பொருள்களைக் கையாண்டு தமக்குத்தாமே காயத்தை வருவித்துகொண்டவர்களும் இருக்கிறார்கள். குறித்த நிலவரத்தைப் புரிந்துகொண்டு மேற்குலகில் இப்போதெல்லாம் இடதுகைக்காரர்கள் சிரமமின்றி உபயோகிக்க கூடிய வகையில் அவர்களுக்கென வடிவமைக்கப்பட்ட பொருள்கள் சந்தையில் கிடைக்கின்றன.

### விழிப்புணர்வு தேவை!

மனிதன் வலது கைக்கு முன்னுரிமை அளிக்கும் விதத்துக்குப் பின்னால் ஆச்சரியம் மறைந்துள்ளதைப் போன்றே சிலர் இடது கையைப் பயன்படுத்துவதற்குப் பின்னாலும் ஆச்சரியம் மறைந்திருக்கிறது. அந்தப் புதிருக்கான முடிச்சு இன்னமும் அவிழ்க்கப்படாமலே இருக்கின்றது. இதனை ஒரு இயற்கைத் தெரிவாக கொள்ளவும் இடமுண்டு. மழலைப்பருவத்தினர் எழுதுவதற்கு முன்னோட்டமாகக் கிறுக்கல்களை ஆரம்பிக்கும் பருவத்திலே, எழுதுகருவியை ஏந்தும் கை இடதுகையாக அமைந்தால், அதனை வலுக்கட்டாயப்படுத்தி வலதுகைக்கு மாற்ற எத்தனிக்கும் பலர் நம்மத்தியில் உள்ளனர். உண்மையில் இத்தகைய நடவடிக்கை தவறானது என்கிறார்கள் நரம்பியல் நிபுணர்கள். இவ்வாறு வற்புறுத்தப்படும் குழந்தைகளின் கையெழுத்து அழகு கெடுவதுடன் பின்னாளில் பல உளவியல் குழப்பங்களுக்கும் அது வழிவகுப்பதாக எச்சரிக்கிறார்கள் அவர்கள்.

தமது இயல்பான பாவனைக்கு இடது கையைப் பாவிப்பதென்பது பார்வைக்கு விசித்திரமானதாக இருந்தாலும் அது ஓர் இயற்கை நிகழ்வே. இதனைக் குறைபாடான ஒன்றெனக் கருதுவது அர்த்தமற்றது. வலது பக்கமாக இயங்கும் உலகில் சிரமங்களை எதிர்கொண்டு வரலாறு படைக்கும் இடதுகைக் காரர்களைச் சரிவர இனங்கண்டு, அவர்கள் தொடர்பிலான மூடநம்பிக்கைகளைக் களைந்து, அவர்களுடைய இயற்கை தேர்வு தொடர்பில் தெளிவுறுவோமெனில், அவர்களுக்காகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இந்த நாள் தனது வெற்றியை அடைந்து விட்டது என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரகர நமப்....

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேனீர் குடித்தவர்கள் மெல்லக் காலாற நடந்து கொள்ளவும் ஆசைப்பட்டனர். வீதியெங்கும் வாலிபர்களுடன் சிறுவர்களும் சேர்ந்து கொண்டார்கள்.

"டேய் டேய்! உங்கால எங்கயோ பாடிக்கேக்குது.... எங்க எண்டு தெரியுமே?"

"புதுப்பிள்ளையார் கோயிலிலை இண்டைக்குப் பாட்டுக் கோஷ்டியடா! நான் மறந்து போனன். வாங்கடா போவம்"

"ஓமடா! கொழும்புக் கோஷ்டியாம். ஒருக்காப் பாத்திட்டு வருவம்."

நந்தன் தொடக்கிவிட ரகுவும் அவனுடன் சேர்ந்து கொள்ள விடயத்தையறிந்த சிறுவர்கள், விடளைகள் அனைவருமே புதிய பிள்ளையார் கோயிலில் பாடி ஆடிக் கொண்டிருந்த கொழும்பு இசைக்குழுவின் ரசிகர்களாகி விட்டனர். ஏனோ இதுவரைக் கேட்டிராத இசைக் குழுவினரின் பாடல்களைச் சோளகக் காற்று மெல்ல மெல்லச் சிவன் கோயில் வட்டார மெங்கும் பரப்பத் தொடங்கியது. அனைவரின் காதுகளுக்கும் எட்டியது. விடயம் காட்டுத் தீயாகப்பரவியது.

சிவன் கோயிலுக்கும் அந்தப்பிள்ளையார் கோயிலுக்கும் ஒரு சிறிய இடைவெளியே. எனவே பிரசங்கத்தில் லயித்திருந்தவர்களில் பாதித் தொகையினர் பாட்டுக் கோஷ்டிக்குப் பறந்துவிட்டனர்.

"எடி! றஞ்சி! பிள்ளையார் கோயிலிலை கோஷ்டியாமடி. கொழும்புக் கோஷ்டியாம் எழும்படி போவம்."

"பொறுவாறன்! இஞ்சார் ஜெயமக்கா! கோஷ்டியாம்...! போவமே? சுப்பர் சிங்கர் பாட்டுக்காறராம். சக்தி அறிப்பாளராம். சோக்காயிருக்கும் வா போவம். உதென்ன கண்டறியாத பிரசங்கம்"

"ஓமடி போவம்! யேய் ஷர்மிலா...! கோஷ்டி பாக்கயில்லையே! கொழும்புக் கோஷ்டியாம் பிறகு கிடைக்காது. எழும்பு... வா..."

இப்படியாக ஒரே தடவையில் முப்பதுக்கு மேற்பட்ட பிரசங்கப் பிரியர்கள் கொழும்புக் கோஷ்டி பார்க்கப் படையெடுக்கத் தொடங்கினர். ஒருவரைப்பார்த்து ஒருவராக ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், வயோதிபர்கள் என்ற பேதமின்றிக் கணிசமானோர் இசை வெள்ளத்தில் நீந்துவதற்காகப் பிள்ளையார் கோவில் நோக்கி ஓடோடிக் கொண்டிருந்தனர். அதேவேளை! இங்கே சிவன் கோயிலில் பிரசங்கத்தைச் செவிமடுக்கும் அடியவர்கள் தொகை கணிசமாகக் குறைந்து கொண்டிருந்தது.

"காக்கா முட்டை காக்கா முட்டை"

அட என்ன ஒரு தத்துவார்த்தமான பாடல்! காக்காவின் முட்டை காக்கா முட்டையென இளம் பாடகி ஒருத்தி மேடையில் நின்று தளுக்கி, மினுக்கி ஆடிப் பாடிக் கொண்டிருந்தாள். அவளின் அழகையும் ஒய்யாரத்தையும் பார்த்து வாயொழுக ரசித்துக் கொண்டிருந்த இசைப் பிரியர்கள் மத்தியில் துள்ளலான ஒரு பாடலுடன் மீண்டும் ஒருத்தி வந்தாள். நீண்ட குடுமி, சிலுக்குச் சட்டை, ஜீன்ஸ் "அடியே அடியே இவளே" பாடலுடன் வந்தது பாடகி அல்ல, குடும்பித்தலையுடன் ஒரு பாடகன். சபையிலிருந்த வாலிபர்கள் ரசனை மிகுதியால் எழுந்து ஆடி மகிழ்ந்தனர். விசிலடிப்புக்கள், கைதட்டல்கள், கூக்குரல்கள் மத்தியில் பிள்ளையாரின் சந்நிதியில் சிவராத்திரி விழா மிகக் கலகலப்பாக நடந்து கொண்டிருந்தது. இப்போது உண்மையாகவே ஒரு பாடகி. என்ன நினைத்தாளோ அந்தப் பாடகி. மேடையிலிருந்து பார்வையாளர் பக்கம் பொத்தென வீழ்ந்து இறங்கி, ஆண்-பெண் வேறுபாடின்றிப் பார்வயாளர்களைக் கட்டியணைத்து கை கோர்த்துப் பாடி, ஆடி அரவணைத்துக் கொண்டிருந்தாள்.

இங்கே சிவன்கோவிலில் பிரசங்கியார் இப்போதுதான் சற்று உன்னிப்பாகக் கவனித்தார். சபையில் இருந்தவர்களின் தொகை மிகவும் வீழ்ச்சி கண்டிருந்தது.

"எங்கையெடாப்பா உந்தச் சனங்களெல்லாம் போட்டுதுகள்" கடுப்பானார் கனகண்ணை.

"ஓமப்பா! உங்கை பிள்ளையார் கோயிலிலை இசைக்குழு போடுறாங்களாம்" நல்லாம்பியற்றை கடுவன் சொல்லிக்கொண்டு ஓடுறான்.

"மெய்யே வாவன்! நாங்களும் ஒருக்காப் போய் உந்தக் கொழும்புக் கோஷ்டியில என்ன பணியாரம் கிடக்குது என்டு பாத்துக் கொண்டு வருவம். எட! நாங்கள் எவ்வளவு காசு சிலவழிச்சு இந்தப் பெரிய பிரசங்கத்தை நடத்த, எங்கடை சனங்கள் கண்டறியாத கோஷ்டி பார்க்கப் போட்டுதுகள் . அறிவு கெட்ட சனங்கள்".

"அதுதானே! பெடி, பொட்டையள் தான் போகுதுகளெண்டு பார்க்கக் கிழடு கட்டையளும் போட்டுதுகளே! பாரன் அவையின்ரை சேட்டையை!"

"வாப்பா! நாங்களும் ஒருக்காப் போய் ஒளிச்சு நிண்டு பாப்பம். அப்பதான் ஆரார் போனதெண்டு அறியலாம். கண்டறியாத கோஷ்டி. பிரசங்கத்தை விடக் கோஷ்டியிலை அப்பிடி என்ன தானிருக்கப் போகுது! விசருகள்!"

கனகரின் கையைப்பிடித்து மகாலிங்கம் இழுக்க நடையைக்கட்டினார் கனகர். பிள்ளையாரின் சந்நிதானத்தில் ஏராளமான பக்தர்கள். சே! ரசிகர்கள்! அத்தனை பேரும் சிவன் கோயிலிலிருந்து வந்தவர்கள். சீற்றம் கொண்டனர் கனகரும் மகாலிங்கத்தாரும்.

"பார்! உந்தக் கிழட்டுப் பிள்ளையளுக்கும் பாட்டுக் கோஷ்டி தேவைப்படுகுது. அங்க பிரசங்கத்தை விட்டிட்டு வந்து அவளவையின்ரை வாயைப்பார்த்துக் கொண்டு நிக்குதுகள். அறிவு கெட்டதுகள்"

அந்த இளம் பாடகி இளவட்டங்களைப் பார்த்துக் கண்களைச்சிமிட்டி, உடலை வளைத்து நெளித்து ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தாள்.

"எட! என்ன சிரிப்பும்! நெளிப்பும். பாட்டை விட ஆட்டம் தான்....! விட்டால்... உவள் எங்களையும் கட்டிப் பிடிச்சு ஆடுவாள் போலையெல்லோ கிடக்கு. கொஞ்சமும் வெக்கமில்லாமல் என்ன ஆட்டம் ஆடுறாள்!"

"ஓமப்பா! சா! என்ன ஆட்டம்! உதுக்குத்தானே கிழடு கட்டையள் எல்லாம் வந்து நிக்குதுகள்"

"ஓ! எல்லாம் ஒரு ரசனைதான்" வாய்க்குள் ஊறிய எச்சிலை லாவகமாக விழுங்கிக் கொண்டார் மகாலிங்கம். அரை குறையாக நின்று பார்த்த இவர்களும் இப்போது தரையில் அமர்ந்து சாவகாசமாக ஆற அமரப் பார்க்கத் தொடங்கினர்.

அங்கே, சிவன் கோயிலில் பிரசங்கியார் சபையை மீண்டும் ஒரு தடவை உன்னிப்பாக நோட்டம் விட்டார். சபையில் இரண்டொருவர் மட்டுமே காணப்பட்டனர். அவர்களும் ஆழ்ந்த உறக்கத்தில் சிவ ராத்திரியைக் கொண்டாடினர். விடயத்தைப் புரிந்து கொண்டார்.

"அரகர நமப் பார்பதி பதயே!" பிரசங்கத்தை அரை குறையாக முடித்துக் கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு.

"அரகர மகா தேவா!" சபையில் யாருமே இல்லாதபடியால் பிரசங்கியாரே அதையும் சொல்லிச் சொற்பொழிவை முடித்துக் கொண்டார். பரமானாந்தாக் குருக்கள் மூன்றாம் சாமப் பூசையை ஆரம்பிக்க அவசரப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கும் கோஷ்டி பார்க்கப் போகும் அவசரம் தான்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 484

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | 4 | |
| 5 | | ■ | 6 | | ■ | | ■ |
| 7 | | | | | 8 | ■ | |
| ■ | | ■ | 10 | | | ■ | |
| 11 | | | | | ■ | 12 | |
| | ■ | ■ | | ■ | 13 | | ■ |
| | ■ | 14 | ■ | 15 | | | 16 |
| 17 | | | | | ■ | 18 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. அரிசியோடு ஒட்டியிருக்கும் ஒரு பொருள்
3. யாசகன்
5. ஆசிரியர்
6. கோ
7. ஒரு செயலைக் குறித்த காலத்தில் செய்து முடிக்கும் வழி முறைகளைத் தயாரி
10. உத்தியோகத்தில் வகிக்கும் நிலை
11. மனைவி
12. வெல்லக் கரைசல்
13. முயன்று முடியாததை நிறைவேற்று
15. கருநிறத்தவள்
17. முழங்குதல்
18. செய்

### மேலிருந்து கீழ்

1. வேலைக்காக ஒருவர் பெற்றிருக்கும் முன் அனுபவம் அல்லது அறிவு
2. மரம்
3. நித்தியம்
4. அம்பு
6. சிறுவர்களது ஒரு விளையாட்டுப் பொருள்
8. அதிக அள்வில் பொருள்களைச் சேர்த்துப் போட்டு நிறைத்தல்
9. கரு நிற, காரமான சிறு காய்
11. கசை
12. இயல்பான தன்மைக்கு ஏற்படும் கேடு
13. (பழு) ரசம்
14. துர்வாடை வீசுதல்
15. கல்வி கற்குமாறான ஏவல்
16. வகுக்குமாறான ஏவல்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 482 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(2) ஆசாபங்கம் (5)ராகம் (7)கரி (8)சுத்தம் (9)பாரதி (11)தாதா (12)புதிது (14)சவம் (16)உயரு (17)கரி (18)மயில் (19)ஆ (20) திசை (21)கால் (22)தேடு

**மேலிருந்து கீழ்**

(1)வராகம் (2)ஆம் (3)பருத்தி (4)கடம் (6)கரி (8)சுரதா (9)பாதாம் (10)மாது (12)புயல் (13)திரு (14)சகதி (15) வரிசை (16)உயில் (18)மகா (19)ஆடு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.484**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (23.08.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.484இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.08.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 482 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
பாலமுரளி முகிலன்,
'துவாரகை', நாவலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

**2 ஆம் பரிசு**
செ.யோகபாலன்,
இல.40, புதுவீதி, முதலாம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
கா.பொ.இ.குலசிங்கம்,
5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

**4 ஆம் பரிசு**
வி.செல்வநாயகம்,
சிவன் கோவில் வீதி,
புத்தூர்.

**5 ஆம் பரிசு**
அ.அறிவரசி,
இல.16/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

திருமதி ச.லிங்கமூர்த்தி,
அ.மி.பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

வ.இரத்தினசிங்கம்,
கம்பர் மலை,
வட்வெட்டித்துறை..

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

**சொற்சிலம்பம் போட்டி 482 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 13.08.2017 தொடக்கம் 19.08.2017 வரை

### மேடம்

சுக்கிரன், புதன் நற்பலன் தருவர். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வீடு, வாகனம் கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் உண்டாகும். புத்திரரின் விருப்பம் அறிந்து நிறை வேற்றுவீர்கள். உடல்நிலை சீராக இருக்கும். மனைவி யின் ஆலோசனை குடும்ப நலனுக்கு வழிவகுக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மாண வர்கள் ஞாப கத்திறனால் கல்வியில் வளர்ச்சி காண்பர்.

### இடபம்

சூரியன், செவ்வாய், குரு, சுக்கிரன், ராகு அனுகூல அமர்வில் உள்ளனர். பணியில் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். அக்கம்பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். அரசு சார்ந்த உதவிகள் வந்து சேரும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் மேம்பாடு காண்பர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் உயரும். உறவினர் வருகை மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். மனைவி உங்கள் எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுப்பார். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவுவர்.

### மிதுனம்

சுக்கிரன், சனீஸ்வரரால் அதிகளவு நன்மை உண்டாகும். எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை நடக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர் நற்செயலில் ஈடுபட்டு பெற்றோருக்கு பெருமை தேடித் தருவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி சிறப்பாக நிறைவேறும். பணியாளர்கள் பொறுப்புடன் செயல்பட்டு நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்வர்.

### கடகம்

சுக்கிரன், சந்திரன் நன்மை தரக் காத்திருக்கின்றனர். கடந்த கால உழைப்பின் பலன் வீடு தேடி வரும். தம்பி, தங்கையர் வாழ்வில் முன்னேற்றம் பெற உதவுவீர்கள். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில் வியாபாரத்தில் புதியவர்களின் வருகை போட்டியை உருவாக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதம் பேச வேண்டாம். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் சீரான முன்னேற்றம் காண்பர்.

### சிங்கம்

குரு, சுக்கிரன், கேது அளப்பரிய நன்மை தருவர். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. வாகனப் பயணம் மூலம் ஓரளவு நன்மை கிடைக்கும். புத்திரர் உங்களிடம் நண்பருக்கு இணையாகப் பழகுவர். பூர்வீகச் சொத்தின் மூலம் வளர்ச்சியும், வருமானமும் கூடும். மனைவி உங்களின் நற்குணம் அறிந்து பாராட்டுவார். விருந்து, விழாவில் குடும்பத்துடன் பங்கேற்பீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வீடு தேடி வரும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் நவீன தொழில்நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர். பெண்கள் குடும்பத்தின் நற்பெயரை பாதுகாத்திடுவர். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் பங்கேற்பர்.

### கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் ராஜயோக பலன் தர காத்திருக்கின்றனர். நீண்ட நாள் விருப்பம் நிறைவேறும். தாய் வழி உறவினர் பாசத்துடன் பழகுவர். புத்திரர் விரும்பிய பொருட்களை வாங்கித் தருவீர்கள். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் ஆர்வமிகு செயலை குறை சொல்ல வேண்டாம். குடும்பத்தில் ஒற்றுமை பேணுவது நல்லது. தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி விரைவில் கிடைக்கும். பெண்களுக்கு வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். மாணவர்கள் நன்கு படித்து பரிசு, பாராட்டு பெறுவர். வெளியூர் பயணங்கள் வந்து சேரும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு செல்வாக்கில் சிறிது சரிவு ஏற்படலாம்.

### துலாம்

சுக்கிரன், சூரியன், புதனால் அளப்பரிய நன்மை உண்டாகும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். கையில் பெரும் பணம் புழங்கும். புதிய வீடு, வாகனம் வாங்க வாய்ப்புண்டு. புத்திரர் உங்கள் அறிவுரையை ஏற்று படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். தொழிலில் விற்பனை பெருக்கத்தால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் கணவருக்கு உறுதுணையாக செயல்படுவர். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

### விருச்சிகம்

குரு, சுக்கிரன்,கேது, சந்திரன் அனுகூல பலன் தரக் காத்திருக்கின்றனர். நிலுவைப் பணிகள் விரைந்து நிறைவேறும். உடன் பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். வாகன வகையில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரரின் திறமை மிகு செயல் கண்டு மகிழ்வீர்கள். உடல்நலனுக்கு ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்க்கவும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். வெளியூர் பயணத்தின் மூலம் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற பங்குதாரர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் மத்தியில் நற்பெயர் காண்பர். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

### தனுசு

புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கப் பெறுவீர்கள். நிம்மதி நிறைந்த வாழ்வு அமையும். அறிமுகமில்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரரின் உடல்நலத்தில் அக்கறை காட்டுவீர்கள். வழக்கு விவகாரத்தில் தீர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். நிபந்தனையுடன் கடன் பெறுவதை தவிர்க்கவும். மனைவியின் ஆர்வமிகு செயலில் குளறுபடி உருவாகலாம். குடும்பத்தில் ஒற்றுமை காப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இடையூறு விலகும். லாபம் படிப்படியாக சீராகும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவர்.

### மகரம்

சந்திரன், குரு, சனீஸ்வரர் அனுகூல பலன் தர உள்ளனர். நல்லவர்களின் அறிமுகமும் [illegible] கிடைக்கும். அன்றாட பணியில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். [illegible] வெற்றி நடை போடுவீர்கள். [illegible] புதிய பாதுகாப்பு நடைமுறை [illegible] புத்திரர் நல்வழியில் செயல்பட [illegible] வும். வழக்கு விவகாரத்தை தவிர்ப்பது நல்லது. [illegible] வியின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை [illegible] படலாம். தொழில், வியாபாரம் [illegible] நடைமுறை தேவை. இலாபம் சுமாராக [illegible] கள் நிர்வாகத்தின் சட்ட திட்டதை [illegible] பெண்கள் நகை, பணம் இரவல் [illegible] மாணவர்கள் படிப்பு தவிர மற்ற [illegible]

### கும்பம்

சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், ராகு ஆதாய பலன் தருவர். தாமதமான பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். சமூகத்தில் நற்பெயரும், புகழும் கிடைக்கும். தாய் வழி உறவினர்கள பாசத்துடன் நடந்து கொள்வர். புத்திரர்கள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். நோய் தொந்தரவு விலகும். ஆரோக்கியம் மேம்படும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். பயணத்தின் மூலம் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு தாய்வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் [illegible] வாங்குவர்.

### மீனம்

குரு, சுக்கிரன், கேது நற்பலன் வழங்குவர். பொது விஷயங்களில் ஆர்வமுடன் பங்கேற்பீர்கள். வாகனப்பயணம் மூலம் ஓரளவு நன்மை உண்டாகும். புத்திரரின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். மனைவியின் பாசம் கண்டு நெகிழ்வீர்கள். தொழில் வியாபாரத்தில் போட்டி குறைந்து லாபம் பன்மடங்கு கூடும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்க வாய்ப்புண்டு. பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து தரத்தேர்ச்சி காண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவிலில் பாடசாலை, பல் கலைக்கழகங்களுக்கு கிட்டிய சூழலில் காணி விற்பனைக்கு உண்டு (No brokers)

தொடர்புகளுக்கு: 0777 970 993, 075 6276 897

## விற்பனைக்கு

3 Bedroom 1110 sqft இல் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடி புகும் நிலையிலான Luxury Apartment off Hampton lane, வெள்ளவத்தையில் விற்பனைக்கு உண்டு. (Swimming Pool, Gym, Parking, Lift வசதியுடன்)

22 மில்லியன்,
விலை பேசித்
தீர்மானிக்கலாம்.

Arushan -
077 668 8778

## THIVYA TRAINING CENTER WALLAWATTE

முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிநெறி (Montessori Method of Education) தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெறும். புதிய வகுப்புக்கள் SET 06 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. சேரவிரும்பும் மாணவர்கள் August 31 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவும். அத்துடன் Cake, தையல் வகுப்புக்களும் நடைபெறுகின்றன. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட "TVEC Diploma" சான்றிதழும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய T.P. No.
2504218, 077 941 5686

நடைபெறும் இடம் : K.K.S. Road, சுன்னாகம்.

## ஆர்தரைடிஸ்!!! (Arthritis)

கார்டிலேஜ் தேய்வடைதல்
தேய்வடைவதால் ஏற்படும் வலி
மற்றும் மூட்டு வலிகளுக்கு!!!




Baraka
ஆரோக்கியமான வாழ்க்கை, நாளாந்தம்

கருஞ்சீரகத்தின்
பரிபூரண நற்குணங்களுடன்...

Jointsafe

இயற்கை *Glucosamine* மற்றும்
கருஞ்சீரகம் அடங்கியது

தினமும் 3 வில்லைகள் வீதம்
ஏனைய மருந்துகளுடன் பாவிக்கலாம்
30s - Rs. 435/- | 60s - Rs. 680/-

Hotline: 0117772277
www.baraka.lk

- தேய்ந்துபோன கார்டிலேஜினை (Cartilage) மீளமைக்கும்.
- மூட்டுக்களின் அசைவை இலகுவாக்கும்.
- மூட்டு வலிகளுக்கு நிவாரணம் தரும்.

Fair Choice

## விநியோகஸ்தர் தேவை

போத்தலில் அடைக்கப்பட்ட
சுத்தமான குடிநீரை விநியோகிக்க
விநியோகஸ்தர், யாழ், வவுனியா,
கிளிநொச்சி, முல்லைத்தீவு
மாவட்டங்களில் இருந்து தேவை.

077 672 9422, 078 233 9110

## விசேட விலைக்கழிவு !!

# " நல்லூர் திருவிழா "

உற்சவ காலங்களில் மட்டுமே !

ஜூஸ் பக்கெட்
மெசின்




டீ,கோப்பி
மெசின்

ஜூஸ் மெசின் Eastman பொப்கோர்ன் மெசின்



தமிழில் தொடர்பு கொள்ள :
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03

max adz

தெஹிவளை, நெதிமால, இறப்பர்வத்தையில், 6.2 பேர்ச் காணியில், மூன்று படுக்கை அறைகள் (12'x14', 12'x12', 10'x10') வரவேற்பு, சாப்பாடு அறைக்கான பெரிய மண்டபம் (12'x22'), சமயலறை (10'x10'), சாலை (19'x9'), இரண்டு குளியல் அறைகள், இரண்டு மலசலகூடங்கள், நீர் தாங்கி (Water Tank) கொண்ட பெரிய வீடு (1200 சதுர அடி), மிகச்சிறப்பான வதிவிடச் சூழலில் (Posh Area), விற்பனைக்கு உண்டு. தெஹிவளை Town இல் இருந்து 2 k.m. பதினாறு மில்லியன் ரூபா. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம். ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

Rajbala 0779655883 / 0112736233.

## வேலைவாய்ப்பு

உள்நாட்டு, வெளிநாட்டு சந்தையில் பெறுமதிமிக்க உயர் கனிமங்களை உற்பத்தி செய்வதில் முன்னோடியாகத் திகழும் கம்பனியானது சீதாவாக்கை ஏற்றுமதி செயற்பாட்டு வலயம் அவிசாவெலவில் அமைந்துள்ளது. இக்கம்பனியானது வியாபாரத்தை விருத்தி செய்யும் நோக்குடன் பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரர்களைக் கோருகின்றது.

- ✓ பொறியியற் பயிற்சியாளர் *(Lathe / Welding)*
- ✓ நலன்புரிக் கூட்டாளிகள்
- ✓ சுமை தூக்குபவர்

* கவர்ச்சிகரமான சம்பளங்களும்
* ஏனைய கொடுப்பனவுகளும்,
* தங்குமிடம் என்பனவும் வழங்கப்படும்.

பொருத்தமான விண்ணப்பதாரிகள் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கவும்.

**Human Resources Manager**
Lanka Minerals & Chemicals (Pvt) Limited,
LOT D2, E.P.Z., Avissawella.
T.P:- 077 424 9980
E-mail : careers@lanmic.com

## பழமரக்கன்றுகள் விற்பனைக்கு

தென்னங்கன்று (நல்ல இனம், பல இனம்), மாங்கன்று (பல இனம்), தோடை, தேசி, மாதுளை (நிமாலி), 1Kg கொய்யா, லாவுல், கஜூ, பசன், நெல்லி (முழு), அரை நெல்லி, விலும்பிள், யம்பு, கமுகு, பலா, வெற்றிலை, தேக்கு, சவுக்கு, மலைவேம்பு, சித்திரவேம்பு, வேம்பு, சமண்டலை, இலுப்பை, மருது, காயா, முதிரை, பாலை, கருங்காலி, ரெட் லேடி பப்பா, முருங்கை PKM, வில்வம், கறுவா, கராம்பு, கொண்டல் மற்றும் பல இனப்பூங்கன்றுகளும் சாடிவகைகளும் விற்பனைக்குண்டு.

நியூ லங்கா பாம்,
பலாலி வீதி, ஊரெழு,
கணேசா பாடசாலைக்கு அருகில்.
077 612 9343

கிளை
K.K.S. வீதி, இணுவில்.

## விசேட பொதுக் கூட்ட அறிவித்தல்

வரணி சிட்டிவேரம் ஏஈப்பன்றிக்காடு கண்ணகை அம்பாள் ஆலய யாப்பு சீர்திருத்தம் தொடர்பான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும். பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

தலைவர்
ஆலய பரிபாலன சபை.

## கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மற்றும் சபைநிதி வேலைத்திட்டம் - 2017

1) தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபையினால் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2) கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்
3) தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் பொது நிதிச்சுற்றறிக்கை இல 04/2016(1) இற்கமைவாக இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை வடக்கு மாகாணத்துக்குள் கொண்டுள்ள கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4) தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule ) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் (தொலைபேசி இல - 021-2255381) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6) ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் இடத்தில் 14 ஆகஸ்ட் 2017 ஆம் திகதியிலிருந்து 28 ஆகஸ்ட் 2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் பார்வையிடவும். மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- மற்றும் வரி செலுத்தி பெற்றுக் கொள்ளவும் முடியும்.
7) கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும். தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 29 ஆகஸ்ட் 2017ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8) கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர்/அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9) கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 18 ஆகஸ்ட் 2017ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு வலி தென்மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும்.
10) மீள்கேள்வி அட்டவணையிற் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு பொருத்தமான தரத்திலுள்ளோர் விண்ணப்பிக்காதவிடத்து அதற்கு மேலுள்ள தரமுடைய கேள்விகள் கருத்திலெடுக்கப்படும்.
11) கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிவரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2017 | | | | | | |
| 01 | பிரதேச சபை தலைமை அலுவலக உள்ளகவீதி புனரமைத்தல் | 3.81 | 02 மாதம் | C8 (வீதி வேலை) | 38,500.00 | 03 டிசம்பர் 2017வரை |
| மீள் கேள்வி அறிவித்தல் | | | | | | |
| 01 | தியான இல்ல வீதி புனரமைத்தல் | 2.12 | 02 மாதம் | C8 அல்லது அதற்கு மேல் (வீதி வேலை) | 21,500.00 | 03 டிசம்பர் 2017வரை |

தலைவர்,உள்ளூராட்சிமன்றப் பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்,வடக்கு மாகாணம்

13.08.2017

# வேலைவாய்ப்பு

கொக்குவிலில் இயங்கும் பிரபல பிறிண்டிங் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பணியாளர்கள் உடன் தேவை!

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புவர்கள்

- புத்தகம் கட்டுநர்கள் (Binding)
- Envelope ஒட்டுபவர்கள்
- 'Kord' இயந்திர உதவியாளர்கள்

- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

திங்கட்கிழமை (14.08.2017) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது

PRINT MASTER
136, கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
0776622981 | 0777481696

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் காரியாலயத்துக்கு 487 அடி நீளமுள்ள சுற்றுமதில் அமைக்க வேண்டியுள்ளது. எனவே கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் காரியாலயத்தில் விண்ணப்பத்தனைப் பெற்று பூரணப்படுத்தி 28.08.2017 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**காரைநகர் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**அல்லின் வீதி, காரைநகர்.**

## தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?

*தலைமுடி வளரவேண்டுமா? *பேன் பொடுகு தொல்லையா?
*முடி கொட்டுகிறதா ? *இள நரையா ?
*தலையிடியா ? *முடி அடர்த்தி இல்லையா?

**பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 %ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய.**

பதிவு இல : 16168
**077 263 9037** **221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

*கருப்பு நிறம், கருந்திட்டு, கரும்புள்ளியா?
*பருக்கள், பருவந்த அடையாளமா? உதட்டுக் கறுப்பா?
*கை, கால், முதுகு கறுப்பு நிறம் நீங்க வேண்டுமா?

அனைத்துக்குமான மிக அற்புதமான கேர்வல் கிறீம் 2 வாரங்களில் மிக அழகிய தோற்றத்தைப் பெற. மேலும் இயற்கை மூலப் பொருள்களைப் பயன்படுத்தி இங்கு பேசியல் செய்யப்படும்.
ஒரே தடவையில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.
பக்கவிளைவற்றது.

பதிவு இல:- 16168
**077 314 9386**
விலை 3500 5500
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

விலை 3500
5500. 9000

**100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.**

பதிவு இல : 16168
**077 2106 155** **221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## EVT GPS Tracker & Monitor

- உங்கள் வாகனத்தின் பாதுகாப்பை அதிகரிக்க முடியும்
- நீங்கள் எங்கிருந்தாலும், வாகனத்தின் அமைவிடத்தை உடனுக்குடன் அறியமுடியும்.
- வாகனத்தில் அதிர்வு ஏற்படும் போது எச்சரிக்கை உண்டு.
- நிறுத்தி வைக்கப்படும் இடம், நேரம், இயந்திரத்தின் இயக்கத்தை அவதானிக்க முடியும்.
- வாகனத்தின் பிரதான மின்சார இணைப்பு துண்டிப்பு எச்சரிக்கை.
- பயணித்த தூரம், எரிபொருள் பயன்பாட்டை அறியமுடியும்.
- தொலைபேசி ஊடாக இயந்திரத்தை நிறுத்த முடியும்.
- அதிவேகம் , Engine on/Off எச்சரிக்கை உண்டு.

**25 இற்கு மேற்பட்ட வசதிகள் உண்டு.**

Bus /Lorry : 17,900/= முதல்
Van /Car : 16,400/= முதல்
(வாடகை முற்றாக இல்லை)

**077 888 7051/ 071 497 7703**

## மணப்பெண் தேவை

**யாழ். இந்துகௌரவகுடும்பத்தைச்சேர்ந்த1988 இல் பிறந்த மூல நட்சத்திரம் பாவம் 21, 5'6" உடைய U.K. இல் BSc Engineer ஆகப் பட்டம் பெற்ற மணமகனுக்கு பெற்றார் பொருத்தமான மணப்பெண்ணை தேடுகின்றனர்.**
எதிர்பார்ப்பு - Engineer, Doctor, Accountant.

**T.P:- 078 6199991**

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
Note: (உடனே நேரில் வரமுடியாதவர்கள் ... மூலம் செய்து கொள்ளலாம்)
03. வியாபார முன்னேற்றம்
04. வீட்டில் ஏற்றுமை ...

077 ... 2808, 075 509 5557

# செயற்கை நுண்ணறிவுடைய மனித இயந்திரம்

*மனித உருவத்தை ஒத்ததாக உருவாக்க விஞ்ஞானிகள் முயற்சி*



தொழில்நுட்ப வளர்ச்சியோடு ஒன்றித்துப்போயுள்ள உலகத்தின் போக்கில் ரோபோ தொழில்நுட்பங்களும், அவற்றின் உருவாக்கங்களும் மிகையாகவுள்ளது. அந்தவகையிலே அதன் அடுத்த கட்டமான செயல்நிலையாக செயற்கை நுண்ணறிவு கொண்ட மனித இயந்திரத்தை மனித உருவத்தை ஒத்ததாக உருவாக்குவதற்கான முயற்சியில் விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். இந்த ஆய்வுச் செயற்பாட்டில் எம்.ஐ.ரி ஆய்வு நிறுவகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ள தகவல் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நைலோன் இழைகளைப் பயன்படுத்திய நார் அமைப்பிலான தசைகளை உருவாக்கும் முயற்சியை மேற்கொள்ள விஞ்ஞானிகள் தீர்மானித்துள்ளனர். இந்தப் புதிய தொழில்நுட்பத்தின் நகர்வானது மிகவும் செலவு குறைந்ததாக இருப்பதுடன் உருவாக்கப்படும் தசைகள் சிறந்த மீள் இயல்புத் தன்மையைக் கொண்டதாக அமைந்திருக்குமெனவும் மேற்படி ஆய்வு வெற்றியளிக்கும் பட்சத்தில் ரோபோக்களில் நிஜமான மனித தோற்றத்தை உருவாக்க முடியுமெனவும் விஞ்ஞானிகளால் ஆய்வு முடிவுகளின் அடிப்படையிலான புதிய தகவல்கள் எதிர்வு... றுள்ளது.

## பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

Educational Technologies Pvt Ltd
**இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

**G.C.E.A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.**

After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

Training Period Rs. 30, 000



**ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.**

G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road,Jaffna.

## காண்டம் வாசிக்கப்படுகின்றது

**ஸ்ரீ கௌசிக அகஸ்திய மாமுனிவர்கள் அருளிய பழங்காலத்து ஏட்டுச் சுவடிகளின் வாயிலாக......**

**தலைநகர் கொழும்பில்......**

கடந்த **27 வருடங்களுக்கு மேலாக** சேவையாற்றும் அனுபவஸ்தர்களால் **காண்டம்** வாசிக்கப்படுகின்றது.

**தற்சமயம் யாழ் மாநகரில்.....**

உங்களது நிகழ்காலம் / எதிர்காலம் / கடந்தகாலம் மற்றும் கல்வி, குடும்பவாழ்வு, குழந்தை பிறப்பு அவர்களின் எதிர்காலம், தொழில்மேம்பாடு, வியாபாரம், வேலைவாய்ப்பு, வெளிநாட்டுப் பயணம், திருமணம் பற்றிய விவரங்களைக் காண்டத்தின் மூலமாக மிகத் துல்லியமாக நீங்கள் அறிந்து கொள்ளும் அருமையானதொரு சந்தர்ப்பம். தவறவிடாதீர்கள்.

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடிஜோதிட நிலையம் (பிறைவேட்) லிமிட்
கிளை:- இல.384/A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
59, புகையிரத வீதி, மட்டக்களப்பு,
தலைமையகம் 191/1, கொத்தலாவல மாவத்த பம்பலப்பிட்டி, கொழும்பு 04.

தொடர்புகளுக்கு
Dr.P.ஜெய்சங்கர்
யாழ்ப்பாணம் - 021 221 7944,
மட்டக்களப்பு - 065 222 4307,
கொழும்பு - 011 258 6180, 011 258 6208

## விசேட விலைக்கழிவு !





நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து தேவைகளுக்கும் மிக பொருத்தமான, சிறந்த தீர்வினையும் விற்பனைக்கு பிந்திய சேவையினையும் மிகவும் அர்பணிப்புடன் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

Central Environmental Authority Approved



1. வீடு , தொழிற்சாலை , உணவகங்களுக்கு உகந்த ... அளவிலுமான RO குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.
2. நீர்க்குழாய்கள் , Tiles , Bathroom fittings களில் படியும் கல்சிய , மக்னீசிய படிவுகளிலிருந்து விடுதலை பெற Water Softener System.
3. சுற்றாடல் அதிகார சபையின் நியமங்களிற்கமைய கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை நிறுவி பராமரித்தல்.
4. நீச்சல் தடாக வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு.

குறிப்பு :- பெரிய வேலைத்திட்டங்களுக்கு மிகக் குறைந்த வட்டியுடனான வங்கிக் கடன் சலுகைகள் பெற்றுக்கொள்ளலாம்.!!

WE ACCEPT MasterCard VISA

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.34L, K.K.S Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரனின் 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஊடாக குடும்பஸ்தர் ஒருவருக்கு அவரது வருமானத்தை அதிகரித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக மின்சாரத்தில் இயங்கும் சாணை பிடிக்கும் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)







புங்குடுதீவு அம்பலவாணர் கலை அரங்கில் இயேசுவின் மனதுருக்கப் பெருவிழா நிகழ்வுகளாக, ஆராதனையும் பிரார்த்தனையும் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை நடைபெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.பி.ஜெயசுந்தரம் கலந்து சிறப்பித்தார். (ம)



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பன்சேனை பாரி வித்தியாலயத்தினைச் சேர்ந்த, கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப்போட்டியில் வெற்றிட்டிய மாணவர்களுக்கு முனைப்பு நிறுவனத்தால் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)





வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் முள்ளியவளை பாரதி இல்ல பிள்ளைகளுக்கு 108 பாதணிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. (ஐ)



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாந்தபுரம் கிராமத்தில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சிக் கிளையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஊட்டச்சத்து கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் முதல் அங்கமாக தெரிவு செய்யபட்ட பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவுகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. திட்ட இணைப்பாளர் சிறிகாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் அ.வேழ மாலிகிதன் வைத்திய காலநிதி லிங்கம் மற்றும் சாந்தபுரம் கிராம சேவையாளர், மருத்துவ மாது கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மாவட்ட விவசாயப் போதனா ஆசிரியர் கிளை நிறைவேற்று அலுவலர் தொண்டர்கள் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



சுன்னாகம் லயன்ஸ் கழகப் புதிய தலைவர் லயன். இ. சிவநாயகம் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பதவியேற்பு விழா கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது. லயன்.பி.மகேந்திரன் (2ஆம் மாவட்ட ஆளுனர்) முன்னிலையில் உறுப்பினர்கள் பதவியேற்றனர். (ஐ-36)





இலங்கை வங்கியின் 78ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சிக் கிளையினரால் குருதிக் கொடை முகாம் அண்மையில் நடத்தப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் வைத்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் க.தர்மலிங்கம், மாகாணசபையால் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு தொகை கதிரைகளை ஞானவைரவர் சனசமூக நிலையத்துக்கு வழங்கியுள்ளார். (ஐ-173)

வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா தனக்கு குறித்தொதுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து மிகவும் வறியகுடும்பங்களின் வாழ்வாதாரதாரத்தை தோட்டச்செய்கையின் மூலம் ஊக்குவிற்பதற்காக நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கி வைத்தார். (ஐ)





நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவின் ஏற்பாட்டில் ஒளிரும் வாழ்வு அமைப்பின் அனுசரணையில் லண்டன் சிவன்கோவில் அமைப்பின் நிதி அனுசரணையுடன் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட செம்மலை, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் பாடசாலைகளில் உள்ள தரம் 9,10,11 மாணவர்களுக்கு வகுப்புக்களை நடத்துவதற்கு பெற்றோர்களைச் சந்திக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. சந்திப்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ. புவனராஜா மற்றும் பிரதி கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) ஞா.ஆதவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் 2017இற்கான வருடாந்த நிதியொதுக்கீட்டில் வவுனியா கற்பகபுரம் விவேகானந்தா சனசமூக நிலையத்துக்குத் தளபாடங்களை (பிளாஸ்ரிக் கதிரைகள்) வழங்கி வைத்தார். கற்பகபுரம் செந்தமிழ் முன்பள்ளி மண்டபத்தில் சனசமூக நிலையத்தின் தலைவர் பாலகிருஸ்ணன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் மற்றும் சனசமூக நிர்வாகத்தினர் அமைச்சரின் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)



இலங்கை வங்கியின் 78 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு சாவகச்சேரி கிளையினர் கைதடி சாந்தி நிலையத்தில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்கியதுடன் முதியோருக்கு அன்பளிப்புகளையும் வழங்கினர். அத்துடன் சாந்தி நிலைய வளாகத்தில் சிரமதானமும் மேற்கொண்டனர். (ஐ-9)









கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 29ஆவது இளைஞர் விளையாட்டு விழா கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# பவள விழா நாயகியாய் அருள் சொரியும் நாவாந்துறை பரலோக அன்னை

நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயப்பங்கினர் 1942 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வில்லியம் மற்றும் யேசுதாசன் அ.ம.தி அடிகளார் ஆகியோரின் பங்களிப்புடனான ஆயத்தங்களோடு எதிர்வருகின்ற 15ஆம் திகதி பவள விழா (1942 2017) நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அது குறித்து இந்த ஆக்கம் நோக்குகிறது.

இந்த ஆக்கத்துக்கான தகவல்களை நாவாந்துறை பங்குத்தந்தை சீ.யே. அன்ரனிபாலா அடிகளார் வழங்கிய 50ஆவது ஆண்டு மலர் மற்றும் 75ஆவது ஆண்டு நிறைவில் வெளியாகவுள்ள மலர் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது.

நாவாந்துறை பங்குத்தந்தை சீ.யே. அன்ரனிபாலா அடிகளார் பவள விழா குறித்து கருத்துரைக்கும் போது,

"ஆவணி மாதம் 15ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி யாழ். ஆயர் ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். அதற்கு முன்தினம் வேஸ்பர் ஆராதனையை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர்பி.ஜே. ஜெபரட்ணம்அடிகளார்நிகழ்த்துவார். பவள விழா யூபிலி கொண்டாட்டத்துக்கென வெளிநாடுகளில் இருந்து சுமார் 25 குடும்பத்தவர்கள் வந்துள்ளனர். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள நாவாந்துறை மக்களை அன்னை நிறைவாக ஆசீர்வதித்துள்ளா. நாவாந்துறை மக்கள் அனைவரும் இந்த நன்றியின் விழாவை கொண்டாடும் போது அன்னையின் பக்தர்கள் அனைவரும் திரண்டு வந்து அன்னையின் ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்ல வேண்டுமென அன்புடன் அழைக்கிறோம்." - என்றார்.

### நாவாய்கள் கட்டப்பட்ட இடம் நாவாந்துறை

நாவாந்துறையில் போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க சமயம் பரவியதாகக் கூறப்படுகிறது. கடல் வழியாகக் கப்பல் மூலம் ஊர்காவற்துறைக்கு வருகை தந்த போர்த்துக்கேயர் யாழ். நகருக்கு வருவதற்கு நாவாய் என அழைக்கப்பட்ட சிறிய படகுகளை பயன்படுத்தியுள்ளனர். அவற்றை இந்தக்கடற்கரையில் கட்டிவிட்டு யாழ். நகரின் ஏனைய பகுதிகளுக்கு சென்று வந்துள்ளனர். இதனால் நாவாய்கள் கட்டப்பட்ட இடம் நாவாய்துறை என வழங்கியது. அது காலப்போக்கில் மருவி நாவாந்துறை என மாறியுள்ளதாக கூறப்படுகிறது.

### சென். மேரிஸ் ஜக்கிய வாலிபர் சன்மார்க்க விருத்தி சங்கம்

1936 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி சென். மேரிஸ் ஜக்கிய வாலிபர் சன்மார்க்க விருத்தி சங்கம் என்ற அமைப்பு நாவந்துறை இளைஞர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு சமய,சமுகப் பணிகளை ஆற்றவும்,கல்வி கலை,கலாசாரங்களை பேணவும் உருவாக்கப்பட்டது.

இந்தப் காலப்பகுதியில் நாவாந்துறை மக்களின் வழிபாட்டுக்குரிய ஸ்தலமாக புனித நீக்கிலார் ஆலயம் அமைந்திருந்தது. கால ஓட்டத்தில் மக்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி பொறாமை காரணமாக வாலிபர் சங்கத்தார் தனியான ஒரு ஆலயத்தை அமைக்கும் கருத்தை முன் வைத்தனர். இக்கருத்துக்கு பெரியோர் மத்தியில் எதிர்ப்பு இருந்தாலும் ஆதரவும் இருந்தாக அறியவருகிறது. இந்த ஆதரவுடன் இளைஞர்கள் 1940 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி அன்னையின் விண்ணேற்பு தினத்தன்று கிராமத்தின் வடக்குப் பக்கமாக அமைந்திருந்த வயற்பரப்பில் சிறிய ஓலைக் கொட்டில் கோவிலை அமைத்தனர்.

சன்மார்க்க சங்க பணிமனையில் இருந்த பரலோக மாதா சொரூபத்தை அங்கு நிறுவினர். கொட்டில் கோவில் அமைக்கப்பட்ட 100 பரப்பு கொண்ட வயற்பரப்பானது மக்களின் உழைப்பில் பத்தில் ஒரு பகுதியாக பொதுத் தேவைக்கென பெரியோர்களால் சேகரிக்கப்பட்ட பணத்தில் இருந்து ஏற்கனவே வாங்கப்பட்டதாகும். இந்தக் கொட்டில் கோவிலும் அன்னை மரியின் புகழும் பரவத் தொடங்கிய நிலையில் அன்னையின் சொரூபத்திற்குப் பாதுகாப்பு போதாது என்ற காரணம் கொண்டு யாழ். ஆயரின் பணிப்பின்



பேரில் அன்னையின் சொருபம் ஆயர் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

### முதலாளிமார் சபையின் தோற்றம்

இந்த நிகழ்வினால் மனம் குழம்பிய பெரியோர்கள் தமது ஆலோசனை சபையைக் கூட்டினர். மாதா கோவிலை சேர்ந்த அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 பேர் கொண்ட குழுவை உருவாக்கி அதற்கு முதலாளிமார் சபை என பெயரிட்டனர். இவர்கள் இளைஞர்களுடன் கலந்துரையாடி கோவிலை அமைக்க வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். யாழ் ஆயரை சந்தித்து அவரின் அனுமதியைப் பெற்று கொட்டில் கோவில் அமைந்துள்ள மேற்படி காணியின் மேற்குப் பக்கம் காரைநகர் வீதியை அண்டி ஆறு கற்தூண்களை நாட்டி கூரை இட்டு சிறிய கோவில் ஒன்றை உருவாக்கினர். இதற்கு புனித நீக்கிலார் ஆலய பங்குத் தந்தையாக இருந்த நல்லையா சுவாமி என அழைக்கப்பட்ட சூசைதாசன் சுவாமியிடமும் ஆலோசனை பெற்றனர்.

### வில்லியம், இயேசுதாசன் அ.ம.தி அடிகளார் காலத்தில் அடிக்கல்

1942 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வில்லியம் மற்றும் யேசுதாசன் அ.ம.தி அடிகளாரால் ஆயத்தங்கள் செய்யப்பட்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி அப்போதைய யாழ் ஆயர் ஜே.ஏ.கியோமர் ஆண்டகையால் அடிக்கல் நடப்பட்டது. பின்னர் இங்கிருந்து அகற்றப்பட்ட அன்னையின் திருச்சொரூபம் புதிதாக அமைக்கப்பட்ட கோவிலில் கொண்டு வந்து வைக்கப்பட்டது. பெரிய ஆலயத்தை கட்டுவதோடு மக்களின் வழிபாட்டுக்கு சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு வந்த வேளை பிரான்ஸ் நாட்டு பற்றிமா பதியில் இருந்து பவனியாக கொண்டு வரப்பட்ட பற்றிமா அன்னையின் திருசொரூபம் இந்தச் சிறிய ஆலயத்திலும் சில மணிநேரம் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ஆலயக் கட்டுமானப் பணிகளில் மக்களின் தியாகப்பணி

கடற்றொழிலை முதன்மை தொழிலாகச் செய்யும் இவர்கள் தமது முழு உழைப்பின் பத்தில் ஒரு பகுதியை கோவிற் கட்டடப்பணிக்கு கொடுத்தனர். அத்தோடு வாரத்தில் ஒருநாள் தமது முழு உழைப்பு வருமானத்தையும் கொடுத்துள்ளனர். மேலும் தொழில் முடிந்து திரும்பியதும் கோவில் கட்டடப் பணியில் தங்களை ஈடுபடுத்தி ஊதியமற்ற தியாகப் பணியை மேற்கொண்டுள்ளனர். இந்த ஆலயத்தைக் கட்டி முடித்துள்ளனர். ஆலய அத்திவாரத்துக்கு இவர்கள் கடலின் அடியிலே அகழ்ந்தெடுத்த முருகைக் கற்களை கலத்தில் ஏற்றி வந்தனர். தீயிட்டு சூளை செய்து சுண்ணம்பாக்கினர். சீமெந்தும் மணலும் கலந்த கற்றாளை சாற்றில் பனை வெல்லம் கலந்த கரைசலில் கலவை சேர்த்து பலமாக அத்திவாரம் இட்டுள்ளனர். அத்திவாரத்தை மண் போட்டு நிரப்புவதற்கு ஆலயத்தின் வடக்குப் பக்கம் ஒரு குளம் வெட்டி அதில் மண் எடுத்துத் தலையால் சுமந்து வந்துள்ளனர். ஆண் பெண் இருபாலாரும்,சிறுவர் சிறுமியரும் வேறுபாடின்றி பணி செய்து 5அடி உயரமான ஆலய அத்திவாரத்தையும்,குருமனை அத்திவாரத்தையும் நிரப்பியுள்ளனர்.

### பவள விழாக்காணும் நாவாந்துறை பரலோக அன்னை

ஆலயத்தின் இன்றைய நிலை பரீஸ் நகரின் லூர்து அன்னையின் அழகான கெபியைப் பிரதிபலிக்கும் அமைப்புடன் ஓர் கலையழகு துலங்கும் மலைத்தொடர் போன்று அழகாக ஆலய தென் மேற்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ளது. நாவாந்துறை லூர்து அன்னை கெபி பல சிறப்புக்களைக் கொண்டது. மிகப் பெரிய தோற்ற அமைப்பு,இயற்கையான கெபியின் மலைச் சாயல்,பிரான்ஸ் நாட்டின் புனித லூர்து திருத்தலத்தின் பிரதிபலிப்பு, புனித லூர்து அன்னையின் திருக்காட்சி எழில் கொஞ்சும் தோற்றம், பெரிய புனித பரலோக அன்னை ஆலய வளாகம்,மாதாவின் காட்சி பெற்ற புனித பெர்னதேதத் கையேந்தி செபிக்கும் காட்சி,பரந்த மேடையைக் கொண்டுள்ள திறந்த வெளியமைப்பு என்பவற்றோடு பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் அன்னை காட்சி கொடுத்த போது பாதம்பட்ட குகையிலிருந்து ஆசியாவுக்கு முதலில் எடுத்துவரப்பட்ட கல் மாதாவின் பாதத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளமையே அவையாகும்.

> நாவாந்துறையில் போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க சமயம் பரவியதாகக் கூறப்படுகிறது. கடல் வழியாகக் கப்பல் மூலம் ஊர்காவற்துறைக்கு வருகை தந்த போர்த்துக்கேயர் யாழ். நகருக்கு வருவதற்கு நாவாய் என அழைக்கப்பட்ட சிறிய படகுகளை பயன்படுத்தியுள்ளனர். அவற்றை இந்தக்கடற்கரையில் கட்டிவிட்டு யாழ். நகரின் ஏனைய பகுதிகளுக்கு சென்று வந்துள்ளனர். இதனால் நாவாய்கள் கட்டப்பட்ட இடம் நாவாய்துறை என வழங்கியது. அது காலப்போக்கில் மருவி நாவாந்துறை என மாறியுள்ளதாக கூறப்படுகிறது.

யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி ஆலயக் கெபியை திறந்து வைத்தார். இந்தியாவின் தமிழ் நாட்டில் பல ஆலயங்களில் காணப்படுவதுபோல் நிரந்தரமான கொடித்தூண் கட்டடம் 65 அடி உயரம் கொண்டதாக சீமெந்தால் அமைக்கப்படுகிறது.

அதைச் சுற்றிவர திருச்சிலுவைப்பாதை நிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஆலயத்துக்கு வர்ணம் தீட்டப்படும் வேளை புதிதாக ஒலி,ஒளி அமைப்பும் சீரமைக்கப்படுவதோடு ஆலயத்தின் மேல் பகுதி பழுதுபார்க்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றிவர இருந்த 12 வெளிகளில் மரியன்னையின் வாழ்வின் மறைநிகழ்வுகள் கண்ணாடியில் பதிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பீடத்தின் முன் தெரியும் வகையில் ஆண்டவரின் இறுதி இராவுணவு நிகழ்வும் காட்சிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கதாகும்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைக்கப்பட்டது பீடத்தின் பின்பக்க சிம்மாசனமாகும். மரத்தால் ஆன சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட இந்தச்சிம்மாசனத்தின் இரு புறமும் அன்னை மரியா சூசையப்பர் திருச் சொரூபங்கள் நடுவே பல வருடங்களின் முன்பு ஜி.இ.மேரி யோசப் அடிகளார் காலத்தில் வைக்கப்பட்ட எட்டடி உயரமான திருச்சிலுவை காணப்படுகிறது. அதன் கீழ் சம்மனசுகளின் மத்தியில் அழகான நற்கருணைப் பேழை காட்சிதருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

### சென். மேரிஸ் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம்

சென். மேரிஸ் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமானது கடல் கடந்த நாடுகளில் வாழும் உறவுகளின் நிதி அமைப்புகளின் பங்களிப்பு ஊடாகவும்,தனி நபர்களின் அன்பளிப்புகளின் உந்துதலாலும் தன்னை வளர்த்துக் கொண்டுள்ளது. மைதான விளையாட்டு மற்றும் கடல் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி மாவட்ட மட்ட வெற்றிகளை பெற்றுக்கொண்டுள்ளனர். கால்பந்தாட்டத்தில் பல வெற்றிகளை தொடர்ந்தும் நிலைநாட்டி வருகின்றனர். யாழ். மாவட்டம் மட்டுமல்லாது மன்னார்,வவுனியா தலைநகர்,மலையகம்,கடல் கடந்த தேசம் எனக் கழகத்தின் கௌரவத்தைக் காப்பாற்றி வருகின்றனர்.

### ஆலயத்தின் கலைப்படைப்பு

புனித பரலோக மாதா ஆலய இறைமக்களின் பாரம்பரிய கலை வடிவங்களில் பெருங்காட்சி நாடகமான 'பாஸ்' என்று அழைக்கப்படுகின்ற இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியானது முதல் முறையாக 1978ஆம் ஆண்டு பங்குத்தந்தை ஆர்.எம்.ஜி. நேசநாயகம் அடிகளாரின் காலத்தில் 'பரபாஸ்' என்னும் பெயரில் நூற்றுக்கணக்கான கலைஞர்களின் பங்களிப்புடன் பிரமாண்டமாக மேடையேற்றப்பட்டது.

இரண்டாவது தடவையாக இருபத்தாறு ஆண்டுகளின் பின்பு 2004 ஆம் ஆண்டு பங்குத்தந்தை அருட்தந்தை அமரர் எம். எக்ஸ். கருணாரட்ணம் அடிகளாரின் தலைமையில் 'கல்வாரி கண்ட கடவுள்' என்னும் நிகழ்வு முந்நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட கலைஞர்களின் பங்களிப்பில் 175 அடி அகல மேடையில் அளிக்கை செய்யப்பட்டது.

மூன்றாவது தடவையாக பதின்மூன்று வருடங்களின் பின்பு 'இயேசுவின் பின்னால் பரபாஸ்' தொடர் சாதனையாக 2017 ஆம் ஆண்டு பங்குத்தந்தை சி.ஜேஅன்ரனிபாலா அடிகளாரின் காலத்தில் 235 அடி அளவுடைய அகண்ட மேடையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கலைஞர்களின் பங்களிப்பில் மிகப் பிரமாண்டமாக மேடையேறியது. இத்தகு சிறப்பினைக் கொண்டமைந்து பவள விழாக் காணும் நாவாந்துறை பரலோக அன்னை ஆலயம் மேலும் வளர்ச்சி காண வேண்டும். பல சாதனைகளை புரிய வேண்டும். இறை ஆசீர்வாதம் கிடைத்திட வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு விற்பனைக்கு உண்டு



இடம் - நவரத்னராசா வீதி,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

Bedrooms - 6, Hall - 3
Balcony - 1, Attach Bathroom - 2

தொடர்புகளுக்கு:
077 806 0850 (பிறேமானந்தி)
0041 787658822 ( பிறேமதாசன்)

# ரயில்கள் நேருக்கு நேர் மோதல் 40 பேர் சம்பவ இடத்தில் சாவு

## எகிப்தில் துயரம்

கெய்ரோ, ஒக. 13

எகிப்தின் அலெக்சான்திரியா நகரில் இரண்டு ரயில்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் 40 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர்.

ஒரு ரயில் தலைநகர் கெய்ரோவில் இருந்தும் மற்றைய ரயில் கோர்சித் என்ற நகரில் இருந்தும் வந்துள்ளன. முரணான தகவல் பரிமாற்றமே விபத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)




# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## துவாரகா சண்முகராஜகுருக்கள்



தோற்றம்
22.12.2000

மறைவு
13.08.2016



அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
கருணையின் வடிவமாய் பக்தியின் இருப்பிடமாய்
அனைவரையும் கவர்ந்த எங்கள் அன்பு துவாரகா !
எம்மை விட்டு சடுதியாகப் பிரிந்தது ஏனோ ?

பொறுக்காத காலனவன் உம் நல்லுள்ளம் கண்டு
பொறுக்கி எடுத்தானோ ? எம்மால் ஆறமுடியவில்லை
காணும் இடமெல்லாம் உமது புன்னகை பூத்தமுகம் தோன்ற
கலங்கி நிற்கின்றோம் கண்ணீர் சொரிய...

சின்ன வயதில் சிந்திக்க வைத்துவிட்டு
சிறகடித்துச் சென்றாயோ - துவாரகா !
சிரித்து சிரித்து மற்றவர்களை மகிழ வைத்துவிட்டு
எம் குடும்பத்தினரை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு சென்றாயோ
கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஓராண்டு சென்றுவிட்டதம்மா வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம் - அம்மா
எமன் உன்னில் பாசம் வைத்து அழைத்து விட்டான் - நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்

ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறவில்லை எம்துயரம்
எம் அருமை ஏக புத்திரி துவாரகா
நிஜத்தில் நீ எம்முடன் இன்றில்லை ஆனால் நினைவில்
தினமும் வாழ்கின்றாயம்மா ! கனிவான புன்னகையுடன்
இனிய முகம் காணத் துடிக்கின்றோமம்மா
ஆண்டொன்று ஆனதும் ஆறாத உமது பிரிவுடன் என்றும்
அழியா நினைவுகளுடன் அன்பின் பிரிவால் துயருறும்

குடும்பத்தினர்.
திக்கரை, களபூமி, காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

புதிதாக அமைக்கப்படவிருக்கும் கொமினிகேஷன் ஒன்றுக்கு பாவித்த கொமினிகேஷன் உபகரணங்கள் தேவை.

075 225 6381

## வாடகைக்குண்டு

ஸ்ரான்லி வீதி, 39,41, மேலும் கீழுமாக இரு கடைகள் வாடகைக்கு விடப்படும்.

076 699 0596, 077 017 2319, 021 222 8024

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2915 திகதி 12.08.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 12 37 39 71 M

போனஸ் இல. 74

திங்கட் கிழமை ஜக்பொட் 36, 271, 120/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 04 22 23 57

நீல டிக்கட்டுக்கள் 2017.08.14 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## தேவை

சிறிய குடும்பத்திற்கு உரும்பிராய், கோண்டாவில், திருநெல்வேலி பகுதிகளில் வீடு வாடகைக்கு விரும்பத்தக்கது. **தொடர்பு - 077 026 7619**

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. **தொடர்பு - 077 159 5826**

## தேவை

நியூ சபரி பொக்கே சென்ரருக்கு வேலையாள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்.

**தொடர்பு- 077 942 4011, 077 5217750**

## காணி விற்பனைக்கு

A9 வீதி மிருசுவிலில் 8, 4½, 20 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு - 076 655 7247**

## வாடகைக்கு

திருநெல்வேலிக்கு அண்மையில் புதிய மேல் மாடியிலுள்ள மாபிள் இடப்பட்ட அறைகள் நீண்டகால வாடகைக்குண்டு. மேலும் இணைந்த குளியலறைகளுடன் மாபிள் இடப்பட்ட புதிய வீடு சகல தளபாடங்களுடன் சுபகாரியங்களுக்கு, விடுமுறை. நாள். வாராந்த அடிப்படையில் வாடகைக்குண்டு.

077 301 3659, 077 254 3113

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 688

சீட்டிழுப்பு திகதி 12.08.2017 நீலம்

J 23 28 43 61

சுப்பர் ஜக்பொட் ரூ. 55, 679, 200/= வெல்லப்படவில்லை

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 40 44 51 62

ஊதா நிற டிக்கட்டுகள் 2017.08.14 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம், 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000 வெல்லமுடியும்.

தொ.பே - 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune — அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் 065

சீட்டிழுப்பு திகதி 12.08.2017 இளஞ்சிவப்பு

வெற்றி இலக்கங்கள்: 03 23 52 57

சுப்பர் இலக்கம்: 06

அதிர்ஷ்ட மாதம்: ஆனி

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 15, 351, 698/= | அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23, 69, 56/= | அடுத்த ஜக்பொட் ரூ. 21, 59, 126/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 02 08 36 48

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ 50,000ம் வெல்ல முடியும்.

2017.08.17 ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## EASY WAY யின்

### புதிய முறையிலான ஆங்கிலப்பயிற்சி

EASY WAY யின் ஆங்கில பாடப்புத்தகங்களைக்கற்று அதிலுள்ள பயிற்சிகளை செய்தவர்கள் சரளமாக ஆங்கிலத்திலும் பேசுவதை ஏற்கனவே எமது நேரடி வகுப்புகளில் நாம் நிரூபித்துள்ளோம்.

வகுப்புகளுக்கு வர நேரமற்ற தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள், வீட்டுப்பெண்கள், ஆசிரியர்கள், பல்கலை கழக மாணவர்கள் ஆங்கிலம்பேசவிரும்புவோர் இணையமுடியும்

பாடநெறிக்கட்டணம் : ரூபா 1000 மட்டுமே.
(14.08.2017 இற்குமுன் இணைவேருக்கு மட்டுமே! பின்னர் ரூ 3000.00)

90 பாடங்களையும், 90 வீடியோ பாடங்களையும் கற்று அதிலுள்ள பயிற்சிகளுக்கு பதில்களை எழுதி ஆகக் கூடியது 90 - 120 நாட்களுக்குள் ஒப்படைத்தல்வேண்டும.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இறுதிப்பரீட்சை நவம்பர் 12, 2017 அன்று இடம்பெறும்.

கட்டணத்தை வங்கி மற்றும் தபாலகங்கள் மூலம் செலுத்தமுடியும்.

EASY WAY 403, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். 021 320 3313, 077 1570 486

## SHANTHIHAM

Association for Health & Counselling

### சாந்திகம் உளவளத்துணை நிலையம்

### உளவளத்துணையாளர் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பணியாற்றுவதற்கு உளவளத்துணையாளர்கள் தேவை. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் பயிற்றுவிக்கப்பட்ட உளவளத்துணை சான்றிதழ் அத்தியாவசியம். பெண் விண்ணப்பதாரர்கள் வரவேற்கப்படுவர். தங்கள் சுயவிவரக் கோவையினை 20.08.2017 அல்லது அதற்கு முன்னராக கீழ்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சலினூடாக அனுப்பி வைக்கவும்.

**சாந்திகம்**
8, கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 3338
Email - shanthiham@yahoo.com. Facebook - @Shanthiham

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna

### கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்










விசாரணை 021- 2227712

MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 08 1952



மறைவு 12 08 2017

### சிவக்கொழுந்து திரவியநாதன் (நாதன். அம்மான்)

உடுப்பிட்டி, இலக்கடியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால். நெல்லியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட அம்மான் என்று அழைக்கப்படும் சிவக்கொழுந்து திரவியநாதன் (நாதன்) நேற்று (12.08.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்து - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தன் - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் அரியமலரின் பாசமிகு கணவரும் சுதன், சுபா, கண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ராணியின் அன்பு அண்ணனும் மோகனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நெல்லியோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ஆவரங்கால், கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியோடை. ஆவரங்கால், புத்தூர்.
தகவல்: குடும்பத்தினர். 077 953 3700, 077 483 0288

## விற்பனைக்கு

Foton கன்ரர் ரக வான் விற்பனைக்கு உண்டு. **தொடர்பு - 077 157 7424**

## VAN தேவை

மிற்சுபிசி L300 OR டொலிக்கா VAN தேவை. **தொடர்பு - 075 978 9223**

## விற்பனைக்கு

நகைக்கடை சோகேஸ் கவுண்டர் நல்ல நிலையில் யாழ். நகரில் விற்பனைக்குள்ளது.

**தொடர்பு- 077 613 8964**

## தேவை

1. பளைப் பிரதேசத்தில் காணி தேவை.
2. விற்பனை உதவியாளர் ஆண் தேவை.

**தொடர்பு- 075 978 9223**

## வீடு விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 1ஆம் கட்டையில் அமைதியான நல்ல சுற்றாடலில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு

தொடர்புகளுக்கு: 0778546124

## காணிகள் விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலை வீதியில் பழனியாண்டவர் கோயிலுக்கு அருகில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 05 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அருகில் வீடு கட்டுவதற்குரிய 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.

தொடர்புகளிற்கு.077 6069188

## வேலையாள் தேவை

எமது உணவகத்திற்கு கீழ்காணும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

உணவுபரிமாறுபவர் ஆண்/பெண்
சமையல் உதவியாளர் ஆண்/பெண்
றொட்டி/றைஸ தயாரிப்பாளர்
கீழ்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

அமுல் உணவகம்
452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0212216779

## எழுதுவினைஞர்கள் தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல்யமான நிறுவனமொன்றிற்கு இரவு வேளை (பி.ப. 4.00 மணி இரவு 12 மணி வரை) கடமைபுரியக்கூடியவர்கள் தேவை.



ஆர்வமுள்ளவர்கள் இன்றும் (13.08.2017) நாளையும் (14.08.2017) நேரில் சமுகம் தரவும்.

நேரம் காலை 9 -12 வரை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | | | 7 |
| | | | | | | | 9 | 3 |
| 9 | 5 | | | 1 | | | | 6 |
| | | 1 | 8 | | | | | |
| | 8 | | 7 | 2 | 6 | | 3 | |
| | | | | | 5 | 8 | | |
| 2 | | | | 6 | | | 4 | 9 |
| 3 | 4 | | | | | | | |
| 7 | | | 2 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 2 | 7 | 9 |
| 9 | 5 | 2 | 1 | 7 | 6 | 4 | 3 | 8 |
| 7 | 3 | 8 | 2 | 9 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 2 | 6 | 4 | 5 | 7 | 9 | 8 | 3 |
| 8 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 | 4 | 6 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 5 |
| 4 | 1 | 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 2 | 6 | 9 | 4 |
| 2 | 6 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





சீனாக்காரன் எப்பிடியெல்லாம் ஜோசிக்கிறான்



உலகத்தில உள்ள அத்தனை புத்திசாலிகளும் நம்ம ஊர்லதான் இருக்காங்க...

ஒருத்தன் அவன் அலுவலகத்தின் 12ஆவது மாடில நின்று வடை சாப்பிட்டுகிட்டு இருந்தான்.
அப்போ அவனை நோக்கி வேகமா வந்த ஒருத்தன், "பீட்டர், உன் பொண்ணு மேரி கார் ஓட்டிக்கிட்டு போகும்போது லொறி மோதி செத்து போய்ட்டா" என்று கத்தினான்.
விஷயத்தை கேள்விப்பட்டதும் என்ன செய்றதுன்னு புரியாம 12ஆவது மாடியில இருந்து கீழ குதிச்சிட்டான்.
பத்தாவது மாடிக்கு வரும்போதுதான் அவனுக்கு யோசனையே வந்துச்சி "நம்மகிட்ட கார் எதுவுமே இல்லையே..."
எட்டாவது மாடிய தாண்டும்போது தான் தோணுச்சி, "அடடா நமக்கு மகளே கிடையாதே...".
ஆறாவது மாடி கடக்கும்போதுதான் ஞாபகம் வந்துச்சி "நமக்கு இன்னும் கல்யாணமே ஆகலியே...'.
மூணாவது மாடிய நெருங்கியபோதுதான் தெளிவா புரிஞ்சுது,
"ஐயோ என் பேரு பீட்டரே இல்லையே...".
விதி கடைசியில விளையாடிடுச்சி.
'ஆஹா...வடை போச்சே...'



# ஓவியாவுக்கு குவிகின்றன ஒப்பந்தங்கள்

'பிக் பாஸ்' நிகழ்ச்சியின் மூலம், தமிழ் உலகில் பிரபலமாகியுள்ளவரான நடிகை ஓவியாவுக்கு ஏகப்பட்ட புதுப்பட ஒப்பந்தங்கள் வருகின்றன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மலையாளப் படங்களில் நடித்து வந்த ஓவியா 2010ஆம் ஆண்டு களவாணி படத்தில் கதாநாயகியாக நடித்து, தமிழ் திரையுலகுக்கு அறிமுகமானார். மன்மதன் அம்பு, முத்துக்கு முத்தாக, மெரினா, கலகலப்பு, மூடர் கூடம், யாமிருக்க பயமே உள்பட பல படங்களில் நடித்துள்ளார்.

சமீப காலமாக அவருக்கு பட வாய்ப்புகள் குறைந்து இருந்தது. மலையாள பட உலகமும் அவரை ஒதுக்கி வைத்தது. இதனாலேயே 100 நாள்கள் வெளி உலகத் தொடர்பு இல்லாமல் வீட்டுக்குள் முடங்கி இருக்கும் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் பங்கேற்றார். 'பிக் பாஸ்' நிகழ்ச்சியின் மூலம் ஏகப்பட்டவர்களின் அபிமானத்தை ஓவியா வென்றார். அவருக்கு திடீரென ரசிகர்கள் பட்டாளம் அதிகரித்தது. தற்போது ஏகப்பட்ட படங்களில் நடிப்பதற்கு ஓவியாவைத் தேடி வாய்ப்புக்கள் வருகின்றன என்றும் சுமார் 7 படங்களில் நடிப்பது தொடர்பில் பேச்சு நடத்தப்படுகிறது என [illegible] குறிப்பிட்டன.

(ம)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஷ்வரி கதிரமலைராசா



நாச்சிமார் கோவிலடி, வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஷ்வரி கதிரமலைராசா நேற்று (12.08.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலும்மயிலும் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரமலைராசாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கவேலாயுதம், கதிரவேலு, வெற்றிவேலு மற்றும் வடிவேலு, இரத்தினவேலு ஆகியோரின் சகோதரியும் ஜெயதாம்பிகை, ராஜேஸ்வரி (கனடா), கமலேஸ்வரி, ஜெயவாணி, கருணாதேவி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் மகேந்திரனின் தாயாரும் ரோகினிதேவியின் மாமியும் தருமிக்கா, விதுஷன், செந்தூரன், சகிரன், கிருசிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2017) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உ[illegible] சத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்[illegible]லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible], ஏழாலை. [illegible]
தகவல்: [illegible]
077 4672 340, 077 0366 388





**மேடம்:** செயல் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**இடபம்:** பெற்றோரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** பேச்சில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர்.

**கடகம்:** மற்றவர் விமர்சனத்தை பொருள்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**சிங்கம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் உருவாகலாம். நண்பரின் ஆலோசனை நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி:** கடந்த கால உழைப்புக்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**துலாம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். எதிரியால் உருவான கெடுசெயல் பலமிழக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்:** தேவையற்ற வீண்பேச்சுகளில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சராசரி அளவில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**தனுசு:** உங்களிடம் சிலர் எதிர்பார்ப்புடன் நெருங்குவர். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மகரம்:** உறவினர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். விரும்பிய உணவுகளை உண்டு மகிழ்வீர்கள்.

**கும்பம்:** குடும்பப் பிரச்சினையை மற்றவரிடம் பேச வேண்டாம். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம்.

**மீனம்:** ம[illegible]வலை அனைத்தும் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இலாபம் த[illegible]கரமாக இருக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 ஆவது...

என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பின் ஊடாக நாடாளுமன்றத் தேர்தல் முறைமை மாற்றப்படவுள்ளது. 60 சதவீதம்தொகுதிவாரிப்பிரதிநிதித்துவத்துக்கும், 40சதவீதம்விகிதாசாரப்பிரதிநிதித்துவத்துக்கும் இடம்கொடுக்கும் வகையில் கலப்பு முறையில் தேர்தல் நடத்த அனைத்துத் தரப்புக்களும் இணக்கம் கண்டுள்ளன. உள்ளூராட்சித் தேர்தலிலும் அதே முறைமையைப் பயன்படுத்த கட்சிகள் சம்மதித்துள்ளன.

மாகாணசபைக்கு என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது. புதிய அரசமைப்புக் கொண்டு வரப்பட்ட பின்னர் அதனை ஆராயலாம் என்று முன்னர் அந்த விடயம் தள்ளிப்போடப்பட்டது. ஆனால் சில மாகாணசபைகளின் பதவிக் காலம் அடுத்த மாதம் முடிவடைவதால், மாகாணசபைத் தேர்தலையும் கலப்பு முறையில் நடத்துவதற்கு கட்சிகள் இணங்கின.

மாகாணசபைத் தேர்தலை கலப்பு முறையில் நடத்துவதற்கு மாகாணசபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்வதற்குக் குறிப்பிட்ட கால அவகாசம் தேவை. அதற்காகச் சபைகளின் காலங்களை நீடிப்பதாக இருந்தால் அது பற்றி கலந்துபேசி ஆராய்ந்து செயலாம்.

ஆனால், வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள திருத்த வரையில் தேர்தல் முறைமை மாற்றம் பற்றியோ, மாகாண சபைத் திருத்தச் சட்டம் பற்றியோ எதுவும் குறிப்பிடப்படாமல், தேர்தலை பிற்போடுவதையும், மாகாணசபை ஆட்சி கலைக்கப்பட்டால் அதன் அதிகாரம் கொழும்பு அரசுக்கு கைமாற்றப்படுவதை பற்றியும் மாத்திரமே கூறப்பட்டுள்ளது. கட்சிகள் இணங்கிக் கொண்ட விடயங்கள் இதில் இல்லை. எனவே நாம் இந்த வடிவத்தில் இந்தத் திருத்தத்தை ஆதரிக்க முடியாது - என்றார்.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியனவும் இந்தத் திருத்தத்தை எதிர்த்துள்ளன. (உ-5)

## சு.கவின்...

தெரிவித்துள்ளதாவது:

உரிய வேளையில் சப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதே சாலச்சிறந்தது. அதை அவசர அவசரமாக புதுத் தேர்தல் முறைமையை அறிமுகம் செய்து நடத்த முடியாது. உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் நாம் இப்போது ஏற்றுக்கொண்டுள்ள புதிய கலப்பு தேர்தல் முறைமை ஒருமுறை பரீட்சித்துப் பார்க்க வேண்டும். உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் புதிய முறைமையின் கீழ் முதலில் நடத்தப்படவேண்டும். அதையடுத்து அதில் உள்ள நடைமுறை சிக்கல்களைக் கணக்கில் எடுத்து. உருவாக்கப்படும் புதிய மாகாண சபை தேர்தல் சட்டத்தின் கீழ் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். அதை இப்போது செய்ய முடியாது.

இப்போது நடத்தப்படவுள்ள சப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய மாகாண சபைகளின் தேர்தல்கள், பழைய விகிதாசார முறைமையின் கீழேயே நடத்தப்படவேண்டும். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பொது செயலாளர் மகிந்த அமரவீரவுடன் பேசியிருந்தேன். எதிர்வரும் அமைச்சரவை கூட்டத்தில் இந்த பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவித்தார் என்றுள்ளது. (உ-5)

## பதவி...

குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடந்தது. அதில் தனது இந்த முடிவைத் தான் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்தார் என்பதை அமைச்சர் டெனீஸ்வரன் 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார்.

'ரெலோ'வின் மையக் குழுக் கூட்டத்தில் மூன்று விடயங்கள் ஆராயப்பட்டன. 20ஆம் திருத்த சட்டவரைவு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல், வடக்கு மாகாண அமைச்சரவை என்பன தொடர்பிலேயே கலந்துரையாடப்பட்டன.

கட்சியால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைவாகவே தான் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார் என்று அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்திட்டமை தொடர்பில் கட்சி விளக்கம் கோரியதற்கு ஏன் பதிலளிக்கவில்லை என்று நேற்றைய கூட்டத்தில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. நேரடியாக விளக்கமளிக்க வேண்டும் என்பதாலேயே பதில் வழங்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் கட்டுப்பாட்டை தான் மீறவில்லை என்றும், ஓர் உறுப்பினராக தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவே அவ்வாறு செயற்பட்டார் என்றும் டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இரு அமைச்சர்களைப் பதவி விலகுமாறு கோரிய முதலமைச்சர், ஏனைய இரு அமைச்சர்கள் மீதான விசாரணைக்கு கட்டாய விடுப்புக் கழதம் கேட்டார், முதலமைச்சரின் முறைதவறிய செயற்பாட்டுக்கு எதிராகவே நான் அவ்வாறு செய்தேன் என்றும் தெளிவுபடுத்தினார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டு இரு தினங்களின் பின்னரே கட்சி தனது முடிவை அறிவித்திருந்தது என்பதால் அதன் கட்டுப்பாட்டை மீறியதாக எப்படிக் கூற முடியும் என்றும் கேள்வி எழுப்பினார்.

மேலும், "என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று, ஜூன் மாதம் 13 ஆம் திகதியே (நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டதற்கு முதல் நாள்) முதலமைச்சருக்கு, கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாகாணசபை உறுப்பினர் மயூரன் ஊடாகக் கடிதம் கொடுத்துள்ளார். இதனைவிட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்து வைத்தமைக்காக விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்ட அதேநேரத்தில், முதலமைச்சரிடம் விந்தன் கனகரத்தினத்தை அமைச்சராக நியமிக்க கடிதம் அனுப்பியுள்ளீர்கள். கட்சி முன்முடிவுடன் செயற்பட்டது தெளிவாகின்றது" என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன் பின்பு கட்சிச் செயலாளர் ந.சிறிகாந்தா, "முதலமைச்சரும் நான்கு கட்சித் தலைவர்களும்கூடி அமைச்சரவையை மாற்ற முடிவு செய்துள்ளோம். அமைச்சர் ப.சத்தியலிங்கமும் பதவி விலகியுள்ளார். நீங்களும் பதவி விலகுங்கள்" என்று வலியுறுத்தினார்.

அதற்கு அமைச்சர் டெனீஸ்வரன், "நான் எடுத்த முடிவில் மாற்றமில்லை. பதவி விலக மாட்டேன். முதலமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றது, கட்சிக்கு அதிகாரம் இருக்கின்றது. வேண்டுமானால் நீக்குங்கள். நான் விலகமாட்டேன். நான் ஊழல் செய்யவில்லை. ஏனையோர் விலகியதற்காக நான் விலக வேண்டிய தேவையில்லை" என்றார் ஆணித்தரமாக.

"நீங்கள் ஊழல் செய்யவில்லை என்பதைக் கட்சி நூறு வீதம் நம்புகின்றது. நீங்கள் பதவி விலகாவிட்டால் பிரச்சினையாகிவிடும். பதவி விலகினால் கட்சியும், முதலமைச்சரும் இணைந்து நீங்கள் பதவி விலகியதற்கு ஊழல் காரணமில்லை என்று அறிக்கை விடுவோம். பதவி விலகினால், உங்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையை கைவிடுவது பற்றியும் ஆராயலாம்" என்று கட்சிச் செயலாளர் மற்றும் தலைவர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். எனினும் தனது முடிவில் மாற்றமில்லை, தான் பதவி விலக மாட்டேன் என்று அமைச்சர் டெனீஸ்வரன் கூறினார்.

இருந்தாலும் "உங்கள் முடிவை நாளை (இன்று) அறிவியுங்கள்" என்று கட்சிச் செயலாளர் அவரிடம் கூறியுள்ளார். (உ-5-101)

## 12 கிலோ...

அதிகாலை கைது செய்தனர்.

போதைப் பொருள் விவகாரங்களைக் கையாளும் கொழும்பிலுள்ள குறித்த பொலிஸ் பிரிவினருக்குக் கஞ்சா கடத்தல் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது. அதனைக் கைப்பற்ற சிறப்புப் பொலிஸ் குழு ஒன்று கொழும்பிலிருந்து பளைக்கு வந்து நிலைகொண்டுள்ளது. இயக்கச்சி புளியடிச் சந்தியில் நேற்று அதிகாலை 2.30 அளவில் மோட்டார் சைக்கிள் ஒன்று பயணித்தது. மறைந்திருந்த பொலிஸார் அதனைத் திடீரென மறித்துச் சோதனையிட்டனர். அவரிடமிருந்து 12 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் ஆழியவளையிலிருந்து இயக்கச்சிக்கு கஞ்சா கடத்தியமை ஆரம்ப விசாரணையில் தெரியவந்திருக்கிறது. கைதானவர் ஆழியவளையைச் சேர்ந்தவர். அவரது மோட்டார் சைக்கிள் பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது. அவர் கிளிநொச்சி பதில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைத்து மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ-46)

## கடற்படை...

முக்கிழமை அறிவித்தனர். இதனடிப்படையில் முன்னாள் தளபதி விரைவில் கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கடத்தல்கள் தொடர்பாக, கொமடோர் உதய கீர்த்தி, கொமடோர் தசநாயக்க, லெப். கொமாண்டர் ரணசிங்க, முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் குருகே மற்றும் அப்போது கடற்படையின் உயர் அதிகாரிகளாக இருந்த பலரும் அறிந்திருந்தனர் என்றும் குற்றப் புலனாய்வுப்பிரிவினர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தினர்.

கைது செய்யப்பட்ட கடற்படையினரிடமிருந்து இந்தச் சம்பவத்திற்கும் அட்மிரல் கரன்னகொட வுக்கும் உள்ள தொடர்பு குறித்த தகவல்களை அறிந்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். (உ-5)

## எஸ்.ரி.எவ்...

வந்த இனந்தெரியாத கும்பலொன்றே இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் நேற்று மாலை பெரும் பதற்றம் நிலவியது.

"சம்பவத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் ஆயுததாரிகளில் இருவர் படுகாயமடைந்தனர். அந்தக் கும்பலைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (வ)

## ஈபிடிபி...

அவரது உயிருக்கும் அவரது மகளின் உயிருக்கும் ஆபத்து ஏற் பட்டுவிடுமோ என்ற அச்சத்தால் யாழ்ப்பாண இசை நிகழ்ச்சி கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டதாக ஏற்பாளர்கள் தெரிவித்தனர்.

ஐந்து வருடங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாணம் வந்திருந்தார் உன்னி கிருஸ்ணன். அப்போது மேடையில் வைத்து அவருக்கு மதிப்பளித்தார் அன்று அமைச்சராக இருந்த டக்ளஸ்தேவானந்தா. நாடுதிரும்பிய உன்னி கிருஸ்ணன், டக்ளஸ் போன்ற ஒருவரால் தனக்கு மதிப்பளிக்கப்பட்டமைக்காக வருந்துகிறார் என்று தெரிவித்தார் என ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

இந்தப் பின்னணியில், உன்னிக் கிருஸ்ணனின் இசை நிகழ்ச்சி யாழ். நகரப் பகுதியில் நேற்றிரவு நடைபெற ஏற்பாடாகி இருந்த நிலையில் முதல்நாள் இரவோடு இரவாக அவருக்கு எதிரான சுவரொட்டிகள் நகரில் ஒட்டப்பட்டிருந்தன. யாழ்ப்பாணக் குடா நாட்டின் பல பகுதிகளிலும், 'யாழ் மக்கள்' என்ற அடையாளத்துடன் அநாமதேயச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

"எங்கள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மீது அவதூறு சுமத்தும் பொய்யான குற்றச் சாட்டைக் கூறிய உன்னி எங்கள் மண்ணில் இன்னிசை பாட முடியாது. பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதையடுத்து அச்சத்தின் காரணமாக இசை நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது. யாழ்ப்பாண இசை நிகழ்ச்சியில் பங்கேற்றால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று உன்னிகிருஸ்ணன் அச்சமடைந்த காரணத்தால் இசை நிகழ்வை இரத்துச் செய்யக் கோரியதாக, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யாழ். நகரின் மையத்தில் மணிக்கூட்டு கோபுர வீதி மற்றும் ஸ்ரான்லி வீதி ஆகிய சந்திக்கும் இடத்தில் உள்ள வெற்றுக் காணியில் பாடகர் உன்னிகிருஸ்ணனும் அவரது மகள் உத்தராவினதும் திரைப் பாடல்கள் இசை நிகழ்ச்சி நடப்பதாக இருந்தது. இந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டாலும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடக்கின்றன. (உ-5-8)

## மக்களுக்கு...

மைத்துவ உதவியாளர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் வழங்குமாறு வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. மாகாண அமைச்சரவையின் பரிந்துரைப்படியே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்களில் வழங்கப்பட்டுள்ள ஆளணித் தொகுதியைக் கருத்தில் கொண்டும் மக்களுக்கு வழங்க வேண்டிய சேவையின் அவசியத் தன்மையைக் கருத்திற் கொண்டும், முதலமைச்சர், அவைத் தலைவர், அமைச்சர்கள் ஆகியோருக்கான தனி ஆளணித் தொகுதியில் 2 முகாமைத்துவ உதவியாளர்களையும், ஓர் அலுவலகப் பணியாளரையும் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் பணிக்கு அமர்த்த அனுமதிக்குமாறு அமைச்சரவை பரிந்துரைத்துள்ளது.

ஏற்கனவே, முதலமைச்சருக்கு தனிப்பட்ட செயலாளர், ஊடகச்செயலாளர், பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர், தனிப்பட்ட உதவியாளர் பதவிகளுக்கு தலா ஒருவரும், இணைப்புச் செயலாளர், சாரதி, அலுவலகப் பணியாளர் பதவிகளுக்கு தலா இருவரும், முகாமைத்துவ உதவியாளர்களாக 5 பேரும் எனமொத்தம் 15 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர்களுக்கு தனிப்பட்ட செயலாளர், இணைப்புச் செயலாளர், பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர், தனிப்பட்ட உதவியாளர் பதவிகளுக்கு தலா ஒருவரும், முகாமைத்துவ உதவியாளர், சாரதி, அலுவலகப் பணியாளர் பதவிகளுக்கு தலா இருவரும் என 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவைத் தலைவருக்கு, தனிப்பட்ட செயலாளர், இணைப்புச் செயலாளர், பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர், தனிப்பட்ட உதவியாளர், பதவிகளுக்குத் தலா ஒருவரும், முகாமைத்துவ உதவியாளர், சாரதி, அலுவலகப் பணியாளர், பதவிகளுக்குத் தலா இருவரும் என 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாகவே இரண்டு முகாமைத்துவ உதவியாளர்களையும், அலுவலகப் பணியாளரையும் நியமிக்கக் கோரியுள்ளனர். (உ-5)

## விஜயதாசவுக்கு...

"விஜயதாச என் ஊர்க்காரர். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் ஆதரிக்க மாட்டேன்" என்றார் மகிந்த.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான முடிவை விமர்சித்து, அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறியமை, நீதி அமைச்சின் கீழ் உள்ள சட்ட மா அதிபர் திணைக்களம் ராஜபக்சக்களுக்கு எதிரான நீதிமன்ற விசாரணைகளை இழுத்தடிக்கின்றமை, ரவி கருணாநாயக்க விடயத்தில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூத்த சட்டவாளர் நடந்து கொண்ட முறை, இலங்கைக்கு வந்து மேற்கொண்ட ஐ.நா. அதிகாரியை விமர்சித்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் விஜேதாச ராஜபக்ச மீது அவரது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே முன்வைக்கப்பட்டுள்ளது.

இவற்றினடிப்படையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முடிவு செய்துள்ளனர். இந்தப் பின்னணியிலேயே அவருக்குத் தனது முழு ஆதரவையும் தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார் மகிந்த.

இதற்கிடையே ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் பீடம் நாளை கூடிகிறது. இதில் விஜயதாச ராஜபக்ச விவகாரமும் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

## மைத்திரியின்...

தமது யோசனையை முன்வைக்காததால் அது தாமதமடைகின்றது.

இந்தச் சிக்கலை அடுத்தே இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிடுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கூட்டமைப்புக் கேட்கவுள்ளது.

(உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்திவேல் அணி அரையிறுதியில்



யாழ்ப்பாணம், ஒக. 13
வடமராட்சி கிழக்கு பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் சக்திவேல் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
பாரதியின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகமும் தாளையடி சென். அன்ரனஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 2:0 என்ற கோல் கணக்கில் சக்திவேல் அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக. 13

**மகாலிங்கம் ஞாபகார்த்த ரி-20 தொடர்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக ரி-20 தொடரை நடத்தி வருகிறது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி ச.ச.நி. தாச்சித் தொடர்**

நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும். இணைந்து யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இருபாலை விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கரப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தத் திட்டமிட்ட 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**பிரண்ட்ஸ் கழகத்தின் துடுப்பாட்டம்**

வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 9ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ரி-20 துடுப்பாட் டத் தொடரின் ஆட்டங்கள் சில, குறித்த கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இதில் காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரார் பைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனி பைட் விளையாட்டுக் கழக'பி' அணியை எதிர்த்து செவ்வானம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




# விண்மீன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக. 13
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய சூரியகுமாரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கபடித் தொடரில், பலாலி விண்மீன் அணி சம்பியனானது.
ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் கபடித் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 41:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பலாலி விண்மீன். பலாலி விண்மீன் அணியின் சாந்தன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம-23-108-422)

## ஐக்கியம் – றோயல் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஒக. 13
அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அமரர்களான யோகநாதன் பாக்கியலட்சுமி ஞாபகார்த்தமாக 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றோயல் விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது. ஐக்கியத்தின் மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)

# செபஸ்ரியன் அணி அரையிறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், ஒக. 13
வடமராட்சி கிழக்கு பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் சென். செபஸ்ரி யன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
பாரதியின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கட்டைக்காடு சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழகமும் திருநகர் விளையாட்டுக் கழமும் மோதின. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது செபஸ்ரியன் அணி. (ம-108)



நாடுகடந்த தமிமீழ அமைப்பின் ஏற்பாட்டில், லண் [illegible] தில் தமிழர் விளையாட்டு விழா அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. (ம)

# வில்லியர்ஸுக்கு ஆதரவாகக் குளுஸ்னர்

தென்னாபிரிக்க அணியின் அனுபவ வீரராக உள்ள வில்லியர்ஸ்'க்கு குறைந்தது இன்றும் மூன்று ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கை எஞ்சியுள்ளது என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் சகலதுறை வீரர் குளுஸ்னர்.
தென்னாபிரிக்க ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே இந்தக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார். "ஒருவரை ஓய்வு பெறுமாறு கூறுவது எளிது. ஆனால் அவரது இடத்தைப் பூர்த்தி செய்யப்போவது யார் என்பதையும் பார்க்க வேண்டுமல்லவா. வில்லியர்ஸின் இடத்துக்கு வருபவர் அவரை விடச் சிறப்பாக விளையாடி ஆடிவிட முடியுமா? வில்லி யர்ஸ் ஏன் விலகவேண்டும். அவருக்கு கிரிக்கெட் வாழ்க்கை இன்னும் எஞ்சியுள்ளது" என குளுஸ்னர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாலய பலத்தில் இந்தியா

இலங்கைக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும் மூன்றாவதும், இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தில் இமாலயப் பலம்பெறுவதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியது இந்திய அணி.

பல்லேகலவில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெறும் அணிக்கு இந்த ஆடுகளத்தில் கூடுதல் சாதகம். கடந்த இரு ஆட்டங்களைக் போன்று இந்த ஆட்டத்தில் இந்திய அணிக்குச்



சாதகமாகவே நாணயச் சுழற்சியும் அமைந்தது.

ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் லோகேஸ் ராகுல். ஆணி அடித்து விட்டதைப் போன்று இருவரும் நீண்டு நிலைபெற்றனர். இலங்கையின் பந்துவீச்சுப் பலமான கேரத் விளையாட வில்லை. எனின் நிலைமையைக் கேட்கவும் வேண்டுமா. வெள்ளை ஜெர்சியில் ஒருநாள் ஆட்டத்தைக் கண்முன் காட்டினார் தவான். லோகேஸ் ராகுலும் விடுவதாயில்லை. இந்திய அணிக்கு விரைந்து கிடைத்தது 100 ஓட்டங்கள். சதம் கடந்தார் தவான். அணி 188 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 85 ஓட்டங்களுடன் புஸ்பகுமாரவின் பந்துவீச்சில் ராகுல் ஆட்டமிழந்தார்.

தவானை 119 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் புஸ்பகுமார. புஜாராவால் முடிந்தது வெறும் 8 ஓட்டங்கள். கோக்லி சிறிது நிதானித்தார். அவர் 42 ஓட்டங்களுடன் சன்டகனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ரகானே, அஸ்வின் இருவரும் முறையே 17, 31 ஓட்டங்களைப் பெற முதல்நாள் முடிவில் இந்திய அணி 6 இலக்குகளை இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சகா 13 ஓட்டங்களுடனும், பாண்டியா ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். இவர்களுக்கு அடுத்த படியாக குல்தீப் யாதவ் உள்ளார். இவரும் ஓரளவு துடுப்பெடுத்தாடக் கூடியவர். (ம)



## இலங்கை கால்பந்தாட்ட அணியில் மத்தியின் வீரர்கள் இருவருக்கு இடம்

யாழ்ப்பாணம், ஓக. 13

ஈரானின் சிராஸ் நகரில் எதிர்வரும் செப்டம்பர் 8ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 18 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கை அணியில்தமிழ்வீரர்கள்இருவர்இடம்பிடித்துள்ளனர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆர். ரெம்சன், எஸ்.சயந்தன் ஆகியோரே அவ்வாறு இடம் பிடித்த வீரர்களாவர்.

(ம-23)

## தர்ஜினியின் அபார ஆட்டத்தால் சிற்றி வெஸ்ட் பல்கன்ஸ் இறுதிக்குத் தகுதியானது



இலங்கையின் முன்னணி வலைப்பந்து வீராங்கனையும் தமிழ் வீராங்கனையுமான சிவலிங்கம் தர்ஜினி ஒப்பந்தமாகி விளையாடி வரும் ஆஸ்திரேலியக் கழகமான சிற்றி வெஸ்ட் பல்கன்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. தர்ஜினியின் சிறப்பாக பெறுபேற்றாலேயே அந்த அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சிற்றி வெஸ்ட் பல்கன்ஸ் அணியை எதிர்த்து ஏ.சி.யு. ரெயின்ஸ் அணி மோதியது. இதில் 59:52 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிற்றி வெஸ்ட் பல்கன்ஸ் அணி கிண்ணம் வென்றது. சிற்றி வெஸ்ட் பல்கன்ஸ் பெற்ற 59 புள்ளிகளில் தர்ஜினி மட்டும் 51 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

(ம)

# நெய்மருக்காக ஒளிர்ந்த ஈபிள்




பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியில் நெய்மர் இணைந்ததை அடுத்து பிரான்ஸின் தலைநகர் பரிஸில் உள்ள ஈபிள் கோபுரம் தனித்துவமான வகையில் ஒளியூட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டது. ஒரு கால்பந்தாட்ட வீரரின் வருகைக்காக உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம் அலங்கரிக்கப்படுவது இதுவே முதல்முறை.

பார்சிலோனா அணியில் விளையாடி வந்த நட்சத்திர வீரரான நெய்மர், இலங்கை மதிப்பில் சுமார் 4 ஆயிரம் கோடி ரூபாவுக்கு பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். நெய்மரின் இந்த ஒப்பந்தத்தை அடுத்து பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியின் ரசிகர்கள் அவருக்கு பெரும் வரவேற்பு கொடுத்து வருகின்றனர். நெய்மரின் பெயரும், இலக்கமும் பொறிக்கப்பட்ட 10ஆயிரம்ஜெர்சிகள்நெய்மர்பார்சிலோனா ஒப்பந்தம் நடைபெற்ற முதல் நாளிலேயே விற்றுத் தீர்ந்தன. பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியின் கால்பந்தாட்ட பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக நடைபெற்றது. இதில் நெய்மர் கலந்துகொண்டார். இதையடுத்து உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம்நெய்மரின்வருகையை அடுத்து மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோபுரத்தின் அடிப்பகுதியில் நெய்மரை வரவேற்கிறோம் என்பது போன்று பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. பரிஸ்செயின்ட் ஜேர்மன் அணிக்குச்சொந்தமான மைதானத்தில் நெய்மரை வரவேற்க சில நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

(ம)

## இலங்கை அணியில் மகாஜனவின் வீரன்

யாழ்ப்பாணம், ஓக. 13



தெற்காசிய நாடுகளின் 15 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான தொடர் நேபாளத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை அணியில் மகாஜனக் கல்லூரி வீரர் ரவிக்குமார் தனுஜன் இடம்பெற்றுள்ளார்.

(ம-23)

## இந்திய அணியை தெரிவு செய்வதில் குழப்ப நிலைகள்

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியைத் தெரிவு செய்வதில் இந்திய அணியின் தெரிவுக் குழு மிகப்பெரும் குழப்பநிலையை எதிர்கொள்ளும் என்று தெரியவருகிறது. இந்திய அணியைப் பொறுத்தவரையில் டெஸ்ட், ரி-20, ஒருநாள் இந்த மூன்று வகையிலுமான ஆட்டங்களுக்கு வெவ்வேறு வீரர்கள் என்ற திட்டமெல்லாம் கிடையாது. இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் வீரர்களில் புஜராவைத் தவிர ஏனைய வீரர்கள் அத்தனைபேரும் ஒருநாள் மற்றும் ரி-20ஆட்டங்களில் விளையாடுபவர்கள். ஆனால் ஒருநாள் மற்றும் ரி-20 அணியில் டோனி மற்றும் யுவராஜ் இருவரும் முக்கியமான வீரர்களாக உள்ளனர். இதனால் இவர்களை அணிக்குள் கொண்டு வர யாரை நிறுத்துவது என்ற சிக்கல் எழுந்துள்ளது. வழக்கம்போல் சகாவை நிறுத்திவிட்டு டோனியையும், புஜாராவை நிறுத்திவிட்டு யுவராஜையும் கொண்டு வந்தாலும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாம் எவ்வாறு அமையும் என்பதில் தொடர் குழப்பநிலை நிச்சயம் இருக்கும். அதிலும் குறிப்பாக ஆரம்ப வீரர்கள் மட்டில் கடும்போட்டி இருக்கும். தவான், லோகேஸ் ராகுல் இருவரும் சிறந்த திறனில் உள்ளனர். ரோகித் சர்மா உடல் தகுதி பெற்றுள்ளார். ரகானேயும் சிறந்த திறனில் உள்ளார்.

தற்போதுமாட்டுப்பட்டிருப்பதுஎன்னமோ கோக்லிதான். தெரிவுக்குழு 15 அல்லது 16 வீரர்கள் கொண்டதாக அணியை அறிவித்துவிடும். ஆனால் அவர்களில் நான்கு அல்லது ஐந்து வீரர்களை நிறுத்துவதற்கு கோக்லிதான் படாதபாடு படப் போகிறார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாள்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல புடைவை நிறுவனத்திற்கு விற்பனைப்பிரதிநிதிகள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 077 0748 999
021 222 5571

**கணக்குப் பதிவாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கி வரும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு கணக்குப் பதிவாளர் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 905 8252
077 074 8999 021 226 2941

**பெயர் மாற்ற அறிவித்தல்**

பொன்னகர் வடக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட இராமசாமி - செபஸ்தியம்மா ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் உள்ள எனது பெயரை 2017.08.12 தொடக்கம் இராமசாமி மகேஸ்வரி என்ற பெயரையே என் சார்ந்த சகல ஆவணங் களிலும் பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
இராமசாமி மகேஸ்வரி

# லோகேஸ் ராகுல் உலக சாதனை

டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக 7 அரைச் சதங்களைப் பதிவுசெய்து உலக சாதனையைப் படைத்தார் இந்திய



அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லோகேஸ் ராகுல். இலங்கைக்கு எதிராக நேற்று ஆரம்பமான டெஸ்ட் ஆட்டத்தில் லோகேஸ் 67 பந்துகளில் அரைச் சதம் கடந்தார். இதன் மூலமே இந்தச் சாதனைக்கு அவர் சொந்தக்காரராக மாறியுள்ளார். இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ராவிட் 6 அரைச்சதங்கள் அடித்தமையே இதற்கு முன்னர் உலக சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

4 ஆம் 5 ஆம் தர 2018 புலமைப்பரிசில் மாணவர்களுக்கும்,
06,07,08 ஆம் தர மாணவர்களுக்கும்
**சிங்களம்**

தமிழ் பாடசாலையில் பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியராக சேவை செய்த அனுபவமுள்ள நான் யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்தை அண்மித்த பிரதேசங்களில் இயங்கிவரும் கல்வி நிறுவனங்களில் சேவை செய்வதற்கு விரும்புகின்றேன்.
சனி, ஞாயிறு தினங்களில் நேரம் ஒதுக்க முடியுமானால் நடத்துநர்கள் தொடர்பு கொள்ளவும்.

M.N.RAZEEM - 077 283 8382

**VEGILAND Exporters (Pvt) Ltd.**

"Total Trusted Quality"



மரக்கறி ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் வெயிலண்ட் நிறுவனமானது யாழ் உரும்பி ராய் பகுதியில் தனது புதியகிளையினை ஆரம்பித்துள்ளது. இந்நிறுவனம் ஏற்றுமதி தரத்திலான மரக்கறிகளை கொள்வனவு செய்து வருகின்றது.

இந்நிறுவனத்தினால் பின்வரும் மரக்கறிகள் கொள்வனவு செய்யப்படுகிறது.



பாகல் கத்தரி, புடோல், பயற்றை, கீரை, வாழைக்குலை போன்ற மரக்கறிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும்.

பாகல் கத்தரி, புடோல், பயற்றை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தரப்படும்.



ஏற்றுமதித் தரத்தினாலான மரக்கறி உற்பத்தியில் ஈடுபடவிரும்பும் 10 பரப்பிலும் அதிகமான நிலத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

மாதிரிவிதைகள், தொழில்நுட்ப ஆலோசனைகள், சிறந்தவிவசாய செய்முறை சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகள், மற்றும் நிச்சயமானசந்தை வாய்ப்புக்கள் வழுங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு: பலாலிவீதி, உரும்பிராய்.

TP: 0212243686, 0773405974

**வாழ்த்துகின்றோம்**



**செல்வத்துரை திருமாறன்** (பிரபு)

(இராஜேஸ்வரி மண்டபம்
கோண்டாவில், தெல்லிப்பழை – உரிமையாளர்)

**2017 ஆகஸ்ட் 3 ஆம் திகதி
அகில இலங்கை சமாதான நீதிவான்**

பதவியை பெற்றமையை எண்ணி உவகையடைவதுடன்.....

ஏற்றங்கள் பல பெற்று - இன்னும் ஏணிப்படிகள் பல வேறி
சேவைகள் பல உயர்வு பெற்று - மக்களுக்கும் சேவைகள்
- பல செய்து
பாராட்டுக்கள் பலவும் பெற்று பார்புகழ வாழ்ந்திடுவீர்
ஆரோக்கியமான வாழ்வோடும் அன்பான
- குடும்பத்தோடும்
நெடுங்காலம் நீங்கள் வாழ - எம் நல் வாழ்த்துக்கள்

**செல்வ மஹால்,
திவ்ய மஹால், செல்வாபலஸ்
நிறுவனத்தினர்.**

**திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்**

# இந்தியன் செலக்ஷன்

**விசேட தள்ளுபடி**

**15% - 50%**



அனைத்து விதமான பட்டுச்சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் அனைத்துவிதமான ஆடைத் தெரிவுகளுக்கும்

காலம் 15.08.2017 முதல் 23.08.2017 வரை

இடம் வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**மரண அறிவித்தல்**



தோற்றம் 28 . 08 . 1941

மறைவு 05 . 08 . 2017

**கந்தையா துரைராஜா**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ராசாமாளிகை, பிரம்படிலேன் கொக்குவிலைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைராஜா 05.08.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கச்சிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், வசந்தி (இத்தாலி), மாலா (இலங்கை), காலஞ்சென்றவர்களான ஜீவகுமார், தேவகுமார், மற்றும் கிசோக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராஜா (இத்தாலி), M.S.தீன் (இலங்கை), குமுதினி (நோர்வே), சாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமனும், வாசுகி, காண்டீபன் (பிரான்ஸ்), பர்ஹானா, ரஜீத், பர்வீன், அன்வர் (இத்தாலி), பஸ்னா, நல்னா, பாஸ், சுல்தீஹான், ஸஹானா (நோர்வே), ரிஷாந், டிலானி, (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்த மயானத்துக்கு முற்பகல் 11.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராசாமாளிகை
பிரம்படி லேன், கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்.

076 445 8387 / 021 492 5038

**வேலையாள் தேவை**

ரியூசன் சென்ரருக்கு யாழ்ப்பாணத்தில்
T.P. 077 293 5265

**German, Netherland, Swiss, Ostria** நாடுகளுக்கான மொழிவகுப்புக்கள்

Embassy யில் A1 Certificate க்கு ஏற்றுவாறு தமிழ்மொழி பெயர்ப்புடன்
தொடர்பு:
10 Palaly Road, Jaffna.
T.P : 077 160 4823

**V2 TRAVELS**

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு



(VISA EXTENSION)
யாழ்ப்பாணத்திலேயே இப்பொழுது செய்து கொடுக்கப்படும்.
0768227499

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.